Approved by the Text-Book Committee, Madras.
Vide Page 543 of the Fort St. George Gazette Part I B. Dated 1-11-1927.

GEOGRAPHY

LOCAL HISTORY & CIVICS

OF THE

SOUTH ARCOT DISTRICT.

தென் ஆற்காடு ஜில்லா

பூகோள சாஸ்திரம்

ஜில்லா சரித்திரமும், சிவிக்ஸும் சேர்ந்தது.

BY

N. R. SUBRAMANIA SARMA,

Tamil Pandit, High School, Pasumalai.

E. M. GOPALAKRISHNA KONE,

MADURA.

1933. Price 5 As.

Excelsior Power Press, Madura.

நான்காம் வகுப்புப்

பூகோள சாஸ்திரம்

(ஜில்லா சரித்திரமும், சிவிக்ஸும் சேர்ந்தது.)

தென் ஆற்காடு ஜில்லா.

சட்டப்படி வேண்டியவைகள், பல சித்திரப்படங்களுடன்
நன்கு விளக்கப்பெற்றுள்ளன.

பசுமலை, உயர்தர கலாசாலை ஆசிரியர்
நெ. ரா. சுப்பிரமணிய சர்மா
எழுதியது.

துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புஸ்தக வியாபாரம்,
மதுரை.

காபி ரைட்] 1933. [விலை அணா 5.

THIRD EDITION.
EXCELSIOR POWER PRESS
MADURA.





நமது இந்திய சக்கரவர்த்தியாகிய

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்

வாழ்த்துப் பாட்டு.

'வீடலால' என்ற தேவார மெட்டு.

சக்ரவர்த்தி ஆகும் ஐந்தாம் ஜார்ஜ் மன்னன் வாழ்கவே
மிக்ககீர்த்தி பெற்ற ராணி மேரி என்றும் வாழ்கவே. (1)

மக்கள் சுற்றம் ஆதியோர்கள் மன்னிமேலும் வாழ்கவே
திக்கனைத்தும் போற்றும்இந்த்யதேசமென்றும்வாழ்கவே()

கப்பமீயும் அரசர் தாமும் கனமிகுந்து வாழ்கவே
ஒப்பில்லாத ஆங்கிலேயர் ஓங்கி ஓங்கி வாழ்கவே. (3)

கல்வியோங்க நிதியம்தந்த கருணை வள்ளல் வாழ்கவே
செல்.ராயஎழாம்எட்வர்ட்செல்வன்என்றும் வாழ்கவே (4)

அருக்கன் அஸ்தமனமில்லாத அவனிநாதன் வாழ்கவே
உருக்கமாகநம்மையாளும்உளத்தன்ஜார்ஜுவாழ்கவே (5)

முகவுரை.

இந்தச் சிறுபுத்தகம்தற்போது நான்காவதுவகுப்பிற் பயிலும் மாணுக்கர்கள் கற்கும்படி வித்தியாதிகாரிகளால் ஏற்படுத்தப்பட்ட விதிகளை அனுசரித்துப்புதிதாகஎழுதப் பட்டுள்ளது. பூகோள சம்பந்தமான பொதுவிஷயமும், ஜில்லா சம்பந்தமான எல்லா விஷயங்களும் சுருக்கமும் பெருக்கமும் இல்லாமல், ஏற்றபடி இலகுவான நடையில் எழுதப்பட்டுள்ளன. சீதோஷ்ணஸ்திதி ஜில்லாப்படத்தில் விளக்கப்பட்டிருத்தலின், பொது விபரத்தில் சொல்லப் படவில்லை. ஜில்லா பூகோள சம்பந்தமான விஷயங்களை அறிவதுடன், ஜில்லாவிலுள்ள ஊர்கள் சம்பந்தப்பட்ட சரித்திரங்களையும், கதைகளையும் ஜில்லா சரித்திரத்தையும் இதில் தெளிவாக விளக்கியிருக்கிறேன். இப்படிப்பட்ட விஷயங்கள் மாணுக்கர்களுக்கு அவசியமென்பது சொல் லாமலே விளங்கும்.

இதில், ஸ்கேலின்படி படம் எழுதும் விதத்தை உதாரணத்துடன் நன்ருய் விளக்கி இருக்கிறேன். அதை விளக்குகையில், உபாத்தியாயர் பிள்ளைகளுக்கு ஸ்கேல் முதலியவற்றைக் கொடுத்து, இப்புத்தகத்திற் காட்டிய படியே பிளான் எழுதும் முறையைக் கற்பிக்கவேண்டும். தெரிந்த விஷயத்தைக்கொண்டு தெரியாத விஷயங்களைக் கற்பித்திலே முறையாதலால், பள்ளிக்கூடம். கிராமம்

இவைகள் சம்பந்தமான விஷயங்களைக்கற்பித்தபின்னரே, உபாத்தியாயர் ஜில்லாவைப்பற்றிக் கற்பிக்கவேண்டும். பூகோள சம்பந்தமான பாகங்களை விளக்குகையில், உபாத்தியாயர் பிள்ளைகளுடன் வெளிப்பக்கங்களில் போய் அங்குள்ள விஷயங்களைக் கவனிக்கச் செய்யவேண்டும்.

திசைகள், பூமி, படம் இவற்றின் திசைகளையறிதற்குரியபடம், எட்டுத்திசைகள், நக்ஷத்திரங்களும் திசைகளும், காம்பஸ், சித்திரம், நிலப்படம், பள்ளிக்கூட நிலப்படம். ஜில்லாப்படம் முதலிய உபயோகமான பல படங்களைச் சேர்த்து இப்பதிப்பை வெளியிடுகிறேன்.

இப்புத்தகத்தின் முன்னேற்றத்திற்குரிய விஷயங்கள், வந்தனத்துடன் அங்கீகரிக்கப்பெறும்.

பசுமலை
1—6—27 }   நெ. ரா. சுப்பிரமணிய சர்மா.

பொருளடக்கம்.


விஷயம். பக்கம்

பொது விவரம்.

48-1

தென் ஆற்காடு ஜில்லா.

தாலூகாக்களும், முக்கிய பட்டணங்களும்.




[பக்கம் 69, 70 பார்க்க.]


நான்காம் வகுப்புப் பூகோள சாஸ்திரம்

நான்கு திசைகள்.

நமக்குக் கைகள் எத்தனை? அவற்றில் எந்தக் கை எழுத உபயோகப்படுகிறது? எந்தக் கை உணவை எடுத்துச் சாப்பிட உதவுகிறது? எந்தக்கை பெரியோர்களிடமிருந்து ஏதேனும் ஒரு பொருளை வாங்குகிறது? வலது கை அல்லவா? இன்னொரு கையை நாம் எந்தக் கை என்கிறோம்? இடது கை என்கிறோம். உங்கள் பக்கத்திலிருக்கும் பையன் யார்? பொருள்கள் எவை? என்று கேட்டால் என்ன சொல்லுவீர்கள்? உங்களுக்கு வலது கைப் பக்கம் அல்லது இடதுகைப் பக்கம் இருக்கிறது என்பீர்கள். உங்கள் வலப்பக்கம் இருக்கும் பையன் யார்? இடப்பக்கம் இருக்கும் பையன் யார்? உங்களுக்கு முன்பக்கமும் பின் பக்கமும் எவை உள்ளன? நாம் இப்போது அறிந்த வலப்பக்கம், இடப்பக்கம், முன்பக்கம், பின்பக்கம் என்பன எக்காலத்தும் ஒரேநிலை பெற்றனவாய் இல்லை. அது எப்படி என்று பார்ப்போம். உங்களில் இருவர் ஒரே வரிசையில் நின்றால், ஒருவனுடைய வலப்பக்கம் மற்றவனுக்கு இடப்பக்கம் அல்லவா? அப்படியே ஒருவனுடைய இடப்பக்கம் மற்றவனுக்கு வலப்பக்கம் ஆகிறது. எனவே வலப்பக்கமும் இடப்பக்கமும், நிற்கும் நிலைமைக்கு ஏற்றபடி மாறுகின்றன. இவ்விதம் நிலைமைக்கு ஏற்றவாறு மாறுபடாமல், எல்லாருக்கும் ஒரேமாதிரியான பக்கங்கள் உண்டு. அவற்றுக்குத்தான் திசைகள் என்று பெயர்.

திசைகள்.






பூமியின் திசைகளை அறிதல்.

அதிகாலையில் நீங்கள் எழுந்திருந்தால், வரவர இருட்டுக் குறைந்து, வெளிச்சம் வரக் காண்பீர்கள். இவ் வெளிச்சத்திற்குக் காரணம் என்ன? சூரியன் உதிப்பதே.

எந்தத் திசையில் சூரியன் உதிக்கிறதோ, அந்தத் திசை தான் கிழக்கு. சூரியன் உயர ஏறி வரவர வெளிச்சம் அதிகரிப்பதைநீங்கள் காண்கிறீர்கள். நடுமத்தியானம் 12 மணிக்குச் சூரியன் எவ்விடத்தில் காணப்படுகிறது பாருங்கள். மாலை வேளையில் நீங்கள் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்புகையில் வரவர வெளிச்சம் குறைந்து இருட்டு மூடுவதையும் பார்ப்பீர்கள். அந்த மாலை வேளையில் சூரியன் அஸ்தமிக்கும் திசையே மேற்கு. சூரியன் உதித்திருக்கையில் நீங்கள் சூரியனை நோக்கி நிற்கும் பொழுது உங்கள் வலது கைப்பக்கம் இருக்கும் திசை தெற்கு. இடது கைப்பக்கம் இருக்கும் திசையே வடக்கு ஆகும். இத்திசைகள் எவர்க்கும் மாறுபடாமல் நிலையாய் இருக்கின்றன அன்றோ?




படத்தில் திசைகளை அறிதல்.

பூமியின் திசைகளை அறியும் வகையை நீங்கள் தெரிந்து கொண்டீர்கள். ஆனால் படத்தில் திசைகளை அறிவது எப்படி? உங்கள் பள்ளிக்கூடத்தில் ஒரு பூகோளப் படம் சுவரில் தொங்கவிட்டிருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். அதற்கு எதிரே நீங்கள் நின்றால், உங்கள் தலைப் பக்கம் அதாவது படத்தின் தலைப்பக்கம் வடக்கு. அடிப் பக்கம் தெற்கு, உங்கள் வலதுகைப் பக்கம் கிழக்கு, இடதுகைப் பக்கம் மேற்கு என்று தெரிந்துகொள்ளுங்கள். எந்தப் பூகோளப் படத்திலும் திசைகள் இந்தமுறைப்படியே மாறாமல் குறிக்கப்பட்டிருக்கின்றன. இந்த விஷயத்தை மேலே காட்டிய படத்திற் பாருங்கள்.

எட்டுத் திசைகள்.

இதுவரையில் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என்ற நான்கு திசைகளைப்பற்றி அறிந்தீர்கள். இவற்றைத் தவிர உபதிசைகள் அல்லது கோணதிசைகள் என்றுவேறு திசைகளும் உள்ளன. அவற்றைப்பற்றி இங்கேசொல்வோம்



காலையில் நாம் சூரியனைப் பார்த்து நின்றால், கிழக்குத் திசையைப் பார்க்கிறோம். இந்தத்திசைக்கும் நமது வலதுகை குறிக்கும் தெற்குத் திசைக்கும்சமமத்தியில்உள்ளஉபதிசைக்குத் தென்கிழக்கு என்று பெயர். தெற்குக்கும்மேற்குக்கும் நடுவிலுள்ளது தென்மேற்கு. மேற்குக்கும் வடக்குக்கும் மத்தியிலுள்ளது. வடமேற்கு வடக்குக்கும் கிழக்குக்கும் மத்தியிலுள்ளது வடகிழக்கு எனப்படும், எனவே இப்போது நாம் அறிந்த உபதிசைகள் நான்கும், முன்பு அறிந்த திசைகள் நான்கும் சேர்ந்து எட்டுத்திசைகள் ஆகின்றன. இந்தத் திசைகளன்றிப் பூமிக்கு மேல், கீழ் என்ற இரண்டு திசைகளும் உண்டு.

அப்பியாசம்:—வடக்கிலிருந்து ஆரம்பித்து உபதிசைகளை விடாமல் வரிசையாகச் சொல்லு. வடகிழக்கு நேர் எதிராக உள்ள திசையின் பெயர் என்ன?

நக்ஷத்திரங்களும், திசைகளும்.

பகலில் சூரியனை வைத்துத் திசைகளை அறிகிறோம். சூரியன் இரவில் தெரிவதில்லை. அப்போது ஏதேனும்

ஒரு புது இடத்திற்குச் சென்றால் அங்குத் திசைகளை எப்படி அறிவது? அதற்கு ஒரு உபாயம் உண்டு.


இரவில் வானத்தைப் பார்த்தால், பல நக்ஷத்திரங்கள் மின்னிக்கொண் டிருப்பதைக் காணலாம். அவை பகலில் நமது கண்ணுக்குப் புலப்படா. ஏனெனில் சூரிய வெளிச்சத்தில் ஒரு விளக்கை வைத்தால் அது மங்கிக் காணப்படுகிறதுபோல, அதிகமான சூரிய வெளிச்சத்தில் நக்ஷத்திரங்களின் ஒளி மங்கி விடுகின்றன. இரவில் சூரிய வெளிச்சம் இல்லாததால் அவை நன்கு தெரிகின்றன.

இரவில் ஒரு மைதானத்திற் சென்று ஆகாயத்தில் எல்லாப் பாகத்திலும் நன்கு கவனித்துப் பாருங்கள். ஒரு திசையில் இப்படத்தில் காட்டி யிருப்பது போல், ஒரு நக்ஷத்திரக் கூட்டம் காணப்படும். அக்கூட்டத்தில் ஒரு நக்ஷத்திரம் பெரிது. அதன் சமீபத்தில் வேறு நக்ஷத்திரங்கள் படத்திற் காட்டியபடி உண்டு. அந்தப் பெரிய நக்ஷத்திரத்துக்குத் துருவநக்ஷத்திரம் என்று பெயர். இந்த நக்ஷத்திரம் எப்போதும் மாறாமல் வட திசையிலேயே காணப்படும். ஆகவே இந்தத் துருவ நக்ஷத்திரம் காணப்படும் திசை வடக்கு. இதை அறிந்தால் மற்ற திசைகளை இலகுவாய் அறியலாம். நாம் துருவ நக்ஷத்திரத்தை நோக்கி நின்றால் நமது பின்புறம் உள்ள திசை எது? வலப்பக்கம் உள்ள திசை எது? இடப்பக்கம் உள்ள திசை எது?




திசை அறி கருவி. (Compass)

இது வரையில் நாம் திசைகளை இரவிலும் பகலிலும் அறியும் விதத்தைத் தெரிந்து கொண்டோம். இந்த மாதிரி சில சமயங்களில் கண்டு பிடிக்க முடியாது. ஒரு சமயத்தில் பகலில் சூரியனையும், இரவில் நக்ஷத்திரங்களையும் இருண்ட மேகம் நன்றாய் மறைத்துவிடும். அப்போது நாம் திசைகளை அறிவது எப்படி?



எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் திசை அறிவதற்கு ஒரு இயந்திரம் இருக்கிறது. காந்த ஊசி என்று ஒரு வஸ்து உண்டு. அது இரும்பை இழுக்கக் கூடியது. அதன் ஒரு நுனியில் ஓர் அடையாளம் இடப்பட்டிருக்கும். இந்த ஊசியின் நடுவில் ஒரு கயிற்றைக் கட்டித் தொங்கவிட்டால் அடையாள முள்ள நுனி எப்போதும் வடதிசையையே காட்டி நிற்கும். அதை நாம் எப்படி அசைத்துவிட்டாலும், அது ஆடி ஆடித் திரும்பி அதன் அடையாளமுள்ள நுனி, வட திசையை நோக்கியே நிற்கும். வட திசையை நாம் அறிந்தால் பிறதிசைகளை அறிதல் சுலபம். காந்த ஊசியின் ஒரு நுனி வடக்கே நோக்கி இருக்குமென்பதைக் கண்டீர்கள். இந்தக் குணமுள்ள ஊசியால் நமக்குப் பல நன்மைகள் உண்டு. அதை வைத்துச் செய்யப்பட்ட ஒரு கருவியால் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் நாம் திசைகளைச் சுலபமாய் அறிந்துகொள்ளலாம்.



கைக்காம்பஸ் என்பது ஒரு கைக் கடியாரம்போல் இருக்கும். அதன் உருவத்தைப் பக்கத்தி லுள்ள படத்திற்பாருங்கள். கெடிகாரம் காலம் காட்டும். காம்பஸ் திசைகளைக் காட்டும். கைக்கெடிகாரத்தில் நேரம் காட்டும் கருவிக்கு முள் என்று பெயர். காம்பஸில் திசைகாட்டும் கருவிக்கு ஊசி என்று பெயர்.

காம்பஸின் பாகங்கள்.

1. பெட்டி—இதற்குள்ளே தான் காந்தஊசிகெட்டுப் போகாமல் வைக்கப்பட்டிருக்கிறது.

2, கண்ணுடி அல்லது மூடி—கெடிகாரத்தில் மணி பார்க்கும் பாகத்தையும் முள்ளையும் கண்ணுடி மூடியிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதைப் போலவே காம்பஸின் ஊசியைக் கண்ணுடியானது மூடியிருக்கும். காந்த ஊசியும் அது காட்டும் திசையும் தூசி அடைந்து போகாமல் அல்லது வேறு விதமாகக் கெட்டுப்போகாமல் கண்ணுடி பாதுகாக்கிறது.

3. காந்தஊசி—இதுவே திசைகளைக் காட்டுகிறது.


4. விசிறிமுளை—அக்கருவியின் மத்தியில் இருக்கும். இதன் மேலேதான் காந்த ஊசி நிற்கிறது.

4. பெட்டியின் அடி—ஊசியின்கீழுள்ளஇவ்வட்டையில் முக்கியமான நாலு திக்குகளும் 4. உப திக்குகளும் வரையப்பட்டிருக்கின்றன.

சித்திரம், நிலப்படம். (பிளான்).

நீங்கள் பல சித்திரங்களை உங்கள் புஸ்தகத்தில்பார்த்திருக்கிறீர்கள். உதாரணமாக, மனிதர்கள், மிருகங்கள், மரங்கள், வீடுகள், பாத்திரங்கள் முதலியவற்றைப் பார்த்திருப்பீர்கள். ஒருரூபாவையும்பார்த்திருக்கிறீர்கள். அதன்

உருவப்படம் அல்லது சித்திரம் இப்பக்கத்திலுள்ள படத்தில் இருக்கிறது. அதில் என்ன என்ன பார்க்கிறீர்கள்? நமது சக்கரவர்த்தி உருவமும் சில எழுத்துக்களும் உள்ளன. இனி ஒரு ரூபாவை எடுத்துத் தரைமேல் வைத்து அதைச் சுற்றிக் குச்சியால்கோடு வரையுங்கள்.





இப்போது ரூபாவைச் சுற்றி வரைந்த வட்டம் ரூபாவின் சித்திர மன்று. சித்திரம் என்றால் அதில் முன்போல் உருவமும் எழுத்துக்களும் இருக்க வேண்டும். அவை நீங்கள் எழுதிய படத்தில் இல்லை. ரூபாவைச் சுற்றித் தரையில் வரைந்த படம் ரூபாவின் தரைப்படம் அல்லது நிலப்படம் அல்லது பிளான் என்றுசொல்லப்படும்.

உங்கள் புஸ்தகத்தைக் கற்பலகையின் மேல் வைத்து அப் புஸ்தகத்தின் ஒரு ஓரத்தைஒட்டி ஒரு கோடு வரையுங்கள். அது அப் புஸ்தகத்தின் ஒருபக்கத்து அளவைக் காட்டுகிறது. அந்தக் கோட்டின்தொடர்ச்சியாய்ப்புஸ்தகத்தை ஒட்டியே இன்னொரு பக்கத்திற் கோடு போடுங்கள்.



அதேமாதிரி மற்ற இரண்டு பக்கங்களிலும் வரையுங்கள். இனிப் புஸ்தகத்தை எடுத்துவிட்டால் கற்பலகையில் வரைந்த நான்கு கோடுகளும் ஒரு உருவத்தைக் காட்டுகின்றன. அவ்வுருவத்துக்குப் புஸ்தகத்தின் பிளான் அல்லது தரைப்படம் என்று பெயர்.

ஸ்கேல் விபரம்.

தரைப்படம் அல்லது பிளானில், ஒருவஸ்துவின்நீள மும் அகலமும் தான் தெரியும். முன்னெழுதிய புஸ்தகத் தின் பிளான், புஸ்தக அளவுஉள்ளபடியேநீங்கள். எழுதிய பிளான். உங்கள் கற்பலகையைவிடப் பெரிய வஸ்துவின் பிளானை உள்ளபடியே உங்கள் கற்பலகையில் எழுத முடியுமா? முடியாது. அதற்கு என்ன செய்வீர்கள்.

எந்தப் பொருளின் பிளானை நீங்கள் வரைய விரும்பு கிறீர்களோ, அதன் நீளத்தையும் அகலத்தையும் சம மாகக் குறைத்து உங்கள் கறுப்புப் பலகையிலாவது, பெரிய காகிதத்திலாவது வரைந்து விடலாம்.

ஒரு வஸ்துவின் நீளத்தை நீங்கள் எவ்வாறு கண்டு பிடிப்பீர்கள்? அதை அளந்து பார்த்தால் தெரியும் அல் லவா? எதனுல் அளப்பது? கையாலும் பாதத்தாலும் அளந்து சொல்லலாம். ஆனுல் எல்லாருடைய கைகளின் அளவும் பாதங்களின் அளவும் ஒத்து இராது. எப்போ தும் ஒரே அளவை வித்தியாசம் இல்லாமல் காட்ட அளவு கோல்கள் ஏற்பட்டிருக்கின்றன. உங்களில் ஒவ்வொரு வரும் ஒரு அளவுகோல் வைத்திருக்கிறீர்கள் அல்லவா? அது ஒரு அடி என்ற அளவைக் காட்டும் குச்சி. அதை அடிக்குச்சி என்று சொல்லுகிறீர்கள். இந்தக் குச்சியால் எந்த வஸ்துவின்நீளத்தையும் அகலத்தையும் அளக்கலாம்.

முதலில் ஒரு துணியை எடுத்துக்கொண்டு அது எத் தனை குச்சி நீளம், எத்தனை குச்சி அகலம் என்று அளந்து பார்த்துச் சொல்லுங்கள்.

இப்போது அடிக்குச்சியை எடுத்துக் கவனியுங்கள். ஒரு அடி என்பது 12 அங்குலம் என்று உங்களுக்குத்தெரியும். நீங்கள் எடுத்துக்கொண்ட அடிக்குச்சியை12 பாகங்களாகப் பிரித்துக் காட்டியிருக்கிறதை அதிற்பாருங்கள். நீங்கள் இப்பொழுது. எந்தப்பெரியபொருளை அளக்கவிரும்புகிறீர்களோ, அதன் நீளம் அகலம் அடிக்கணக்கில் இருப்பதைக் குறைத்து முதலில் அங்குலக் கணக்காக மாற்றிக்கொள்ளலாம்.


உதாரணமாக, ஒரு அறையின் நீளத்தையும் அகலத்தையும் அளந்துசொல்லுங்கால், 36 அடி நீளமும் 20 அடி அகலமும் இருக்கிறதாக வைத்துக் கொள்ளுங்கள். இந்த நீளமும் அகலமும் உள்ள பிளானை, அந்த அறையின் அளவின்படி உங்கள் கற்பலகையில் வரையமுடியுமா? முடியாது. இனி அறையின் பிளானை வரைய வேண்டுமானல் உங்கள் அடிக்குச்சியின் ஒவ்வொரு அடியையும் ஒரு அங்குலமாகப் பாவித்து முதலில் கறுப்புப் பலகையில் (**Black Board**) பிளானை எழுதுங்கள். அப்போது அறையின் நீளமாகிய 36 அடி 36 அங்குலமாகவும், அகலமாகிய 20 அடி 20 அங்குலமாகவும், கறுப்புப் பலகையில் எழுதிய பிளானில் அமையும்.

இனி உங்களுடைய கற்பலகையிலும் அறையின் பிளானை வரையலாம். எப்படியெனில், அறையின் ஒவ்வொரு அடியும் $\frac{1}{4}$ அங்குலமாகப் பாவித்து எழுதுங்கள். இப்போது அறையின் நீளமாகிய 36 அடியானது 9 அங்குலமாகவும் அகலமாகிய 20 அடியானது5 அங்குலமாகவும் கற்பலகையில் அமையும்.

அப்படியே 10 அடியை ஒரு அங்குலமாகவும், 100 அடியை ஒரு அங்குலமாகவும் வைத்துப் பிளான் எழுதலாம். இவ்வாறே சிறிய உருவத்தைப் பெரிய அளவிலும் எழுதலாம். இப்படி எழுதுவதற்குத் தான் 'ஸ்கேலின்படி தரைப்படம் எழுதல் என்று பெயர்.

இப்படியே ஒரு பள்ளிக்கூடத்தின் தரைப்படத்தையும் வரையலாம். முதலாவது காம்பவுண்டுச் சுவர்களை நாம் வரையவேண்டும்; அவற்றின் நீளமும் அகலமும் நமக்கு முதலில் தெரியவேண்டுமல்லவா? அளந்து பார்த்தால் தென்வடல் நீளம் 200 அடி, கிழமேல் அகலம் 140 அடி இருக்கின்றன என்று வைத்துக்கொள்வோம். 40 அடிக்கு ஒரு அங்குலம் ஸ்கேல் வைத்தால் நீளமாகிய 200 அடி 5 அங்குலமாகப் பிளானில் அமையும். அப்படியே அகலமாகிய 140 அடி $3\frac{1}{2}$ அங்குலத்தில் அமையும். 5 அங்குலம் தென்வடல் நீளமும், $3\frac{1}{2}$ அங்குலம் கிழமேல் அகலமும் உள்ள ஒரு நீண்ட சதுரம் எழுதுக. இப்படி எழுதும்போது பள்ளிக்கூடத்தின் வடபக்கம் பிளானில் தலைப்பக்கத்திலும், தென்பக்கம் பிளானில் அடிப்பக்கத்திலும் அமைய வேண்டும். காம்பவுண்டின் தெற்குச் சுவரில் 20 அடி அகலமுள்ள ஒரு வாசல் மத்தியில் இருப்பதாகவைத்துக்கொள்வோம். அந்த வாசலைக் குறிக்க ஸ்கேல்படி அரை அங்குலக் கோட்டை மத்தியில் அழித்துவிடுங்கள். காம்பவுண்டுச் சுவரின் கனத்தைக் குறிக்கு முன் எழுதின கோட்டைச் சுற்றி மற்றொரு கோடு வரையுங்கள். கனத்தையும் ஸ்கேலின்படி வரையவேண்டும்.

இனி வகுப்பறைகளின் பிளானை வரைவோம். முதலில் காம்பவுண்டின் வடக்குச்சுவருக்கும்பள்ளிக்கூடத்துக்கும் எவ்வளவு தூரம் இருக்கிறதென்று அளக்கவேண்டும்.


வடக்கு
140 அடி
கக்கூஸ்
விளையாடும் இடம்
120 அடி
3
4
2
120 அடி
மே
கி
200 அடி
5
60 அடி
1
30 அடி
தோட்டம்
தோட்டம்
20'
தெற்கு

ஸ்கேல்: 1" = 40'

அப்படி அளந்ததில் 40 அடி இருக்கிறது. பள்ளிக்கூட வடக்குச் சுவரின் நீளம் 120 அடி. அப்படியாயின், பள்ளிக்கூட வடக்குச் சுவரிலிருந்து ஒரு அங்குலத்திற்குத் தெற்கே, 3 அங்குல நீளமுள்ள ஒருகோட்டைக்கிழமேலாக வரையவேண்டும். இப்போது பள்ளிக்கூடத்தின் வடக்குச் சுவர் எழுதிவிட்டோம். இனிக் கிழக்கு மேற்குச் சுவர்களை அளக்கவேண்டும். அவை ஒவ்வொன்றும் 120 அடி நீளமுள்ளது. முன்வரைந்த கோட்டின் ஒரு நுனியிலிருந்து தெற்காக 3 அங்குலக் கோடு ஒன்று வரையுங்கள். இது போலவே மற்ற கோட்டிலிருந்து மற்றொரு 3 அங்குலக் கோடு வரையுங்கள். இப்போது பள்ளிக்கூடத்துக் கிழக்கு வடக்கு மேற்குச் சுவர்களை வரைந்தோம். இனிமேல் ஒவ்வொரு அறையின் நீளமும் அகலமும் தெரியவேண்டும். அளந்ததில் ஒவ்வொரு அறையும் 60 அடி நீளமும் 30 அடி அகலமும் உள்ளது. முதலில் பள்ளிக்கூடத்தின் கிழக்குச் சுவருக்கு மேற்குப்பக்கத்தில் $\frac{3}{4}$ அங்குல நீளத்தில் மேலேயிருந்து ஒரு கோடு போடுங்கள். அதுபோலவே மேற்குச் சுவருக்குக் கிழக்குப்பக்கத்தில் ஸ்கேல்படி $\frac{3}{4}$ அங்குல அகலத்தில் 3 அங்குல நீளத்தில் ஒரு சமதூரக் கோடு வரையுங்கள். இனிமேல் தெற்குச் சுவரைக் காட்டக் கிழக்கு நுனியையும் அதன் அடுத்த கோட்டின் நுனியையும் சேருங்கள். அது போலவே மேற்குப் பக்கத்திலுள்ள கோட்டின் நுனியையும் அதற்குக் கிழக்கே $\frac{3}{4}$ அங்குல சமதூரத்தில்வரைந்த கோட்டின் நுனியையும் சேருங்கள்.

ஒவ்வொரு அறையின் நீளமும், அகலமும் முன்னமே நமக்குத் தெரியும். முன் வரைந்த ஸ்கேல்படி 3 அங்குல நீளமுள்ள கிழக்குக் கோட்டின் மத்தியிலிருந்து அடுத்த சமதூரக் கோட்டின் மத்திக்கு ஒரு கோடு குறுக்கே எழு

துங்கள். அதே மாதிரி மேற்குப் பக்கத்திலுள்ள கோட்டின் நடுவிலிருந்து அதையடுத்த கோட்டுக்குக் குறுக்கே ஒரு கோடு வரையுங்கள். இப்போது கிழக்குப் பக்கத்தில் இரண்டு அறைகளும் மேற்குப் பக்கத்தில் இரண்டு அறைகளும் வரைந்தோம். இனி வடக்குப் பக்கத்து அறையைக் காட்ட வடக்குச் சுவரிலிருந்து $\frac{3}{4}$ அங்குல அகலத்திலும் $1\frac{1}{2}$ அங்குல நீளத்திலும் கிழக்கு மேற்காக இருக்கும் அறைகளைக் குறிக்கும் சுவர் வரையில் ஒரு கோடு போடுங்கள். இப்போது பள்ளிக்கூடத்தின் 5 அறைகளையும் எழுதிவிட்டோம்.

சுவர்களின் கனத்தைக் காட்ட முன் வரைந்த எல்லாக் கோடுகளையும் ஒட்டிச் சமதூரக் கோடுகள் வரையுங்கள். சுவரின் கனத்தை அளந்து ஸ்கேல்படி எழுதவேண்டும். கதவுகள் இருக்கும் இடத்தையும் அதன் அகலத்தையும் குறிக்க அந்தந்த இடங்களில் ஸ்கேல்படி கோடுகளை அழித்துவிடுங்கள். அப்படியே ஜன்னல்களைக் காட்ட அந்தந்த இடத்தில் குறுக்கே கோடு போடுங்கள். இப்போது பள்ளிக்கூடத்தை அளந்து அதன் பிளானை வரைந்தோம்.

கிராம நிலப்படம்.

இப்படியே உங்கள் கிராமத்தின் நிலப்படத்தையும் எழுதலாம். அதற்கு முதலில் அந்தக் கிராமத்திலுள்ள வீடுகள், தெருக்கள், கோவில்கள், வயல்கள், ஏரிகுளங்கள், நதி முதலியவை எங்குள்ளவை என்று பார்க்க வேண்டும். பிறகு அவற்றை அளந்து ஸ்கேலின்படி எழுதவேண்டும். அப்படி அளந்து எழுதுவதற்குப் பல நாட்கள் ஆகும். இங்ஙனம் தயாரித்த கிராமப்படம் உங்கள் பள்ளிக்கூடத்தில் இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்தின் படமும் துரைத்தனத்தாரால் தயார் செய்யப்பட்டிருக்கிறது. அதைப்

பார்த்து உங்கள் கிராமத்தின் படத்தை எழுதுங்கள். அதில் குறித்த ஸ்கேலைப் பார்த்துக் கிராமத்தின் நீளம் அகலம் எல்லைகள் என்பவைகளை எழுதுங்கள்.

உங்கள் கிராமம்போன்ற பல கிராமங்கள் சேர்ந்த தாலூகா, பலதாலூகாக்கள் சேர்ந்த ஜில்லா முதலியவற்றையும் முன்சொன்னபடி எழுதியிருக்கின்றார்கள். இவற்றுக்குப் பூகோளப்படங்கள் என்று பெயர்.

கிராமத்தைப் பார்க்கிலும் பெரிய பூகோளப் படங்களை எழுதும்போது, சிறு கிராமங்கள், பட்டணங்கள் முதலியவற்றைப் படத்தில் விவரமாக எழுத முடியாதல்லவா? அவற்றைக் குறிப்பதற்குக் கிராமங்கள் பட்டணங்கள் உள்ள இடத்தில் சிறு புள்ளிகளை எழுதிக் குறித்திருக்கிறார்கள். மலைகள், நதிகள்: ரஸ்தாக்கள் முதலியவைகளும் வெவ்வேறு விதமான குறிகளால் படங்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை உங்கள் ஜில்லாப் படத்திற் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

இங்ஙனம் பல ஜில்லாக்கள் சேர்ந்தது ஒருராஜதானி, பல ராஜதானி சேர்ந்தது ஒரு தேசம், பல தேசங்கள் சேர்ந்தது ஒரு கண்டம். இப்படிப் பல கண்டங்கள் சேர்ந்ததுதான் இப்பூமி என்று தெரிந்துகொள்ளுங்கள்.

பூமியின் உருவம்.

பூமியின் உருவம், அமைப்பு, தரையின்மேடுபள்ளம், விளைபொருள்கள் முதலிய விஷயங்களைப்பற்றிக் கற்பிக்கும் புஸ்தகத்திற்குப் 'பூகோள சாஸ்திரம்' என்றுபெயர். நாம்வசிக்கும் இந்தப் பூமியானது எலுமிச்சம்பழம்போல் உருண்டையாயிருக்கிறது. ஆனால் பார்வைக்குத் தட்டையாகத் தோற்றுகிறது. ஏனெனில் பூமி முழுவதையும்

ஒரே தடவையில் நாம் பார்க்க முடியாததால் அவ்வாறு தோற்றுகிறது. ஆனால் உண்மையில் பூமி உருண்டையாகத்தான் இருக்கிறது. உதாரணமாக,



பக்கத்தில் உள்ளபடத்தில்காட்டியபடி ஒரு இடத்திலிருந்து மற்றொருஇடத்திற்குப் போய்க்கொண் டிருக்கும் கப்பலை நீங்கள் பார்த்தால், முதலில் அந்தக் கப்பலின் அடிப் பாகமும், அக்கப்பல் தூரப் போகப் போக மேற்பாகங்களும் கொஞ்சங் கொஞ்சமாய்மறையக் காண்பீர்கள். பூமி உருண்டையா யிருப்பதால்தான் அப்படித் தெரிகிறது. உருண்டையாய் இல்லாமல் தட்டையாய்இருந்தால் அடிப்பாகங்கள் மறையக் காரணம் இல்லை.



நாம் வசிக்கும் உருண்டை வடிவமாகிய இந்தப் பூமி மூன்று பங்கு நீராலும், ஒரு பங்கு நிலத்தாலும் ஆகியது.

பூமி, சூரியன், சந்திரன்.


நாம் வசிக்கும் இப் பூமியானது 25000 மைல் சுற்றளவுள்ளது. அதன் குறுக்களவு 8000 மைல். இப்பூமி மேற்குத் திசையிலிருந்து கிழக்குத்திசையில் சுழன்றுகொண்டு போவதால், சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் அஸ்தமிக்கிறதாய்க் காணப்படுகிறது. உண்மையில் பூமிதான் சுற்றுகிறது. சூரியன் இருந்த இடத்திலேயே இருக்கிறது. நாம் புகைரதம் ஏறிப் பிரயாணம் போனால், நாம் செல்லும்

திசைக்கு எதிர்த்திசையை நோக்கி மரங்கள், குன்றுகள் முதலியன செல்வனபோல் காணப்படுகின்றன அல்லவா? ஆயினும் புகைரதந்தான் ஓடுகிறதென்று நமக்குத் தெரியும். அதுபோல் பூமி வேகத்துடன் சுழலுவதால் அதன் அசைவு நமக்குப் புலப்படாமல் சூரியன் கிழக்கில் உதித்துப் பூமி சுழலும் திசைக்கு எதிர்த்திசையாகிய மேற்குப் பக்கம் போவதுபோல் காணப்படுகிறது. பூமி சுழன்றால் அதிலுள்ள ஜனங்கள், வீடுகள் முதலிய எல்லாப் பொருள்களும் கீழே விழாமலிருக்குமா என்று நீங்கள் நினைக்கலாம். பூமி என்ற கோளத்துக்கு மற்றுமுள்ள கோளங்களைப் போலவே, சமீபத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் தன் மத்தியபாகத்திற்கு இழுத்துக் கொள்ளும் வல்லமை இருக்கிறது. அந்த வல்லமையை ஆகர்ஷணசக்தி என்பார்கள். அந்தச் சக்தி பூமிக்கு இருப்பதினால் ஆகாயத்தில் நாம் எதை எறிந்தாலும் முடிவில் அது பூமியில் வந்து விழுகிறது. இந்தச் சக்திதான் பூமி சுழலும்போது அதைச் சேர்ந்த பொருள்களை விழாமல் தன்னோடு இழுத்துக் கொண்டே செல்கிறது.

பூமிக்கு இரண்டுவித சலனங்கள் (அசைவுகள்) உண்டு. பம்பரம்போல் தன்னைத்தானே சுற்றிக்கொள்வது ஒன்று, சூரியனைச் சுற்றி வருவது மற்றொன்று. அது தன்னைத் தானே சுற்றிக் கொள்வதால் இரவும் பகலும் உண்டாகின்றன. அது எப்படியென்று ஒரு உதாரணத்தின் மூலமாய் விளக்குவோம்.

இருட்டு அடைந்த ஒரு அறையில் ஒரு விளக்கை ஏற்றி வையுங்கள். அதன் ஒரு பக்கத்தில், ஒரு பம்பரத்தைச் சுற்றி விடுங்கள். பம்பரம் சுழலும்போது, அதன்

ஒரு பக்கம் விளக்குக்கு எதிரில் வந்து வெளிச்சத்தை அடைகிறது. மற்றொரு பக்கத்துக்கு வெளிச்சம் இல்லை. பம்பரம் சிறிது நேரம்கூட நில்லாமல் சுழன்றுகொண்டே இருப்பதனால், அதன் சில பாகங்கள் வெளிச்சத்தை அடைகின்றன. சிலபாகங்கள் இருட்டை அடைகின்றன.



விளக்குக்குப் பதிலாகச் சூரியனையும் பம்பரத்துக்குப் பதிலாகப் பூமியையும் வைத்துக் கொள்வோம். பூமி தன்னைத்தானே சுற்றிவரும் போது, அதன் சில பாகங்கள் சூரியனுக்கு முன்வந்துவெளிச்சத்தை அடைகின்றன, மற்ற பாகங்கள் சூரிய வெளிச்சத்தை அடைய முடியாமல் இருளில் இருக்கின்றன. வெளிச்சமாயுள்ள பாகத்தைப் பகல் என்றும், இருட்டாயுள்ள பாகத்தை இரவு என்றும் சொல்லுகிறோம்.

இவ்வாறு பூமியின் ஒரு பாகம் முதலில் சூரிய வெளிச்சத்தை அடைந்து, மறுபடியும் இருட்டை அடைவதற்கு 12 மணி நேரம் ஆகிறது. அந்தப்பாகம் இருட்டை விட்டு

வெளிச்சத்தைப் பெறுவதற்கு மறுபடியும் 12மணி நேரம் ஆகிறது. ஆக ஒரு பகலும் ஒரு இரவும் சேர்ந்த நேரத்தை நாம் ஒரு நாள் என்று சொல்லுகிறோம். எனவே பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்வதால் பகலும் இரவும் மாறி மாறி வருகின்றன. அங்ஙனம் பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்ளா விட்டால் என்ன நேரிடும்? சூரியனுக்கு எதிரிலுள்ள பூமியின் பாகத்துக்கு எப்போதும் பகலும், மற்ற பாகத்துக்கு எப்போதும் இருட்டும் உண்டு.

முன் காட்டிய பம்பர உதாரணத்தில், அப் பம்பரம் தன்னைத்தானே சுற்றிக் கொள்வது மன்றி தன்னிருப்பிடத்தை விட்டுச் சில வேளைகளில் நகருவதையும் நீங்கள் பார்த்திருக்கலாம். அதுபோல் இப்பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்வதோடு தானிருக்கும் இடத்தை விட்டு நகர்ந்து, சூரியனுடைய ஆகர்ஷணசக்தியால் இழுக்கப்பட்டுச் சூரியனையும் சுற்றுகிறது.


பூமி இங்ஙனம் சூரியனைச் சுற்றிவர 365¼ நாட்கள் (அதாவது ஒரு வருஷம்) ஆகும். பூமியைப்போலவே பல கிரகங்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. சூரியன் நமது பூமியைவிட 13 லக்ஷம் மடங்கு பெரியது. அது சுமார் பத்துக்கோடி மைலுக்கு அப்பால் இருப்பதால் மிகச் சிறிதாகக் காணப்படுகிறது. நீங்கள் பறக்கவிடும் பட்டம் மேலே போகப் போகச் சிறிதாய்க் காணப்படுகிறது. அது போல் தூரத்திலுள்ள வஸ்துக்கள் சிறியவையாகத்தான் காணப்படும். சூரியன் உருண்டை வடிவமான அக்கினி கோளம். அது தன்னைத்தானே சுற்றிக் கொள்ளுகிறது. ஆனால் வேறு கிரகங்களை அது சுற்றுகிறதில்லை.

சந்திரன் பூமியைச் சுற்றிக்கொண்டு வருகிற உபக்கிரகம். பூமி சூரியனைச் சுற்றி வரும்போது, பூமியோடு கூடவே சந்திரன் சூரியனைச் சுற்றுகிறது. சந்திரன் பூமியைச் சுற்றிவர 29 நாளும் பூமியுடன் சூரியனைச் சுற்றிவர ஒரு வருஷமும் செல்லும். அது இயற்கையில் ஒளியுள்ளது அன்று. சூரியனிடத்திலிருந்து அது வெளிச்சத்தை அடைந்து பூமிக்குக் கொடுக்கிறது.

கிராமமும் சுற்றுப்புறமும்.

நாம் ஒரு பெரிய கிராமத்தில் வசிப்பதாக வைத்துக்கொள்வோம். அந்தக் கிராமத்தில் அநேக வீடுகள் வரிசை வரிசையா யிருக்கும். அப்படி அநேக வீடுகள் வரிசையா யிருப்பதைத் தெரு என்கிறோம். உங்கள் கிராமத்தில் எத்தனை தெருக்கள் இருக்கின்றன? கோவிலும் பள்ளிக்கூடமும் உங்கள் ஊரிலேயே இருக்கக்காண்பீர்கள். நீங்கள் ஏதேனும் ஒரு சாமான் வாங்கவேண்டியதிருந்தால் எங்கே வாங்குகிறீர்கள்? உங்கள் கிராமத்தில் எத்தனை கடைகள் இருக்கின்றன? பெரிய கிராமங்களில் கடைவீதியும், தபாலாபீசும், சத்திரங்களும் இருக்கக் காண்பீர்கள்.

இனிக்கிராமத்துக்குவெளியில்உலாவப்போனால், அங்கே அநேக பொருள்களைப் பார்ப்பீர்கள். சில இடங்களில் மா, ஆல், அத்தி, அரசு, வேம்பு, புளி முதலான மரங்கள் வளர்ந்து காணப்படும். பல மரங்கள் சேர்ந்து ஒரு இடத்தில் வளர்ந்து இருந்தால் அதற்குத் தோப்பு என்று பெயர். இத்தோப்புகளையும் தனிமரங்களையும் தவிர நெல், வாழை, சோளம், காய்கறிகள் விளையும் நிலங்களையும் பார்ப்பீர்கள்.



பொதுவாக நிலங்கள் இரண்டு வகைப்பட்டவை. அவை நன்செய் நிலங்கள் புன்செய் நிலங்கள் எனப்படும். நெல் வயலைப்பாருங்கள். நெற்பயிரிடுவதற்குத் தண்ணீர் எப்போதும் வேண்டும். நெல்லை எப்படிப் பயிர்செய்கிறார்கள் தெரியுமா? நெற்பயிரிடும் நன்செய் நிலத்தில், முதலில் தண்ணீர் கட்டி உழுது சேறாக்கி உரமிடுகிறார்கள். நெல் பயிராகி அறுப்புமுடியும்வரை நிலத்தில் தண்ணீர் இருக்கவேண்டும். காய்ந்த நன்செய்நிலத்தை உழுதால் மண்கட்டிகட்டியாகப் பெயரும். அதில் தண்ணீரைப் பெருக்கினால் நிலம் தொளியாகும். நிலங்கள் நல்ல பலனைத்தர வேண்டுமானால் அவற்றுக்கு எரு முதலிய உரம் போடவேண்டும். ஆடுமாடுகளின் சாணியும், மக்கிப்போன இலை தளிர்களும் ஏற்ற எருவாகும். சில இடங்களில் பிண்ணாக்கு, எலும்புத்தூள் முதலியவற்றையும் எருவாக உபயோகிக்கிறார்கள். நெல் முக்கியமான நன்செய்ப் பயிர். அதைத்தவிர வாழை, வெற்றிலை, கரும்பு, சடம்பு முதலியனவும் பயிராக்கப்படு

கின்றன. தண்ணீர் பாயாத மேட்டு நிலங்களைப் புன்செய்கள் என்போம். சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, சாமை, குதிரைவாலி, உளுந்து, துவரை, மொச்சை என்பன இந்த நிலங்களில் பயிரிடப்படும். புன்செய்கள் முக்கியமாகக் கரிசல் செவ்வல் என இருவகைப்படும். கரிசலில் கறுப்பு நிறமுள்ள மண்ணும் சிறுகற்களும் சேர்ந்திருக்கும். கரிசலில் விசேஷமாகப் பருத்தியே செழித்துவளரும். செவ்வல் நிலம், செம்மண்ணும் கொஞ்சம் மணலும் கலந்துள்ளது. அந்நிலங்களில் முற்கூறிய தானியங்களும் பயறு வகைகளும் பயிராக்கப் படுகின்றன. தண்ணீர் தட்டான மேட்டு நன்செய்நிலங்களில் அடிக்கடி புன்செய்ப்பயிர்கள்பயிரிடப் படுகின்றன. சிறிதளவு வேண்டிய ஜலத்திற்காகக் கிணற்று நீரை இறைத்தும், மழையின் உதவியாலும் வெண்டி, மிளகாய், கொத்தவரை, வெங்காயம் முதலியன விளைவிக்கப் படுகின்றன. சில நிலங்கள் உப்பு சம்பந்தமான மேட்டு நிலமாயிருக்கும். அவற்றில் ஒன்றும் விளையாது. ஆயினும் அதிலுள்ள உவர்மண் துணிகளின் அழுக்கைப்போக்க உபயோகப்படுகின்றது. அம்மண் வண்ணானுக்குத்தேவை.

கடற்கரையிலும் வேறு மணற் பாங்கான இடங்களிலும், தென்னை, பனை, ஈச்சு, சவுக்கு உடை முதலியன நன்கு உண்டாகின்றன.

கிராமங்களின் சுற்றுப் பக்கங்களில் சில இடங்கள் பயிரிடப்படாமல் தரிசு நிலமாயிருக்கும். அவற்றில் வளரும் புல்லை ஆடுமாடுகள் மேய்கின்றன. அந்நிலத்துக்கு மேய்ச்சல் கால்கள் என்று பெயர்.

உங்கள் ஊரில், செங்கற்காளவாய் இருக்கின்றனவா? அவை பெரும்பாலும் வயல்களிலாவது கண்மாயின் பக்கத்திலாவது வைக்கப்படுகின்றன. செங்கல் எதற்கு உபயோ

கப்படுகின்றது? முதலில் களிமண்ணைத் தோண்டித் தண்ணீர் வார்த்துப் பக்குவமாகக் குழைப்பார்கள். பிறகு கட்டளை (அச்சு) களால் அறுத்துப் பச்சைக் கல்லைக் காய வைத்து எடுப்பார்கள். அதன் பிறகு அவற்றை அடுக்கிக் கட்டைகளைச் சுற்றிவைத்துக் கொளுத்திச் செங்கல் செய்கிறார்கள். சுண்ணும்பும் நமக்குப் பல காரியங்களுக்கு உபயோகமாகின்றது. அது எப்படிக்கிடைக்கிறது தெரியுமா? சுண்ணும்புக் கல்லையும், கரியையும் கலந்து காளவாயிற் போட்டுக் கொளுத்தினுற் கரியெல்லாம் எரிந்து போகும்; கல்மட்டும் சுண்ணும்புக்கு உபயோகமாகிறது. கொஞ்சம் சுண்ணும்பு வேண்டியதாய் இருந்தால் கிளிஞ்சல்களைக் கல்லுக்குப் பிரதியாக உபயோகிக்கிறார்கள்.

மண், சுண்ணும்புக்கல், கருங்கல் என்பன பூமியிலிருந்து வெட்டி எடுக்கப் படுகின்றன. பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படும் பொருள்களுக்கு உலோகங்கள் என்று பெயர். தங்கம், வெள்ளி, இரும்பு, தாமிரம், ஈயம் என்பன பூமியிலிருந்து கிடைக்கும் உலோகங்களே.

கைத்தொழில்கள்.

உயிர்ப்பிராணிகள் எல்லாவற்றுக்கும் உணவு அவசியம். ஆதலால், நமக்கும் உணவு வேண்டும். ஒருநாள் அல்லது ஒருவேளை உணவு இல்லாவிட்டால் நாம் என்ன பாடு படுகிறோம்! அதனைத் தேடுவதற்கே எல்லோரும் சம்பாதிக்கிறார்கள். அது எங்கே கிடைக்குமோ அங்கேயே மனிதர்கள் அதிகமாக வசிப்பார்கள். நமது நாட்டில் நெல், துவரை, உளுந்து, கேழ்வரகு, சோளம், தினை, முதலிய சில தானியங்களும், புளி, வாழை, மா, பலா

முதலிய பழங்களும் ஆகாரத்திற்கு உபயோகிக்கிறோம். இவை நீர்வளமும் நிலவளமுமுள்ள இடங்களில் உண்டாகின்றன. இவ்விடங்களில் தான் பெரிய நகரங்களும், கிராமங்களும் கட்டப்பட் டிருக்கின்றன. அங்குதான் நிலங்களை உடையவர்களும் அவர்களுக்குதவி செய்யும் குடியானவர்களும் வாழ்வார்கள். உங்களுடைய ஊரில் குடியானவன், நிலம் உழுவதைப் பார்த்திருக்கிறீர்களா? இரண்டு மாடுகள் இழுத்துச் செல்லும் கலப்பையால் நிலத்திலுள்ள மண் கீழும் மேலும் கிளறப்படுகிறது. குடியானவன் அப்படி உழுதபிறகு, பயிருக்குத்தக்கபடிபாத்திகள் கட்டி விதை விதைப்பான். பாத்திகள் கட்டாமல் பயிராக்கப்படும் பயிர்களும் உண்டு. அப்படி விதைத்த விதை பயிராகி வளர்ந்து முதிர்ந்து பூத்துக் கதிரீனும். சில பயிர்கள் இரண்டு மூன்று மாதங்களில் பலன் கொடுக்கும். சில பயிர்கள் ஐந்தாறு மாதங்களில் பலன் தரும். அப்பயிர்களிலிருந்து உண்டாகும் தானியங்களைக் குடியானவர்கள் வீடு கொண்டுவந்து சேர்ப்பார்கள். குடியானவர்கள் தாமே அவ்வளவு பொருள்களையும் தங்கள் வீடுகளில் வைத்துக்கொள்ள முடியுமா? ஆசாரி, சேணியன், இடையன், வண்ணான், அம்பட்டன் முதலிய தொழிலாளர்உதவி அவர்களுக்கு வேண்டுமென்றோ? ஆதலால் தங்களுக்குக் கிடைத்த விளைபொருள்களை அவர்களுக்குங் கொடுப்பார்கள். அவற்றைப்பெற்று அத்தொழிலாளிகள் ஜீவிப்பார்கள்


ஆசாரிகளில் கருமான், தச்சன், கன்னான், தட்டான் என்ற நான்கு பிரிவினர்கள் இருக்கிறார்கள். இவர்களில் கருமான், இரும்பு என்ற உலோகத்தாற் பல சாமான்களைச் செய்கிறான். அவனைக் கொல்லன் என்றும் சொல்லுவார்கள். இரும்பு மிகவும் உபயோகமான உலோகம்.



கருமான்.

கொல்லன் இரும்பால் சாமான்கள் செய்யா விட்டால் உலகத்தில் எந்தக் கைத் தொழிலும் நடக்காது. ஆதலால் நான்கு வகை ஆசாரிகளும் ஒரு இடத்திற் கூடினுல் கொல்லனுக்கே முதல் மரியாதை நடக்கும். விவசாயத்துக்கு வேண்டிய கலப்பைகள் மண்வெட்டி, அரிவாள் கடப்பாரை என்பவற்றைச் செய்பவன் யார்? வீடுகளுக்கு அவசியமான ஆணி, கீழ், பூட்டு, கரண்டி, இரும்புச்சட்டி முதலிய பல சாமான்களைச் செய்பவன் யார்? தச்சனும், கன்னுனும், தட்டானும் வைத்திருக்கும் ஆயுதங்களைச் செய்தவன்யார்? அவன் தான் கொல்லன். கொல்லன் வேலைசெய்யுமிடத்தையும் நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அவன்வைத்திருக்கும் ஆயுதங்களையும் அவற்றை உபயோகிக்கும் விதத்தையும் பாருங்கள்.

தச்சன் மரவேலை செய்பவன். உங்கள் பள்ளிக்கூட வகுப்பிலுள்ளநாற்காலிகளையும் மேஜை, பெஞ்சு, கதவு ஜன்னல், கலப்பை, முதலிய சாமான்களையும் செய்பவன் யார்? அவன் தான் தச்சன். தச்சன் தன் பட்டரையில் உபயோகிக்கும் ஆயுதங்கள் எவை என்றும் அவற்ருல் அவன் என்னசெய்கிறுன் என்றும் சொல்லுவீர்களா?



தச்சன்.

கன்னான் பித்தளை, தாமிரம், வெண்கலம் ஈயம், என்னும் உலோகங்களால் பாத்திரங்கள் செய்பவன்.



கன்னான்.



தட்டான்.

தட்டான் தங்கம் வெள்ளி முதலியவற்றால் நகைகள் செய்பவன். அவன் நுட்பமான பல ஆயுதங்கள் வைத்


திருப்பான். உங்களிற் சிலர் அணிந்திருக்கும் கடுக்கனும், தட்டும், காப்பும், மோதிரமும் செய்தவன் தட்டானே. இன்னும் பெண்கள் அணியும் அநேக ஆபரணங்களையும் அவனே செய்கிறான்.

நெசவுத்தொழிலாளர்:—நாம் எல்லோரும்வேஷ்டிகள் உடுத்துகிறோம். நம்மில் சிலர் சொக்காய் போடுகிறோம். இவற்றை நெய்கிறவர்கள் சேணியர், சாலியர், செங்குந்தர் ஈழுவர், எள்ளுவர் என்கிற பல ஜாதியார்கள். அவர்கள் துணிகளை எப்படி நெய்கிறார்கள்? முதலில் பருத்தியை நூலாக நூற்றுப் பின் நெசவு இயந்திரத்தில் துணிகளாக நெய்கிறார்கள். பருத்தியின் நிறம் என்ன? வெள்ளை நிறம். ஆனால் கறுப்பு, சிவப்பு, மஞ்சள், பச்சை முதலிய துணிகளையும் சிலர் உடுத்துவதை நீங்கள்பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? அந்தத் துணிகள் பல நிறங்களில் எப்படிச் செய்யப் படுகின்றன தெரியுமா? முதலில் நூலுக்குக்கறுப்பு, சிவப்பு, மஞ்சள், பச்சை நிறமான பலவிதச் சாயங்களை ஏற்ற வேண்டும். பின்பு தேவையான நிறமுள்ள நூல்களால் துணிகளை நெய்ய வேண்டும். இப்படி நெய்யும் தொழிலுக்கு நெசவுத் தொழில் என்று பெயர். வஸ்திரங்கள் நமக்கு முக்கியமல்லவா? ஆதலால் இப்போது சில பள்ளிக் கூடங்களில் நெசவுத் தொழிலும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது.

வாணியன்.

நாம் பலகாரங்கள் சுடுவதற்கும், தேய்த்துக்குளிப்பதற்கும் எண்ணெயை உபயோகிக்கிறோம். அது எப்படிக் கிடைக்கிறது. தெரியுமா? செக்கில் எள்ளைப் போட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கப்படுகிறது. அப்படி எண்ணெய் எடுக்கிறவனை வாணியன் என்றும் செக்கான் என்றும்

சொல்லுகிறோம். நீங்கள் செக்கைப்பார்த்திருக்கிறீர்களா? உங்கள் உபாத்தியாயருடன் சென்று செக்கைப்பாருங்கள். எள்ளைத் தவிர நிலக்கடலை, ஆமணக்கு, தேங்காய் முதலியவற்றிலிருந்தும் எண்ணெய் எடுக்கப்படுகிறது.



குயவன்.

மண்ணால் செய்யப்பட்ட பானை, குடம் முதலிய பாண்டங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவற்றைச்செய்கிறவனே குயவன். அவன் எப்படி மண் பாண்டங்களைச் செய்கிறான்? களிமண்ணைக் கொண்டு வந்து அதிலுள்ள கல், புல் முதலியவைகளை எடுத்து விட்டுப் பிறகு களிமண்ணைக் கால்களால் மிதித்துக்கைகளாற்பிசைந்துபக்குவப்படுத்துகிறான். பிறகு சக்கரத்தில் வைத்து வேண்டிய பாண்டத்தைச்செய்து சூளையில் வைத்துச் சுட்டு எடுக்கிறான்.

குயவன் பாண்டங்கள் செய்யும் இடத்திற்கு நீங்கள் போய்ப் பாருங்கள்.

இடையர்.

இடையர் ஆடுமாடுகளை மேய்த்துப் பரிபாலிப்பவர்கள். தாங்களே மாடுகள் வைத்தும், ஆடுகளை மேய்த்தும் ஜீவிப்பார்கள். அவர்கள் பாலைக்கறந்து விற்பனைசெய்கிறார்கள். மீதிப் பாலைத் தயிர், மோராகச் செய்கிறார்கள். தயிரைக் கடைந்து வெண்ணெயும், வெண்ணெயைக் காய்ச்சி நெய்யுமாகச் செய்து விற்கிறார்கள்.

வண்ணான்.

துணிகள் அழுக்காய்விட்டால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? உங்களால் வெளுப்பாக்க முடியாத துணிகளை வெளுத்துக் கொடுக்கிறவன் யார்? அவனே வண்ணான். வண்ணான் உதவியும் நமக்கு அவசியமல்லவா?

முன்னே கூறிய இவர்களைத் தவிர இன்னும் அநேக தொழிலாளிகள் இருக்கிறார்கள். செம்படவர் மீன் பிடித்து விற்பவர். நீங்கள் உபயோகிக்கும் செருப்பு, பூட்ஸ் செய்பவர் சக்கிலியர்கள். அல்லது செம்மான்கள். இவர்கள் இன்னும் அநேக சாமான்களைச் செய்வார்கள். குதிரைச் சேணம், வடக்கயிறு முதலியவற்றை இவர்கள் தோலால் செய்கிறார்கள். முற்கூறிய எல்லாத் தொழிலாளிகளும் தாங்கள் செய்த சாமான்களை எங்கே விற்கிறார்கள்?

வர்த்தகம் (வியாபாரம்)

நீங்கள் உங்கள் புஸ்தகம், கற்பலகை, பென்சில், காகிதம் எங்கே வாங்குகிறீர்கள்? அந்தக் கடைகளைத் தவிர என்ன கடைகளைப் பார்த்திருக்கிறீர்கள்? உங்கள் ஊரில் விளையும்


பொருள்களையும் வேறு பொருள்களையும் கடைகளில் வாங்கலாமல்லவா? உங்கள் ஊரில் சந்தை கூடுகிறதா? உங்கள் ஊரில் விளையும் பொருள்களில் உபயோகப் பட்டவைபோக மீதமான பொருள்களை வெளியிடங்களில் விற்பார்கள். வெளியிடங்களில் மீந்த பொருள்களைக்கொடுத்து நமக்கு உபயோகமான பொருள்களை வாங்கி உங்கள் ஊர்களில் விற்கிறார்கள். இப்படி ஒரு பொருளைக் கொடுத்து மற்றொரு பொருளைவாங்கும் தொழிலுக்கு வியாபாரம் என்று பெயர். நமது ஊரிலிருந்து வெளியில் அனுப்பப்படும் பொருள்களுக்கு ஏற்றுமதி என்றும், வெளியிடங்களிலிருந்து வந்து ஊரில் இறங்கும் பொருள்களுக்கு இறக்குமதி என்றும் பெயர். வியாபாரம் நடக்கும் இடங்கள் கடைகளும் சந்தைகளுமே ஆகும்.

போக்குவரவுச் சாதனங்கள்.

உங்கள் ஊருக்கு வெளியிடங்களிலிருந்து மாட்டு வண்டிகளின் மூலமாய்ப் பல பொருள்கள் கொண்டுவரப் படுகின்றன. பல வண்டிகள் தங்கியிருக்கும் இடத்துக்கு வண்டிப்பேட்டை என்று பெயர். உங்கள் ஊர் ஒரு பெரிய நதியின் கரையிலிருந்தால், அடுத்த கரையிலிருந்து படகுகளிலும் தோணிகளிலும் சாமான்கள் கொண்டுவரப்படும். புகைவண்டிகள் ஓடுமிடங்களில், அவற்றிலேயே வேண்டிய இடங்களுக்குச் சாமான்கள் அனுப்பப்படுகின்றன.

வண்டிகள், படகுகள், புகைவண்டிகள் என்பவற்றில் ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குச் சாமான்கள் கொண்டு போகிறார்கள் என்று அறிந்தோம். வண்டிகள் செல்வதற்கு ரஸ்தாக்கள் போடப்பட்டிருக்கின்றன. ரஸ்தாக்களின் இரு பக்கங்களிலும் மரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

ரஸ்தாக்கள்மேடுபள்ளமின்றிஇருப்பதற்குச்சரளைக்கற்கள் போட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன. ரஸ்தாக்கள் செல்லும்பாதையில் நதிகள் குறுக்கிடுமல்லவா? அவ்விடங் களில் பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அப்பாலங்க ளின் மேல் வண்டிகள் செல்லும்.



புகைவண்டிகள் உங்கள் ஊருக்குச் சமீபத்தில் செல் லுகிறதா? நீங்கள் அவ்வண்டியை அவசியம் பார்க்க வேண்டும். அதன் படம் இதோ இருக்கிறது பாருங்கள். பல வண்டிகளால் இணைக்கப்பெற்ற தொடரை என்ஜின் என்ற சூத்திரவண்டி நீராவியின் உதவியால் இழுத்துக் கொண்டு மேடு பள்ளமில்லாதபாதைமேற் போடப்பட்ட இரண்டு சமசதுரமான தண்டவாளங்களின்மேல்ஓடுகிறது. துரைத்தனத்தாரால் நமக்குண்டான உபகாரங்களில்இது

வும் ஒன்று. இதில் அதிசீக்கிரத்திலும் சொற்பச் செலவி லும் நினைத்த இடம் போகலாம். அவ்வண்டிகளின் மூலம் பலபல சரக்குகள் ஏற்றுமதியும்இறக்குமதியும்ஆகின்றன. மெயில் வண்டிகளில் தபாற் கடிதங்களும் கொண்டுபோகப் படுகின்றன. இருப்புப் பாதையின் ஒரு பக்கத்தில் தூண்க ளும், அவற்றின்மேற் கம்பிகளும் வழி நெடுகப் போடப் பட்டிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவற்றின் மூலமாகவே தந்திசமாசாரங்கள் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

ஜனங்கள், ஜாதி, மதம், பாஷை முதலியன.

கடவுளால் உலகத்தில் உண்டாக்கப்பட்ட ஜீவராசி கள் கணக்கில் அடங்காதவை. இந்த எல்லா ஜீவராசிகளி லும் மனிதரே உயர்ந்தவர்கள். அவர்களுக்கு இது நல் லது, இது கெட்டது என்று அறியும் பகுத்தறிவு உண்டு. மிருகங்கள் தங்களுக்குவேண்டியஉணவுஇயற்கையிலேயே சுலபமாய் அகப்படும் இடங்களை நாடிச் சென்று வாசம் செய்யும். மனிதர்களோ இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களையும் காலநேரங்களையும் உத்தேசித்து வேண் டியபடி வேலை செய்து உணவைப் பெற்று ஜீவிக்கிறார்கள். நமது தேசம் அதிக மலைப்பிரதேசமாயும்,வனாந்தரமாயும் இல்லாமல், நிலவளம் நீர்வளம் பொருந்தியபூமியாயிருக்கி றது. இந்தத் தேசத்தில் உழுது பயிரிட்டு ஜீவிப்பவர்களே பலர். ஆதலால் விவசாயத்துக்குஏற்றநீர்வளமுள்ளஇடங்க ளில் வீடுகள் கட்டிக்கொண்டுஜனங்கள்வசிக்கிறார்கள். நதிக் கரைகளிலேயே பலபட்டணங்களும் கிராமங்களும் ஏற்படு கின்றன. கிராமவாசிகளே நமதுதேசத்தில் அதிகமான பேர்கள். ஆங்காங்கு வியாபாரமும் கைத்தொழிலும், கல் வியும் மிகுந்த இடங்களில் பட்டணங்கள் ஏற்படுகின்றன.

ஒவ்வொரு நாகரிக ராஜாங்கமும் அந்த இராஜாங்கத்திற்குட்பட்ட ஜனங்களின் தொகை, ஜீவனம் முதலிய விஷயங்களைச் சில சமயங்களில் கணக்கிட்டுத் தேசத்தின் விருத்தாந்தங்களை எல்லாருக்கும் தெரியும்படி வெளிப்படுத்துவார்கள். அப்படியே நமது தேசத்திலும் 10 வருஷங்களுக்கு ஒரு முறை இந்தக் கணக்குத் துரைத்தனத்தாரால் எடுக்கப்படுகிறது. இதற்குச் சென்ஸஸ் (Census) அல்லது ஜனசங்கியை என்று பெயர்.

ஜனங்கள் எல்லாரும் கடவுளை அறிய முடிவதில்லை. உங்கள் வகுப்புப் பிள்ளைகள் எல்லாரும் ஒரே கடவுளை வழிபடுகிறீர்களா? இல்லை. உங்கள் வகுப்பில் இந்துக்களும், முகம்மதியர்களும், கிறிஸ்தவர்களும் படிப்பீர்கள். புராதனமான பழைய வேதங்களை ஒப்புக்கொண்டு அதன்படி கடவுளை வழிபடுகிறவர்கள் இந்துக்கள். இந்துக்களிற் சிலர் விஷ்ணுவையும், சிலர் சிவனையும் வழிபடுகிறார்கள். விஷ்ணுவை வழிபடுவோர் வைஷ்ணவர்கள். சிவனைத் தொழுகிறவர்கள் சைவர்கள். முகம்மது என்ற பெரியவர் அரேபியா தேசத்தில் ஆதியில் போதித்துவந்த மதம் முகம்மதிய மதம். அதை அனுசரிப்பவர் முகம்மதியர். அவர்களும் நமது நாட்டில் இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து என்ற பெரியார் ஏற்படுத்திய மதம் கிறிஸ்தவ மதம். அதை அனுசரிப்பவர்கள் கிறிஸ்தவர்கள். இந்த 3 மதங்களையும் அனுசரிப்பவர்களே, நமது ஜில்லாவில் அதிகமாயிருக்கிறார்கள்.

ஜாதி:—இந்துக்களில் பல ஜாதியார்கள் இருக்கிறார்கள். அவர்களில், பிராமணர், வேளாளர், முதலியார்கள், பிள்ளைகள், நாயக்கர்கள், கள்ளர், மறவர், அகம்படியார்,

படையாச்சி, சில ஜாதியார்கள். வேறு சில ஜாதியார்களேயும் அவர்களுடைய தொழில்களேயும் பற்றி முன்னரே படித்திருக்கிறீர்கள். ஒரு மதத்தைச் சேர்ந்த எல்லா ஜாதியாரும் ஒரே பாஷையைப் பேசுவதில்லே. இந்துக்களில் சிலர் தமிழையும், சிலர் தெலுங்கையும், சிலர் கன்னடத்தையும் நமது ராஜதானியில் பேசுகிருர்கள். முகம்மதியர் இந்துஸ்தானி பாஷையும், தமிழும் பேசுகிருர்கள். இராஜாங்க பாஷையாகிய இங்கிலீஷ் பாஷையைச் சிலரே பேசுகிருர்கள். அதனேப் பேசுகிறவர்கள், நூற்றுக்குப் பத்துப் பேர்தான்.

துரைத்தனம்.

உங்கள் வீட்டுக்கு வேண்டிய சாமான்களேத் தேடிக் கொடுப்பவர் யார்? உங்கள் வீட்டில் பிள்ளேகள் சண்டையிட்டால் தீர்த்துவைப்பவர் யார்? உங்கள் தகப்பனர். அவரே உங்கள் வீட்டுத் தலேவர். அவ்வாறே உங்கள் ஊருக்குத் தலேவர் ஒருவர் இருக்கிருர். அவர்தான் கிராம முனிசீபு. அவருக்கு, உதவியாக ஏற்பட்ட வேலேயைச் செய்யத் தலேயாரி, வெட்டியான் முதலிய கிராம சிப்பந்திகள் இருக்கிருர்கள். பல கிராமங்கள் சேர்ந்து ஒரு தாலூகாவும், பல தாலூகாக்கள் ஒரு ஜில்லாவும், பல ஜில்லாக்கள் கூடி ஒரு ராஜதானியும் ஆகின்றன. இதை முன்னரே படித்திருக்கிறீர்கள். இவைகள் எல்லாவற்றிற்கும் படிப்படியாய்ப் பெரிய உத்தியோகஸ்தர்கள்ஏற்பட்டிருக்கிருர்கள். நமது இந்தியா தேசத்தைப் பரிபாலித்துவருபவர் மாட்சிமைதங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி அவர்கள். அவருடைய திருவுருவப்படம் இந்தப் புஸ்தகத்தின் முன் பக்கத்தில் இருக்கிறது பாருங்கள்.

நிலப் பிரிவுகள்.

நீங்கள் மழை பெய்து ஒய்ந்த பிறகு, வெளியே சென்று பார்த்தால் அநேக இடங்களில் சிறிதளவு நீர் ஓடுவதையும், பல நீர் ஓடைகள் ஒரு இடத்தில் சேருவதை யும் பார்க்கலாம். சேர்ந்த நீர் ஒன்றுகத் திரண்டு வேறு இடத்திற்கு ஓடலாம். இடையிலேயே திட்டுகளைப் போலச் சில மண்மேடுகள் காணப்படும்.

அதுபோல நீங்கள் உங்கள் ஊரிலுள்ள கண்மாய்க் கரைமீதில் நின்று நான்குபக்கங்களையும் சுற்றிப்பார்த்தால் நிலப்பாகமும்நீர்ப்பாகமும் இடையிடையேபிரிந்துகாணப் படும். பூபாகத்தில், சாகுபடிகளையும் மாடு ஆடுகள் மேய் வதையும் நீங்கள் பார்க்கலாம். வயல்களில் நீரைக் கட்டி அது தேங்கி இருப்பதையும் நீங்கள் பார்க்கலாம்.


உயரமான கோபுரம் அல்லது மலையின் மேல் ஏறி நீங்கள் சுற்றிலும் பார்த்தீர்களானல் பல கிராமங்கள் கண்மாய்கள் சாகுபடி நிலங்கள், வீடுகள் முதலியவற்றைக் காண்பீர்கள்.

இவ்வாறு ஒரு ஜில்லா அல்லது தேசம் முதலிய பெரிய பூபாகத்தின் அமைப்பைக் காட்டுவதற்குத் தயா ரிக்கப்படுகிற இந்தப் படத்திலிருந்து தேசத்திலுள்ள பெரிய நீர்ப் பிரிவுகளையும், நிலப் பிரிவுகளையும் நாம் தெரிந்துகொள்ளலாம்.

இப்படி அநேக தேசங்கள் சேர்ந்து ஒரு கண்டம் ஆகிறது. இந்தக் கண்டத்தில், நாம் முன் உயரமான இடத்திலிருந்து பார்த்தபோது சிறிதாகக் காணப்பட்ட நீர் நிலப் பிரிவுகளைப்போல் எவ்வளவோ மடங்கு விஸ் தீரணமுள்ள பூபாகங்களைப் பார்க்கலாம்.

கீழே காட்டிய படத்தில் இந்த நிலப்பாகங்கள் நீர்ப் பாகங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன.

தீவு—எல்லாப்பாகங்களிலும் தண்ணீராற் சூழப்பட்டிருக்கும் நிலப்பாகத்திற்குத் தீவு என்று பெயர் (உ-ம்) ராமேசுவரம்.



தீபகற்பம்—அநேகமாக மூன்று பக்கமும் தண்ணீராற் சூழப்பட்ட நிலப் பாகத்துக்குத் தீபகற்பம் என்று பெயர். (உ-ம்) நாம் வசிக்கும் இந்தியா.

பூசந்தி—இரண்டு பெரிய நிலப்பாகங்களைச் சேர்த்து இரண்டு பெரும் ஜலபாகங்களைப் பிரிக்கும் குறுகிய நிலப் பாகத்துக்குப் பூசந்தி என்று பெயர். (உ-ம்) ஐரோப்பாவி லுள்ள கோரிந்து பூசந்தி.

முனை—சமுத்திரக்கரையின் ஒரு பாகமானது சில இடத்தில் சமுத்திரத்திற்குள் ஒடுங்கிக் கூர்மையாய் நீண்டி ருக்கும். அப்படிப்பட்ட பூபாகத்துக்கு முனை என்று பெயர். (உ-ம்) நமது தேசத்தின் தென் கோடியிலுள்ள கன்னியாகுமரி முனை.

மலை—நீங்கள் மலையைப் பார்த்திருக்கிறீர்கள். அது பூமி மட்டத்திற்கு மேல், மிகவும் உயர்வாய்க் காணப்படு கிறது. இப்படி உயர்ந்து இருக்கும் பாகத்திற்கு மலை என்று பெயர். (உ-ம்) கல்ராயன் மலை.

மலைத்தொடர்ச்சி—பல மலைகள் ஒன்றோடொன்று அடுத்து அடுத்துச் சேர்ந்திருப்பதற்கு மலைத்தொடர்ச்சி என்று பெயர். (உ-ம்) கிழக்குத் தொடர்ச்சிமலை.

குன்று—மலையிலும் சற்றுச் சிறிதாய் மரம், செடிகள் அதிகமாய் முளைத்திராத சிறிய மலைக்குக் குன்று என்று பெயர். (உ-ம்)பெருமுக்கல் மலை.

பள்ளத்தாக்கு—இரண்டு மலைகளுக்கும் ஊடேயுள்ள தாழ்ந்த பூமிக்குப் பள்ளத்தாக்கு என்று பெயர். (உ-ம்) வாணியம்பாடிப் பள்ளத்தாக்கு.

காடு—அநேக செடிகொடிகள் அடர்ந்திருக்கும் விசா லமான தரைப்பாகத்திற்குக் காடு என்று பெயர். (உ-ம்) கள்ளக்குறிச்சிக் காடுகள்.

நீர்ப்பிரிவுகள்.

மகாசமுத்திரம்—உங்களுடைய ஊரில் பெரும் பள்ளங்களில் நீர் தேங்கி இருப்பதைப் பார்த்திருக்கிறீர்கள். அவற்றிலும் பெரிதான கண்மாய், ஏரி முதலியவற்றையும் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். அவற்றிலும் எவ்வளவோ மடங்கு பெரிதாய்க் கண்ணுக்கு எட்டாத அளவு பரவியும் உப்பு நீருடையதாயும் உள்ள ஜல பாகத்துக்கு மகா சமுத்திரம் என்று பெயர். அநேகமாய்ப் பெரிய நதிகள் எல்லாம் சமுத்திரங்களிலேயே போய் விழுகின்றன. (உ-ம்) இந்து மகாசமுத்திரம்.

வளைகுடா—சமுத்திரக்கரை, சில இடங்களில் அதிக அலையால் உடைந்தும், சில இடங்களில் உடையாமலும் இருக்கும். உடைந்த இடங்களில் பூமிக்குள் குறுகிச் செல்லும் சமுத்திரத்தின் பாகத்துக்கு வளைகுடா என்று பெயர். (உ-ம்) பார்ஸீக வளைகுடா.

விரிகுடா—விரிந்த வாயுடன் பூமிக்குள் செல்லும் ஜல பாகத்துக்கு விரிகுடா என்று பெயர். (உ-ம்) நமது தேசத்திற்குக் கிழக்கிலுள்ள வங்காள விரிகுடா.

கடல்—இது சமுத்திரத்தைப் பார்க்கிலும் சற்றுச் சிறிதான உப்பு நீர்ப்பாகம். (உ-ம்) நம்முடைய தேசத்திற்கு மேற்கிலுள்ள அராபிக்கடல்.

ஜலசந்தி—தண்ணீர் நிரம்பிய இரண்டு வயல்களுக்கு ஊடேயுள்ள வரப்பை வெட்டி விட்டால் என்ன ஆகும்? அவ் இரண்டு வயல்களிலுமுள்ள தண்ணீரும் குறுகிய நீர்ப் பாகத்தால் சேர்க்கப்படும். அதுபோல், இரண்டு பெரிய ஜலபாகங்களைச் சேர்த்து, இரண்டு பூபாகங்களைப் பிரிக்கும் ஜல பாகத்திற்கு ஜலசந்தி என்று பெயர். (உ-ம்) இந்தியாவிற்கும் இலங்கைக்கும் மத்தியி லிருக்கும் பாக்ஸ் ஜலசந்தி.

ஏரி—நான்கு பாகங்களிலும் தரை சூழ்ந்த ஜல பாகத்திற்கு ஏரி என்று பெயர். (உ-ம்) வீராணத்து ஏரி.

நதி—மழை பெய்தவுடன் தண்ணீர் ஒன்றாய்ச்சேர்ந்து பள்ளமான இடத்தை நோக்கிச் செல்வதைப் பார்த்திருப்பீர்கள். அதுபோல் உயர்ந்த மலைகளில் உற்பத்தியாகிப் பள்ளத்தை நோக்கிச் செல்லும் நீர்ப்பாகத்திற்கு நதி என்று பெயர். (உ-ம்) நமது ஜில்லாவில் ஓடும் வெள்ளாறு.

உபநதி—ஒரு பெரிய நதியில் வந்து கலக்கும் சிறு நதிக்கு உபநதி என்று பெயர். (உ-ம்) மணிமுத்தாறு.

கிளைநதி—ஒரு நதியிலிருந்து பிரிந்து செல்லும் ஆற்றுக்குக் கிளைநதி என்று பெயர். (உ-ம்) காவேரியின் பிரிவாகிய கோள்ளிடம்.

ஜில்லா.

நம்முடைய இந்தியா தேசத்தைப் பல ராஜதானிகளாகப் பிரித்திருக்கிறார்கள்; அவைகளில் சென்னை ராஜதானியும் ஒன்று. சென்னை ராஜதானி 26 பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரிவிற்கும் ஜில்லா என்று பெயர். சென்னை ராஜதானியின் 26 ஜில்லாக்கள்:—

1	கஞ்சம்	14	அஞ்சங்கோ
2	விசாகபட்டணம்	15	தென்கன்னடம்
3	கோதாவரி	16	கடப்பை
4	கிருஷ்ணா	17	கர்நூல்
5	குண்டூர்	18	பல்லாரி
6	நெல்லூர்	19	அனந்தபுரம்
7	மதராஸ்	20	சித்தூர்
8	செங்கற்பட்டு	21	வடஆற்காடு
9	தென் ஆற்காடு	22	சேலம்
10	தஞ்சாவூர்	23	கோயம்புத்தூர்
11	இராமநாதபுரம்	24	திருச்சிராப்பள்ளி
12	திருநெல்வேலி	25	மதுரை
13	மலையாளம்	26	நீலகிரி

தென் ஆற்காடு ஜில்லா.

நாம் வசிக்கும் இந்தஜில்லாவின்பெயர் தென்ஆற்காடு ஜில்லா. இந்த ஜில்லாவிற்கு இப்பெயர் வந்ததற்கு ஒரு காரணம் உண்டு. நமது ஜில்லாவிற்கு வடக்கிலுள்ள வட ஆற்காடு ஜில்லாவில் பாலாறு என்ற ஒருநதி ஓடுகிறது. முன்னொரு காலத்தில் அந்தப் பாலாற்றை அடுத்து ஆறு காடுகள் இருந்தன. அவற்றில் ஒவ்வொன்றிலும் ஆறு ரிஷிகள் வசித்தார்கள். ஆதலால் அந்த ஆற்றிற்கு வடக்கில் இருந்தபாகத்திற்கு வடஆற்காடு என்றும், தெற்கிலுள்ள பாகத்திற்குத் தென் ஆற்காடு என்றும் பெயர்கள் வந்தன. ஆறுகாடு என்பது ஆற்காடு என்றுமாறி வழங்குகிறது. சமஸ்கிரத பாஷையில் இதை 'ஷடாரண்யம்' என்று சொல்லுகிறுர்கள்.

எல்லைகள்.

உங்களைச்சுற்றி நான்கு பக்கங்களிலும், (வலதுபுறம் இடதுபுறம், முன்புறம், பின்புறம்) இருக்கும்வஸ்துக்கள், எவை? உங்கள் பள்ளிக்கூடத்தைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் என்ன இருக்கின்றன? இவற்றை நீங்கள் கவனித்தால், நாலாபக்கங்களிலும் ரஸ்தாக்களும், வீதிகளும், வீடுகள் முதலியனவுமிருக்கக் காண்பீர்கள். அதேமாதிரியாக உங்கள் ஊரைச்சுற்றி வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய நான்கு திக்குகளிலும் நீங்கள் கவனித்தால் சில கிராமங்கள், பட்டணங்கள், வயல், நதி குன்று முதலியன இருப்பதைப் பார்க்கலாம். அப்படிச் சுற்றி இருப்பனவே அவ்வூர்க்கு எல்லைகளாம்.

உங்கள் பள்ளிக்கூடம், அல்லது ஊரின் எல்லைகளை நேரில்பார்த்துத் தெரிந்து கொள்வது மிகவும் சுலபம். ஏனெனில், நீங்களே பள்ளிக்கூடம் அல்லது ஊரின் எல்லைகளைச் சுற்றிப்பார்த்து அவைகளைக் கண்டுபிடித்துவிடலாம். உங்கள் ஜில்லா முழுவதையும் நீங்கள் சுற்றிப் பார்க்க முடியாததலால், அதன் எல்லைகளை நீங்கள் எவ்வாறு அறிவீர்கள்? ஜில்லாவின்படத்தை நீங்கள் பார்த்தால் அதன் எல்லைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

நமது ஜில்லாவின் படத்தை இப்பொழுது பாருங்கள். இந்த ஜில்லாவின் கிழக்கு எல்லை ஒருகடல். அது எந்தக் கடல் என்று சொல்லுங்கள். தென்கிழக்கு எல்லையாகத் தஞ்சாவூர் ஜில்லா இருக்கிறது. இந்த ஜில்லாவுக்குத்தெற்கே திருச்சிராப்பள்ளி ஜில்லாவும், மேற்கே சேலம் ஜில்லாவும், வடமேற்கில் வடஆற்காடு ஜில்லாவும், வடக்கில் செங்கற்பட்டு ஜில்லாவும் எல்லைகளாக இருக்கின்றன.

ஜில்லாப் படம்.

நமது ஜில்லாவின் நீளம் அகலம் முதலியவற்றை எப்படி அறிவீர்கள்? இந்த ஜில்லாப்படத்தில் குறித்திருக்கும் ஸ்கேல் விபரத்தைப் பாருங்கள். ஒரு அங்குலத்திற்குப் 16 மைல் என்று குறித்திருக்கிறது. அதாவது உங்கள் படத்தில் 1 அங்குல தூரம் பூமியில் 16 மைலைக் குறிக்கிறது. இந்தக்குறிப்பை வைத்துக்கொண்டு ஓரிடத்திற்கும் மற்றோரிடத்திற்கும் உள்ள தூரம் எவ்வளவு என்று அறியலாம். ஒரு சதுர அங்குலம் என்பது ஒரு அங்குல நீளமும் ஒரு அங்குல அகலமும் கொண்ட இடமாகும். நமது ஜில்லாப் படத்தில் ஒரு அங்குல நீளமும் ஒரு அங்குல அகலமும் எடுத்துக் கொண்டால், அது பூமியில் ($16 \times 16 = 256$)

சதுரமைல் ஆகும். இம்மாதிரி கணக்கிட்டு நமது ஜில்லாவின் நீளமும் அகலமும் எத்தனைமைல் என்று நீங்கள் சொல்லமுடியுமா?

நமது ஜில்லாவின் விஸ்தீரணம் 4008 சதுரமைல். இந்த ஜில்லாப்படத்தின்மேல் சதுர அங்குலக் கோடுகள் போட்ட ஸ்டென்சில் காகிதத்தை வையுங்கள். எத்தனை ஒரு அங்குலச் சதுரங்களும் எத்தனை அரை அங்குலச் சதுரங்களும், எத்தனை கால் அங்குலச் சதுரங்களும் உள்ளன? அவற்றையெல்லாம் கணக்கிட்டு முன் கூறப்பட்ட விஸ்தீரணம் சரிதானா என்று சொல்லுங்கள்.

அப்பியாசம் (1)—நமது ஜில்லாவுக்குத் தென்ஆற்காடு ஜில்லா என்ற பெயர் ஏன் வந்தது? படத்தைப்பார்த்து அடியிற் கண்ட வினாக்களுக்கு விடைகொடு (2) நமது ஜில்லாவுக்கும், தஞ்சாவூர் ஜில்லாவுக்கும் மத்தியிலுள்ள நதி எது? (3) நமது ஜில்லாவுக்கு எந்தத்திசையில் திருச்சிராப்பள்ளிஜில்லா இருக்கிறது? (4) திருச்சிராப்பள்ளி ஜில்லாவுக்கும் நமது ஜில்லாவுக்கும் நடுவிற் செல்லும் நதி எது? (5) நமது ஜில்லாவின் அதிகமான நீளம் எத்தனைமைல்? அகலம் எத்தனைமைல்? (6) நீளத்தையும் அகலத்தையும் பெருக்கினால் எத்தனை சதுரமைல்? (7) கூடலூருக்கும் சிதம்பரத்துக்கும் உள்ள தூரத்தை அளந்துசொல்லு. (8) கூடலூருக்கும் செஞ்சிக்கும் எவ்வளவுதூரம்? (9) வங்காளக் குடாக் கடல் நமது ஜில்லாவின் எந்தத் திசையின் எல்லை? (10) நமது ஜில்லாவுக்கு எந்தத்திசையில் சேலம் ஜில்லாவும் வட ஆற்காடு ஜில்லாவும் இருக்கின்றன?

இயற்கை அமைப்பு.

மலைகள், ஆறுகள், பள்ளத்தாக்குகள், பீடபூமிகள் முதலியன மனிதரால் ஏற்பட்டன அல்ல. இயற்கையிலேயே உள்ளன. இவற்றைத்தான் இயற்கை அமைப்பு என்பார்கள். அவற்றை நாம் அறியுமுன், நமது துறைத்

தனத்தார் நமது ஜில்லாவைப் பல பிரிவுகளாகப்பிரித்து வெவ்வேறு பெயர்கள் இட்டிருக்கிறபடியால் அவற்றை நாம் முதலில் அறிந்து கொண்டால் பிற்பாடு இயற்கை அமைப்பை இலகுவாய் அறிந்து கொள்ளலாம். (1) கூடலூர்த் தாலூகா. (2) சிதம்பரம் தாலூகா (3) விருத்தாசலம் தாலூகா (4) கள்ளக்குறிச்சித் தாலூகா (5) திருக்கோவிலூர்த்தாலூகா (6) செஞ்சித் தாலூகா (7) திண்டிவனம் தாலூகா (8) விழுப்புரம் தாலூகா என்பனவே இப்பிரிவுகள்.

நமது ஜில்லாவின் படத்தையும் அதிலுள்ள குறிப்பையும் பாருங்கள். நமது ஜில்லாவின் பெரும்பாகம் சமவெளிப் பிரதேசமாக இருக்கிறது. அதாவது கடல்மட்டத்திலிருந்து 600 அடிவரை உயர்ந்திருக்கிறது. கடல்மட்டத்திற்குமேல் 600 அடிமுதல் 1200 அடிவரை உயர்ந்துள்ள பூமி இந்த ஜில்லாவின் மேற்குப்பாகத்தில் புள்ளிகளால் குறிக்கப்பட்டிருக்கிறது. அதினிலும் உயர்ந்தபூமி கள்ளக்குறிச்சித் தாலூகாவில் மேற்கில் இருக்கிறது. அந்தப்பக்கம் சாய்ந்த கோடுகளால் குறிக்கப்பட்டிருக்கிறது.

இந்தஜில்லா மேற்குப் பக்கத்திலிருந்து கடற்கரையை நோக்கிப் படிப்படியாய்த் தாழ்ந்துகொண்டே போகிறது. மேலும் வடக்கில் இருந்து தெற்குப்பக்கமாயும் தாழ்ந்து இருக்கிறது. இதை எப்படி அறிவீர்கள்? நமது ஜில்லாவில் ஓடும் நதிகள் எந்தத் திசையிலிருந்து எந்தத்திசையை நோக்கி ஓடுகின்றன பாருங்கள். நதிகள் தாழ்ந்த பூமியை நோக்கிச்செல்லும். ஆதலால் நதிகள் எந்தத் திசையை நோக்கிச் செல்லுகின்றனவோ அந்தப்பக்கம் தாழ்ந்திருக்கிறது என்று நாம் அறியலாம்.

மலைகள்.

கல்ராயன் மலை.—கிழக்குத்தொடர்ச்சி மலையின் ஒரு பாகத்திற்கு நமது ஜில்லாவில் கல்ராயன்மலை என்று பெயர். நமது ஜில்லாவின் மேற்குப் பக்கத்தில் கள்ளக்குறிச்சித் தாலூகா இருக்கிறது. அதற்கும் சேலம் ஜில்லாவுக்கும் மத்தியில் இந்த மலைகள் ஒரு சுவர்போல் இருக்கின்றன. இதன் தெற்கு வடக்கு நீளம் 12மைல். அகலம் சில இடங்களில் 12மைல்; சில இடங்களில் 8 மைல். இந்த ஜில்லாவில் கடல் மட்டத்துக்குமேல் 200 அடிவரை உயர்ந்திருக்கிறது. இந்த மலையில் இரண்டு கணவாய்கள் உண்டு. அவற்றில் ஒன்று இந்த மலையின் வடக்குப் பக்கத்தில் இருக்கிறது. அதற்குச் செங்கம் கணவாய் என்று பெயர். இந்த மலையின் தெற்கேயுள்ள மற்றொரு கணவாய்க்கு ஆத்தூர் கணவாய் என்று பெயர். இந்த இரண்டு கணவாய்களின் வழியாகத்தான் நமது ஜில்லாவிலிருந்து சேலம்ஜில்லாவுக்குப் போகவேண்டும்.

இந்த மலைக்குக் கல்ராயன் மலை என்று பெயர் வந்ததற்கு ஒரு காரணம் சொல்லுகிறார்கள். முன்னொரு காலத்தில் காஞ்சிபுரத்தில் இருந்து 5 சகோதரர்கள் புறப்பட்டு வந்து இந்த மலையில் தங்கினார்கள். அவர்களின் பெயர்கள் பெரிய கல்விராயன், சின்னக் கல்விராயன், சடையக் கவுண்டன், குறும்பக் கவுண்டன், அரியக் கவுண்டன் என்பன ஆம். இந்த 5 பேர்களும் தங்கள் இடத்தைப் பங்கிட்டுக் கொண்டார்கள். அவற்றில் தெற்கிலும் மேற்கிலுமுள்ள மலைகளைப் பெரிய கல்விராயன் எடுத்துக் கொண்டான். அதற்கு மேற்கே சேலம் ஜில்லாவில் உள்ள தாழ்ந்த குன்றுகளைச் சின்னக் கல்விராயன் எடுத்துக்கொண்டான். ஆத

லால் இம்மலைகளுக்குக் கல்விராயன் மலைகள் என்றுபெயர் வந்ததாம். கல்விராயன் என்பது கல்ராயன் என்று மாறி விட்டது. இந்த மலைக்கு நமது ஜில்லாவில் காளேறிமலை என்று பெயர் உண்டு.

இந்த மலையிற் பல மடுக்களும், காடுகளும் உண்டு. இந்த மலையின் தென் கிழக்கு ஓரத்திலுள்ள சின்னத் திருப்பதியை அடுத்த மலையிலிருந்து பார்த்தால், அங்குள்ள காட்சி மிகச் சிறந்திருக்கும். இதுமாதிரியான அழகான காட்சி தென்னிந்தியாவில் எங்கும் இல்லை. சமயம் அகப்பட்டபோது, நீங்கள் அந்தக் காட்சியைப் பார்க்கவேண்டும். பொதுவாக நமது ஜில்லாவின் மலைகள் சிறந்த காட்சியைக் கொடுக்கின்றன.

செஞ்சிமலை — இது செஞ்சித்தாலூகாவின் மத்தியில் இருக்கும் குன்றுகளின்சேர்க்கை. இவற்றுக்கும் கல்ராயன் மலைக்கும் அதிக வித்தியாசம் உண்டு. செஞ்சிக் குன்றுகளில் பெரும்பாலும் மரம், செடி, கொடிகள் உண்டாவது இல்லை. ஏனென்றால் அவை பெரும்பெரும் பாறைகளால் ஆனவை. அவை ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டிருக்க இல்லை. இம்மலை 4மைல் நீளம் உள்ளது. இம்மலைக்கு மேற்குப்பக்கத்திற் பாக்கம் என ஒரு ஊர் உண்டு. அதன் அருகில் ஒரு பீடபூமி இருக்கிறது. வெகுகாலத்துக்குமுன்னே இந்தஇடம் சமநிலம்ஆக்கப்பட்டு விவசாயத்துக்குத்தகுதியாகச் செய்யப்பட்டது. இங்கு ஒரு ஏரியும், மதகும் இருந்த அடையாளங்கள் இன்னும் இருக்கின்றன. இப்போது:இங்குப் பயிரிடாததற்கு ஒருகாரணம் சொல்லுகிறார்கள். இந்த இடத்தில் கந்தருவர்கள் இரவில் வந்து பாடுகிறார்களாம். இவர்களுக்குப் பயந்து சுற்றுப் பிரதேசங்களில் உள்ள ஜனங்கள் அங்குப் பயிரிடுவதில்லை.

என்கிறார்கள். இதனை அடுத்த காடுகளிற் புள்ளி மான்கள் வசிக்கின்றன. செஞ்சி மலையின் 3 குன்றுகளின் மேல் கட்டப்பட்ட மூன்று பலமான கோட்டைகள் உண்டு.

கேப்பர் மலை:—இது செம்மண்ணால் ஆகிய குன்று. இது புதுச்சேரிக்கு மேற்கே 10 மைல் தூரத்தில் இருந்து ஆரம்பிக்கிறது. அங்கிருந்து இது தென் மேற்காகச் சிதம்பரம் தாலூகாவிலுள்ள ஸ்ரீமுஷ்ணம்வரைபரவிஇருக்கிறது. இதற்கு இப்பெயர் வந்ததற்கு ஒரு காரணம்சொல்லுகிறார்கள். கூடலூருக்கு மேற்கே இதில் ஒரு சமவெளி இருக்கிறது. அதில் பிரான்ஸில் கேப்பர் என்றஇங்கிலீஸ்சேனைத் தலைவர் ஒருவர் பங்களாக் கட்டிக்கொண்டு குடியிருந்தார். ஆதலால் இதற்குக் கேப்பர்மலை என்று பெயர் வந்தது. இப்போது கேப்பர் கட்டியிருந்த பங்களாவின் பக்கத்தில் இந்த ஜில்லாவின்சிறைச்சாலை இருக்கிறது. இந்தமலைசெம்மண்ணால் ஆகியதால், புதுச்சேரியில் உள்ளவர்கள் இதைச் செம்மலை என்று சொல்லுகிறார்கள். இதற்குவண்டிப்பாளையம்மலை என்ற மற்றொரு பெயரும் உண்டு. இவற்றைத் தவிர சில தனிக் குன்றுகளும் இந்த ஜில்லாவில் இருக்கின்றன. அவைகள் கள்ளக்குறிச்சித் தாலூகாவின் மேற்குப் பாகத்திலும், திண்டிவனம் தாலூகாவிலும்உள்ளன. அவற்றில் கள்ளக்குறிச்சித் தாலூகாவிலுள்ள கவுண்டன்மார் மலைகளும், திண்டிவனம் தாலூகாவிலுள்ள பெருமுக்கல் மலையும், பாக்கம் மலையும் பெரியவை.

பெருமுக்கல் மலை—திண்டிவனத்துக்குத் தென்கிழக்கே 7 மைல் தூரத்தில் இருக்கிறது. இது ஒருகுன்று. சமஸ்கிருதத்தில் முக்ஷியாசலம் என்று பெயர். இதன்மேல் ஒரு குகையும், குளமும் உண்டு. அந்தக் குகையில் இராமாயணம் பாடிய வால்மீக முனிவர் தங்கி இருந்தாராம்.

நதிகள்.

நமது ஜில்லாவின் நதிகள் கிழக்காகவும்தெற்காகவும் ஓடி வங்காளக் குடாக் கடலில் விழுகின்றன.

தேன்பெண்ணை ஆறு—இது மைசூர் ராஜ்யத்தில் நந்திதுர்க்கம் என்னும் மலைக்குச் சமீபத்தில் உற்பத்தியாகிறது. அங்கிருந்து சேலம் ஜில்லாவில் நுழைந்து கல்ராயன்மலையிலுள்ள செங்கம் கணவாய் வழி இந்த ஜில்லாவில் கள்ளக்குறிச்சித்தாலூகாவிற்பிரவேசிக்கிறது.படத்தைப்பார்த்து அது எந்த எந்தத் தாலூகாக்களின் வழியே ஓடி எந்த ஊருக்குச் சமீபத்திற் கடலில் விழுகிறதென்று சொல்லுங்கள். இந்த நதியில் வெள்ளம் திடீரென்று வரும். இதைப் பற்றி ஒரு பழமொழி உண்டு. அதாவது 'வெண்ணெய் உருகுமுன் பெண்ணை உருகும்' என்பதே. இந்த நதியிலிருந்து ஒரு கிளைநதி பிரிந்துசெல்லுகிறது. அதற்கு மலட்டாறு என்று பெயர். பெண்ணையில் அதிகமாக வரும்வெள்ளம், மலட்டாற்றின் வழியேசென்று கெடிலநதியில்விழுகிறது. திருக்கோவிலூருக்குச் சமீபத்தில் பெண்ணை ஆற்றுக்கு ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது. அந்த அணையின் நீளம்1600அடி. பண்ணுருட்டியில்இந்தநதியின்மேல்தென்னிந்திய இருப்புப்பாதை கம்பேனியார் ஒரு பெரியபாலம் கட்டியிருக்கிறார்கள். அதன்மேற் புகைவண்டிகள் செல்லுகின்றன. கூடலூருக்கு அருகிலும் இதன்மேல் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது. இந்த நதியின் மொத்தநீளம் 230 மைல். தை மாதத்தில் கங்காநதி இதில் வந்து கலப்பதால் இது ஒரு புண்ணிய நதியாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த நதியைப்பற்றி ஒரு கதை உண்டு. முன்னொரு காலத்தில் ஒரு பெரிய பஞ்சம் உண்டானது. அப்போது சிவபெருமான் பார்வதி தேவியை ஒரு நதி வடிவாக நந்தி

துர்க்கத்தில் இருந்து செல்லச் சொன்னார். அங்ஙனமே பார்வதி தேவியும் செய்தனள். எனவே இந்நதி பார்வதி தேவியின் வடிவமென்று சொல்லுகிறார்கள். மைசூர் ராஜ்யத்தில், பரமசிவனுடைய பினாகினி என்னும் வில்லைப் போல் இது வளைந்து செல்லுவதால், இதற்குப் பினாகினி என்னும் ஒருபெயர் வழங்குகிறது.

கெடிலநதி—கெடிலம் என்பதற்கு ஆழ்மான நீர் ஊற்று என்று அர்த்தம். இந்த நதியின் அடியில் பல நீர் ஊற்றுகள் இருப்பதால் இதற்கு இப்பெயர் வந்தது போலும். இதற்குக் கருடநதி என்ற மற்றொரு பெயரும் உண்டு. இப்பெயர் சம்பந்தமாக ஒருகதை உண்டு. திருவாஹீந்திரபுரம் கோவிலில் உள்ள தேவநாதப்பெருமாளுக்கு அபிஷேகம் செய்யத் தீர்த்தம் தேவையாக இருந்தது. பெருமாளுக்கு வாகனமாகிய கருடாழ்வான் அப்போது தன் மூக்கினால் பூமியிற் கோடு கிழித்தான். உடனே அதன்வழி ஜலம் பெருகி அவ்வூர்க் கோவிலின் பக்கம் வந்தது. இவ்விஷயம் அவ்வூர்த் தலபுராணத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

கெடிலநதி கள்ளக்குறிச்சித் தாலூகாவில் ஒரு ஏரியில் உற்பத்தி ஆகிறது; அங்கிருந்து நேர் கிழக்காக இந்த ஜில்லாவின் குறுக்கே ஓடுகிறது. இது புதுக் கூடலூர் வழியாகப் போய் மஞ்சக்குப்பத்துக்கும் திருப்பாதிருப்புலியூருக்கும் மத்தியில் ஓடிச் செயின்ட் டேவிட் கோட்டைச் சமீபத்தில் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து கடலில் விழுகிறது. இதன் வடக்குப் பிரிவு கடலில் விழும் இடத்தில் தேவனாம்பட்டணம் இருக்கிறது. அங்கேதான் செயின்ட் டேவிட் கோட்டை கட்டப்பட்டு இருக்கிறது. இந்த நதி கடலில் விழும் இடத்தில் ஒரு கழிபோல் இருக்

கிறது. ஆதலால் இந்த இடங்களில் எப்போதும் படவுகள் சென்றுகொண்டிருக்கின்றன. இந்த நதியில் 3 அணைகளைக் கட்டி அங்கிருந்து தண்ணீரைத் திருப்பிக் கொண்டு போய் விவசாயத்துக்கு உபயோகப் படுத்துகிறார்கள். அந்த அணைகள் திருவதிகை, வானமாதேவி, திருவாஹீந்திரபுரம் என்ற ஊர்களிற் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த நதிக்கு மேற்கிலுள்ள திருப்பாதிரிப்புலியூருக்கும், கிழக்கிலுள்ள மஞ்சக்குப்பத்துக்கும் நடுவில் ஒரு பெரிய பாலம் கட்டப்பட்டிருக்கிறது. இந்த நதியில் கூடலூருக்கும், நெல்லிக்குப்பத்துக்கும் மத்தியில் ஒரு பெரிய இருப்புப் பாலம் கட்டப்பட்டிருக்கிறது. அதன்மேல் புகைவண்டிகள் செல்லுகின்றன. எந்த நதியில் தண்ணீர் அதிகமாக வந்தால், இந்த நதிக்கு வரும்? எந்த நதியின் வழி அந்தத் தண்ணீர் வருகிறது?

செஞ்சி ஆறு—இது செஞ்சித் தாலூகாவில் ஒரு ஏரியில் உற்பத்தியாகிறது. முதலில் செஞ்சித் தாலூகாவிலும், பிறகு விழுப்புரம் தாலூகாவிலும் ஓடி இரண்டாகப் பிரிந்து கடலில் விழுகிறது. இதன் வடக்குப் பிரிவுக்கு ஆரியங்குப்பத்து ஆறு என்றும், தெற்குப் பிரிவுக்கு கிளிஞ்சில் ஆறு என்றும் பெயர்கள் உண்டு. இதில் மழை காலத்தில் மட்டும் ஜலம் ஓடும். இந்த நதியில் 3 அணைகள் கட்டப்பட்டுள்ளன.

உப்பனாறு—விருத்தாசலம் தாலூகாவில் உற்பத்தியாகிறது. சிதம்பரம், கூடலூர்த் தாலூகாக்களுக்கு எல்லையாக ஓடிக் கெடிலநதியின் தெற்குக் கிளையிற் கலக்கிறது.

வெள்ளாறு—இது சேலம் ஜில்லாவில் பச்சை மலைக்கும், கொல்லிமலைக்கும் மத்தியிலுள்ள பள்ளத்தாக்கில்

சுவேதநதி (வெள்ளையாறு) உற்பத்தியாகிறது. வசிஷ்ட நதி என்ற மற்றொரு நதியும் சேலம் ஜில்லாவில் உற்பத்தியாகிறது. இந்த இரண்டு நதிகளும் கொஞ்ச தூரம் சென்று ஒன்றுசேர்ந்து வெள்ளாறு என்ற பெரிய நதியாகிறது. இது நமது ஜில்லாவுக்கும், திருச்சிராப்பள்ளி ஜில்லாவுக்கும் எல்லையாக மத்தியில் ஓடுகிறது. பிறகு நமது ஜில்லாவில் விருத்தாசலம் தாலூகாவுக்கும், சிதம்பரம் தாலூகாவுக்கும் எல்லையாக ஓடிப் பரங்கிப்பேட்டை என்னும் பட்டினத்தருகில் வங்காளக் குடாக்கடலில் விழுகிறது. இந்த நதியில் 3 இடங்களில் அணை கட்டி நீரைத் திருப்பிக் கொண்டுபோய் விவசாயத்துக்கு உபயோகப்படுத்துகிறார்கள். இது கடலில் விழுமிடத்தில் அதிக ஆழமாக இருப்பதால் கடலில் இருந்து 4 மைல் தூரம் வரை படகுகள் செல்லுகின்றன.

இந்நதியைப் பற்றி ஒரு கதை உண்டு. முன்னொரு காலத்தில் சுவேத வாகனனான அருச்சுனன் யாத்திரை சென்றபோது இந்த நதி உற்பத்தியாகும் இடத்தில் பூசை செய்ய உட்கார்ந்தான். அங்குத் தண்ணீர் இல்லாததால் அம்பாற் பூமியைத் துளைத்தான். அத்துளையிலிருந்து தண்ணீர் கிளம்பி வந்தது. ஆதலால் இதற்கு முதலில் சுவேதநதி என்ற பெயர் வந்தது.

வெள்ளாற்றுக்குச் சில உபநதிகள் இருக்கின்றன. மணி, முக்தா என்ற இரண்டு சிற்றாறுகள் கல்ராயன் மலையின் கிழக்குச் சரிவில் உற்பத்தியாகிக் கொஞ்சதூரம் ஓடிப் பிறகு ஒன்று சேர்ந்து ஸ்ரீமுஷ்ணம் என்ற ஊருக்குக் கிழக்கே வெள்ளாற்றிற் கலக்கின்றது. மணிமுக்தாநதி வெள்ளாற்றிற் கலக்குமுன்; இதில் 2 நதிகள் கலக்கின்றன.

அந்த இரண்டு நதிகள் கோமுக நதியும், மயூர நதியுமாம். இவை நல்லூருக்குச் சமீபம் மணிமுக்தாவுடன் கலக்கிறது.

கோள்ளிடம்—இது காவேரி நதியின் பெரிய கிளைநதி. திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 2-வது மைலில் காவேரி நதியிலிருந்து இரண்டாகப் பிரிகிறது. அவற்றுள் தென் பிரிவு காவேரிநதி. வட பிரிவு கொள்ளிடம் ஆறு. இது நமது ஜில்லாவுக்கும் தஞ்சாவூர் ஜில்லாவுக்கும் மத்தியில் எல்லையாக 36 மைல் தூரம் ஓடிப் பரங்கிப்பேட்டைக்குத் தெற்கே 6 மைல் தூரத்தில் கடலில் விழுகிறது. இதன் ஜலம் சிதம்பரம் தாலூகாவில் விவசாயத்துக்கு உபயோகப் படுத்தும்படி 2 கால்வாய்கள் வெட்டி அதன் வழியே கொண்டுபோகப் படுகின்றது. அந்தக் கால்வாய்களின் பெயர்கள், ராஜாம் வாய்க்கால், வடவாறு வாய்க்கால் என்பனவாம். இவற்றின் ஜலம் பாய்வதால் தான் சிதம்பரம் தாலூகா அதிகச் செழிப்பாக இருக்கிறது.

அப்பியாசம் (2)—(1) நமது ஜில்லாவில் மலை மிகுந்த பாகம் எது? (2) இந்த ஜில்லா எந்தத் திசையை நோக்கிச் சரிவாய் இருக்கிறது? (3) அந்தச் சரிவை எப்படி அறிகிறாய்? (4) தென் ஆற்காடு ஜில்லாவின் படத்தை எழுதி அதிலுள்ள மலைகளையும் நதிகளையும் குறி. (5) பெண்ணையாற்றின் கிளைநதி எது? (6) வெள்ளாற்றின் உபநதி எது? (7) கேப்பர் மலையின் வேறு பெயர் எது? (8) நமது ஜில்லாவில் அழகான காட்சி தரும் பாகம் எது?

சீதோஷ்ண ஸ்திதி.

சீதம் என்றால் குளிர்ச்சி. உஷ்ணம் என்றால் சூடு. ஸ்திதி என்றால் நிலைமை. ஓர் இடத்தின் சீதோஷ்ண ஸ்திதியைப் பற்றிப் பேசும்பொழுது, அந்த இடத்தில் எப்போது குளிர்ச்சி எப்போது அதிக உஷ்ணம் என்று சொல்லுவதுதான் சீதோஷ்ணஸ்திதி என்பதற்குப்பொருளாம்.

பொதுவாக நமது ஜில்லா உஷ்ணமான பிரதேசம். கடலோரம் உள்நாட்டைப் பார்க்கிலும் குளிர்ச்சியாக இருக்கிறது. ஐரோப்பியர்கள் கூடலூரில் முன் காலத்திற் சௌக்கியமாக வசித்தார்கள். நோயாளிகளை உடைய பட்டாளங்கள் முன் காலத்திற் கூடலூருக்கு அனுப்பப்பட்டன. வெயிற் காலம் ஆகிய சித்திரைமாதம் முதல் ஆவணி வரையில் உள்ளபடி உஷ்ணம் பொறுக்க முடியாது. ஆயினும் நமது ஜில்லா தேக சௌக்கியத்திற்கு ஏற்றதாக இருக்கிறது.

மழை.

ஒரு பாத்திரத்தில் நீரை ஊற்றி அடுப்பில் வைத்துக் காய்ச்சினால் அதன்மேல் புகைபோல ஒரு வஸ்து கிளம்புகிறது. அது செல்லும் வழியில் உங்கள் கற்பலகையை ஆவது குளிர்ச்சியான பாத்திரத்தையாவது பிடியுங்கள். என்ன ஆகும் தெரியுமா? பாத்திரத்தில் அல்லது கற்பலகையில்நீர்த்துளிகள்ஒட்டிக்கொண்டிருக்கும். அது என்ன தெரியுமா? தண்ணீரைக் காய்ச்சுவதால் அது கொதித்து மேலே உண்டான நீராவி. அந்த ஆவியின்மேல் குளிர்ந்த வஸ்து பட்டதால் அது தண்ணீராக மாறினது.

இதுபோலவே மேகமும் மழையும் உண்டாகின்றன. சமுத்திரம் முதலிய நீர்நிலைகளில் உள்ள தண்ணீர் சூரிய

வெப்பத்தால் ஆவியாக மாறுகிறது. அந்தஆவிபடைபடையாகச் சேர்ந்திருக்கையில், அதை மேகம் என்கிறோம். அது குளிர்ந்த மலை, காடு முதலிய இடங்களை அடையும் பொழுது, அவற்றால் குளிர்ச்சியாகிறது. குளிர்ந்த மேகம் நீராகும். நீர் காற்றைவிடக் கனமானதால் மழையாக வருஷிக்கின்றது. மழை சீக்கிரம் பெய்யுமென்று நீங்கள் எப்போதாவது சொன்னதுண்டா? மேகத்தின் கறுப்பு நிறத்தையும், அடிக்கும்காற்றையும் கவனித்துமழைவரும், அல்லது வராது என்று சொல்லலாம்.

தாலூகா ஆபீசிலும் வேறு பெரிய இடங்களிலும் மழைமானி என்ற ஒருகருவியால் எவ்வளவு மழைஅங்குப் பெய்ததென்று கணக்கிடப்படுகிறதைநீங்கள்பார்க்கலாம். பொதுவாக மழையை அங்குல அளவாகக் கணக்கிடுவது வழக்கம். அங்குல அளவு என்பது, பூமியிற் பெய்யும் மழைநீரை ஆவியாக மாறுமலும், பூமிக்குள்செல்லாமலும், இருக்கும்படி செய்து அதன் உயரத்தை (ஆழத்தை) அங்குல அளவால் அளந்து அளவிடுவது ஆகும்.

இந்தஜில்லாவில் மழைக்குக்குறைவுஇல்லை. மழையும் வேண்டிய பருவங்களிற் பெய்கிறது. நமது ஜில்லாவுக்கு இரண்டு மழைப் பருவங்கள் உண்டு. அவை தென்மேற்கு மழைப்பருவமும், வடமேற்கு மழைப்பருவமும் ஆம். தென்மேற்கு மழைப்பருவம் ஜூன் மாதம்முதல் அக்டோபர் வரை நீடித்திருக்கும். அப்போது சூரியனுடைய வெப்பத்தால் நமது ராஜதானிக்கு மேற்கிலுள்ள அராபிக் கடலின் தண்ணீர் நீராவியாகிக் காற்றால் தாக்கப்பட்டு, நமது ஜில்லாவின் மேற்கிலுள்ள கல்ராயன் மலையிலுள்ள

கணவாய்களின் வழியாய் நமது ஜில்லாவில் நுழைந்து அடுத்துள்ள தாலூகாக்களில் 40 அங்குலம் மழை பெய்கிறது. வடமேற்குப் பருவக் காற்று, நமது ராஜதானிக்குக் கிழக்கிலுள்ள வங்காளக் குடாக்கடலிலுள்ள நீர் சூரிய வெப்பத்தால் நீராவியாகிக் காற்றால் அடித்துக் கொண்டு வரப்பட்டு இம்மழைப் பருவத்தை யுண்டாக்குகிறது. இக்காலம் ஆகஸ்டு முதல் டிசம்பர் முடிய நீடித்திருக்கும். இதுவே நமது ஜில்லாவுக்கு மழை காலம். அப்போது இங்குள்ள கடற்கரையை அடுத்த பாகங்களிற் பெய்யும் மழையின் சராசரி அளவு 50 அங்குலம். இந்த ஜில்லா முழுவதிலும் வருஷத்திற் பெய்யும் மழையின் சராசரி அளவு 46½ அங்குலம். ஜில்லாவின் மேற்குப் பாகத்துக்கும் கடற்கரையை அடுத்த பாகத்துக்கும் மத்தியிலுள்ள பிரதேசங்களில் 45 அங்குலம் மழை பெய்கிறது. சில சமயங்களில் கடற்கரை யோரங்களில் அதிகமான மழை பெய்வதுண்டு. அதனாற் பயிர் பச்சைகளுக்கும் பாலங்களுக்கும் சேதம் நேரும்.

அப்பியாசம் (3)=(i)நமது ஜில்லாவில் அதிக உஷ்ணமான பாகம் எது?(2)கூடலூர்த் தாலூகாவில் கோடையிலும் உஷ்ணம் குறைந்திருப்பதற்குக் காரணம் என்ன? (3) நமது ஜில்லாவுக்குரிய மழை காலம் எது? (4) நமது ஜில்லாவில் அதிக மழை பெறும் தாலூகாக்கள் எவை? (5) குறைந்த மழை பெறும் தாலூகாக்கள் எவை?

நிலத்தின் தன்மை.

பூமியெல்லாம் ஒரே தன்மையாக இராது. ஒவ்வொரு இடமும் ஒவ்வொரு மாதிரி இருக்கும். இந்த விஷயம் முன்னமே உங்களுக்குத் தெரியும். நமது ஜில்லாவின் பூமி 3 வகையாக இருக்கிறது. சிலபாகம் கறுப்புமண்

பூமியாகவும், சிலபாகம் செம்மண்பூமியாகவும், சிலபாகம் மணற்பாங்காகவும் இருக்கின்றன. விருத்தாசலம், சிதம்பரம் என்ற தாலூகாக்கள் கறுப்புமண்பூமியால் ஆனவை. திருக்கோவிலூர், விழுப்புரம், திண்டிவனம் என்ற தாலூகாக்கள் செம்மண் பூமியால் ஆனவை. கடலோரம் மணற்பாங்கான பூமியாக இருக்கிறது. கள்ளக்குறிச்சித் தாலூகாவின் பெரும்பாகம் மலைப்பிரதேசம்.

நீர்வளம்.

நமது ஜில்லாவில் விவசாயத்துக்கு வேண்டிய தண்ணீர் வசதி அதிகம். இங்குள்ள நதிகளையும் அவற்றிற் கட்டப்பட்ட அணைகளையும் பற்றி முன்பே படித்திருக்கிறீர்கள். தென்பெண்ணைக்குத் திருக்கோவிலூரில் கட்டப்பட்ட அணையிலிருந்து 3 பெரும் கால்வாய்களின் வழி தண்ணீர் விவசாயத்துக்குக் கொண்டுபோகப் படுகிறது. அந்த நீரால் விழுப்புரம், கூடலூர் தாலூகாக்களில் சுமார் 30,000 ஏக்கர் பூமி சாகுபடி ஆகிறது. இந்த நதிக்குத் திருவதிகையிலும் திருவஹீந்திரபுரத்திலும் கட்டப்பட்ட அணைகளிலிருந்து பிரிந்துசெல்லும் கால்வாய்கள், கூடலூர்த் தாலூகாவிலுள்ள நிலங்களின் பாய்ச்சலுக்கு உபயோகமாகின்றன. மணிமுக்தா நதியில், பெலாந்துறை அணை, சத்தியத்தோப்பு அணை என்ற இரண்டு அணைகள் கட்டப்பட்டு இருக்கின்றன. பெலாந்துறை அணையில் இருந்து பிரிந்து செல்லும் நீர் சிதம்பரம், விருத்தாசலம் தாலூகாக்களின் நிலங்களிற்சென்று பாய்கின்றன. சத்தியத்தோப்பு அணையிலிருந்துதான் ராஜாம் வாய்க்கால் பிரிந்து கூடலூருக்குப் போகிறது. பெண்ணைநதியிலும் மலட்டாற்றிலும் ஊற்றுகளைத் தோண்டி அங்கு ஊறும் தண்ணீரைத் திருப்

பிக்கொண்டுபோய்நிலங்களுக்குப் பாய்ச்சிச்சாகுபடிசெய்கிறார்கள். விழுப்புரம் தாலூகாவில் நீர் ஊற்றுகள் உண்டு. அந்த இடங்களைச் சுற்றித்தோண்டினால், அங்கே அதிக நீர் பெருகிக்கால்வாய்களின்வழி ஓடுகிறது. அப்படிப்பட்டஒரு கால்வாய் விழுப்புரம் தாலூகாவில் 3 மைல்தூரம் ஓடுகிறது.

ஏரிகள்—நமது ஜில்லாவில் ஏரிகளுக்குக் குறைவு இல்லை. சென்னைராஜதானியில் ஏரிகள் நிரம்பிய ஜில்லாக்களில் இதுவும்ஒன்று. நமது ஜில்லாவிலுள்ள முக்கியமான ஏரிகளையும், அவற்றால் சாகுபடியாகும் நிலத்தையும் இங்குக் குறிப்போம்.

கூடலூர்த் தாலூகா—வாலாஜா ஏரி, பெருமாள் ஏரி.
சிதம்பரம் தாலூகா—வீராணத்து ஏரி, பொன்னேரி.
திருக்கோவிலூர் தாலூகா—திருக்கோவிலூர் ஏரி.
விழுப்புரம் தாலூகா—அலங்கூர் ஏரி. பாக்கம் ஏரி, வளவனூர் ஏரி.

இவற்றிற் பெரியது வீராணத்து ஏரி; அதன் நீளம் 10 மைல்; அகலம் 3 மைல். இதற்குத் தண்ணீர் கொள்ளிடத்தின் கீழ் அணைக்கட்டிலிருந்து வருகிறது. இந்த ஏரி ராஜராஜசோழனாற் கட்டுவிக்கப்பட்டது. இதன் நீரால் 50,000ஏக்ரா நிலங்கள் சாகுபடி ஆகின்றன. இதற்கடுத்த பெரிய ஏரி, பெருமாள் ஏரி. இதன் நீளம் 7 மைல், அகலம் 1 மைல். இதன் நீரால் சுமார் 37000 ஏக்கர் நிலங்கள் சாகுபடி ஆகின்றன. வாலாஜா ஏரி முற்கூறிய ராஜாம் வாய்க்கால் நீரால் நிரம்புகிறது. இது வண்டலாலும் மண்ணாலும் தூர்ந்துகொண்டுவருகிறது. ஆதலால்இப்பொழுது இது அதிகப் பிரயோசனப்படவில்லை. இதன் நீரால் 5000 ஏக்ரா மட்டும் சாகுபடி ஆகிறது.

கிணறுகள்— ஆற்றுநீரும், ஏரி நீரும் கிடையாத இடங்களிற் கிணறுகளைத் தோண்டிக்கொண்டு நீரை இறைத்துச் சாகுபடி செய்கிறார்கள். விழுப்புரம் தாலூகாவிலும், திண்டிவனம் தாலூகாவிலும் கிணறுகள் அதிகம். திண்டிவனம் தாலூகாவில் தரை பாறையாக இருக்கிறது. ஆதலால் கிணறுகள் தோண்ட அங்குப் பணச் செலவு ஆகிறது. கள்ளக்குறிச்சித் தாலூகாவில் இப்போது பல கிணறுகள் தோண்டுகிறார்கள்.

விளைபொருள்கள்.

தாவரங்கள் - நன்செய்ப் பயிர்.

நெல்—இந்த ஜில்லா நீர்வளமுள்ள ஜில்லா ஆதலால், இங்கே நெல் விசேஷமாகப் பயிரிடப்படுகிறது. நெல்லை எப்படிப்பட்ட நிலத்தில் எங்ஙனம் பயிரிடுகிறார்கள்? நெல்லிற் பலவகை உண்டு. அவற்றுள் சம்பா, கார் என்ற 2 பிரிவு முக்கியமானவை. சம்பாநெல் விளைய அதிகக் காலம் செல்லும். அதன் விலையும் அதிகம். அது சாப்பாட்டுக்கு அதிக உருசியாயும் இருக்கும். சிதம்பரம். விழுப்புரம், திண்டிவனம், கூடலூர் என்ற தாலூகாக்களில் நெல் விளைவு அதிகம். விருத்தாசலம் தாலூகாவில் குறைவு. சிதம்பரம் தாலூகாவில் விளையும் சின்னச் சம்பாவும் கார்நெல்லில் சுவர்ணவாரியும் அந்த இனத்தில் உயர்ந்தவைகள். காரை எப்பொழுது பயிரிட்டு எப்பொழுது அறுக்கிறார்கள்? சம்பாவை எப்பொழுது பயிரிட்டு எப்பொழுது அறுக்கிறார்கள்? உங்கள் ஊரில் பயிரிடும் நெல் வகை எது? ஸ்ரீமுஷ்ணத்தை அடுத்துள்ள புன்செய்களில் ஒருவகை நெல் பயிரிடுகிறார்கள்.

கரும்பு—நீங்கள் கரும்பு தின்றிருப்பீர்கள். கரும்பின் உருசி இப்படிப்பட்டது என்று உங்களுக்குத் தெரியும். கரும்புத் தோட்டத்தை நீங்கள் பார்த்திருக்குறீர்களா? கரும்பு நன்செயிற் பயிரிடப்படுகிறது. கரும்பை நட்ட 9 மாதத்திற்குப் பிறகு வெட்டலாம். கரும்பில் இரண்டு வகை உண்டு. ரஸ்தாளிக் கருப்பு அல்லது ராமக் கரும்பு அதிக ரசமுள்ளது; கடிப்பதற்கு மெதுவாகவு மிருக்கும். வெள்ளைக் கரும்பு அல்லது நாணற் கரும்பு வன்மையாயும் ரசம் குறைந்ததாயும் இருக்கிறது. இதற்குத் தண்ணீர் அதிகமாய் வேண்டியது இல்லை. கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர், கூடலூர் முதலிய தாலூகாக்களிற்கரும்புவிசேஷமாகப் பயிரிடப்படுகிறது. கள்ளக்குறிச்சித் தாலூகாவில் விளைவது வெள்ளைக் கரும்பு. கூடலூர்த் தாலூகாவில் நெல்லிக்குப்பத்துக்கு அருகில் ரஸ்தாளிக் கரும்பு பயிரிடப்படுகிறது. கொஞ்ச காலமாக மோர்சு கரும்பு என்ற ஒருவகைக் கரும்பை நமது ஜில்லாவிற் பயிரிடுகிறார்கள்.

கரும்பை நாம் தின்கிறோம். அதைத் தவிர அது நமக்கு எவ்வாறு உபயோகப்படுகிறதென்று தெரியுமா? கரும்பை ஆலையில் இட்டு ஆட்டி அதன் சாற்றை எடுத்துக் காய்ச்சி வெல்லம, சர்க்கரை, கற்கண்டு, தேன்பாகு முதலியன செய்கிறார்கள். நெல்லிக்குப்பத்திற் பாரி கம்பேனியார் ஒரு பெரிய கருப்பு ஆலைத் தொழிற்சாலை வைத்து நடத்துகிறார்கள்.

நெல்லிக் குப்பத்தை அடுத்த கொடிக்கால்களில் வெற்றிலையும் வாழையும் பயிரிடப்படுகின்றன. சில இடங்களில் மரவள்ளிக்கிழங்கு உண்டாக்கப்படுகிறது.

புன்செய்ப் பயிர்.

நமது ஜில்லாவில் விளையும் புன்செய்ப்பயிர்களில் நிலக்கடலை (மணிலாக்கொட்டை) முக்கியம் ஆனது. கம்பு வரகு, கேழ்வரகு, எள்ளு முதலியனவும் பயிரிடப்படுகின்றன. அதிக ஊக்கத்துடன் மணிலாக்கொட்டையைப் பயிரிடுகிறார்கள். அதனால் அதிக லாபம் கிடைக்கிறது. அதிக உரம் இல்லாத நிலங்களில் அது நன்றாக உண்டாகிறது. விழுப்புரம், திண்டிவனம், திருக்கோவிலூர் என்னும் தாலூகாக்களில் நிலக்கடலையை அதிகமாகப் பயிரிடுகிறார்கள். தோட்டங்களிற் காய்கறிகள் உண்டாக்கப் படுகின்றன. விருத்தாசலம் தாலூகாவின் சில பாகங்களிற் பருத்தி பயிராகின்றது.

அவுரி என்ற செடி நமது ராஜதானியில் முன்னே பயிராகிவந்தது. அதிலிருந்து நீலச்சாயம் எடுத்து வந்தார்கள். இப்பொழுது மேல்நாடுகளிலிருந்து நல்லசாயம் வருவதால், அவுரி பயிரிடுதலைப் பலர் நிறுத்தி விட்டார்கள். இந்த அவுரி விழுப்புரம் தாலூகாவிற் பயிராகி வந்தது.

காடுகள்.

பொதுவாக மலைப்பக்கங்களிற் காடுகள் வளரும். காடுகளில் அநேக மரங்களும் மூலிகைகளும் மிருகங்களும் உண்டு. நமது ஜில்லாவில் மலையடர்ந்தபாகம் கள்ளக்குறிச்சி தாலூகா. அதிலுள்ள காடுகளில் மூங்கில் விசேஷமாய்ப் பயிராகின்றது. தேக்குமரம், சந்தனமரம், கருங்காலி, செம்மரம். ஈச்சமரம் முதலிய மரங்களும் மலைக்காடுகளில் உண்டாகின்றன. இம்மரங்களை எவ்வாறு உபயோகப் படுத்துகிறார்கள்? உயர்ந்த ஜாதி மரங்கள் கதவுநிலை, கதவு, ஜன்னல், நாற்காலி, பென்சு, அலமாரி முதலியன செய்

வதற்கு உபயோகப்படுகின்றன. மூங்கில், பந்தல் போடுவதற்கும், பாய் பின்னுவதற்கும், கூடை கட்டுவதற்கும் உபயோகப்படுகிறது. சந்தனக்கட்டைகளை உரைத்துச் சந்தனம் எடுத்துக் கொள்ளுகிறார்கள். சில மரங்களின் தழைகள் நிலத்துக்கு உரமாக உபயோகப்படும். சில மரங்கள் விறகுக்கு உபயோகப்படுகின்றன. விருத்தாசலம் கள்ளக்குறிச்சி என்ற ஊர்களுக்குச் சமீபத்தில் புல் வளரும் காடுகள் உண்டு. அப்படிப்பட்ட காடுகளில் ஆடு மாடுகளை மேய்க்கலாம். வெள்ளாற்றுக்கும், கொள்ளிடத்துக்கும் இடையிலுள்ள காடு மிகவும் பெரியது. இந்த ஜில்லாவின் காடுகளில் முந்திரி மரங்கள் ஏராளமாக வளர்கின்றன. நமது ஜில்லா முந்திரிப் பருப்புக்குப் பெயர் பெற்றது. புளியமரங்களும் சில காடுகளில் வளர்கின்றன.

வீட்டுமிருகங்கள்—நமது ஜில்லாவில் விசேஷமான கால் நடைகள் இல்லை. அவை மேய்வதற்கு ஏற்ற புல்தரையும் இல்லை. மாடுகள் வெளிஜில்லாக்களில் இருந்து விலைக்கு வாங்கிவரப் படுகின்றன. பால்மாடுகள் புங்கனூரிலிருந்தும் காளை மாடுகள் சேலம், வடஆற்காடு ஜில்லாக்களில் இருந்தும் கொண்டுவரப்படுகின்றன. நமது ஜில்லாவிலுள்ள மயிலத்திற்கூடும் மாட்டுச்சந்தை மிகப்பெரியது. நமது ஜில்லாவில் இரண்டுவகைச் செம்மறி ஆடுகள் உண்டு. அவை பள்ளாடும், குறும்பாடுமாம். பள்ளாட்டின் மாமிசத்தைத் தின்கிறார்கள். குறும்பாட்டின் உரோமம் கம்பளி நெய்ய உபயோகப்படுகிறது.

முன்னொரு காலம், கல்ராயன் மலைகளில் யானைகள் காணப்பட்டன. வேறுசில இடங்களிற் புலிகள் இருந்தன. இவை இப்போது விசேஷமாகக் காணப்படுவது இல்லை

கல்ராயன் மலைகளிலும், செஞ்சிமலைப் பிரதேசத்திலும் காடிகள் காணப்படுகின்றன. செஞ்சிக் குன்றுகளில் சிறுத்தைகள் இருக்கின்றன. அம்மலை அவை வசிப்பதற்கு ஏற்ற இடமாக இருக்கிறது. 1903 ஆம் வருஷம், 13 மனிதர்களும். 451 ஆடுமாடுகளும் சிறுத்தைகளாற் கொல்லப்பட்டனர். அச்சமயம் 25 சிறுத்தைகள் கொல்லப்பட்டன. கள்ளக்குறிச்சி மலைகளிற் கழுதைப்புலிகள் காணப்படுகின்றன. கல்ராயன்மலைகளிலும் செஞ்சிமலையிலும் புள்ளிமான்கள் உண்டு. ஸ்ரீமுஷ்ணத்தை அடுத்த இடங்களிலும் புள்ளிமான்கள் இருக்கின்றன. சில இடங்களிற் காட்டுப் பன்றிகளும் கொள்ளிடம்கால்களில் முதலைகளும் ஏராளமாய் இருக்கின்றன. குளங்களிலும் கடலிலும் பல ஜாதி மீன்களுக்குக் குறைவு இல்லை.

உலோகங்கள்—உலோகங்கள் என்றால்என்ன? நமது ஜில்லாவில் உலோகங்கள் விசேஷமாகக் கிடைக்க இல்லை. அந்த உலோகங்களில் நமது ஜில்லாவிற் கிடைப்பவை கருங்கல்லே ஆகும். அவை மயிலம், ஸ்ரீமுஷ்ணம் என்ற இடங்களில் உண்டு. சிதம்பரத்திற் கோவில், மண்டபம் முதலியன கட்டுவதற்கு இந்த இடங்களில் இருந்து கற்கள் கொண்டுவரப்படுகின்றன. கேபர்மலையில் ஒருவிதச் செம்பூரான் கற்கள் அகப்படுகின்றன. வெட்டி எடுக்கும்பொழுது, அவை ஈரமாக இருக்கின்றன. உலர்ந்தவுடன் கெட்டியாகிக் கட்டிடங்களுக்கு உபயோகம் ஆகின்றன. அவற்றை ஒழுங்காகச் சதுரித்து வேலைகளுக்கு உபயோகிக்கிறார்கள். அந்தக்கற்களில், சிறுதுண்டுகள் ரஸ்தாக்களுக்குக் கப்பிபோட உபயோகம் ஆகின்றன. கடற்கரையிலுள்ள கிளிஞ்சல்களை நீற்றிச் சுண்ணாம்பு ஆக்குகிறார்கள். பண்ணுருட்டியில் ஒருவிதக் களிமண் அகப்படுகிறது. அது பொம்

மைகள் செய்வதற்கும் செங்கல் அறுப்பதற்கும் ஏற்றது. திருவகீந்தரபுரத்தில் வெள்ளை நிறமுள்ள ஒருவகை மண் அகப்படுகிறது. அதை வைஷ்ணவர்கள் நெற்றியில் நாமம் போடுவதற்குத் திருமண்ணாக உபயோகிக்கிறார்கள்.

கைத்தொழில்கள்.

நமது தேசத்தில் உள்ளவர்கள் பெரும்பாலும் விவசாயத்தால் ஜீவிப்பவர்கள். இந்த ராஜதானியில் மற்ற எந்த ஜில்லாவைப் பார்க்கிலும், நமது ஜில்லாவில் விவசாயத்தாலும், ஆடு மாடுகளைப் பராமரிப்பதாலும் ஜீவிக்கிறவர்கள் அதிகம். 100-க்கு 80 பேர்களுக்கு அதிகமாக இந்தத் தொழிலைச் செய்கிறார்கள். நிலக்கடலையை அதிகமாகப் பயிரிடுகிறார்கள். முன்காலத்தில், நமது ஜில்லாவில் நெசவுத் தொழில் விசேஷமாக நடைபெற்றது. அதனாலே மேல்நாட்டார்கள் பண்டசாலைகளை ஏற்படுத்திக்கொண்டு இங்கு வியாபாரம் செய்தார்கள். இப்போது இத்தொழில் முன்போல், அதிகமாகவும்சிறந்ததாகவும்நடைபெறவில்லை. ஆயினும், ஒவ்வொரு தாலூகாவிலும் இத்தொழில் கொஞ்சமாக இருக்கிறது. சேணியர்களும், கைக்கோளர்களும் இங்கு நெசவுவேலை செய்யும் ஜாதியார்கள். விழுப்புரம் தாலூகாவில் உள்ள வளவனூர், கூடலூரிலுள்ள குறிஞ்சிப்பாடி, திருக்கோவிலூரிலுள்ள மணலூர்ப்பேட்டை, சிதம்பரத்திலுள்ள புவனகிரி என்ற ஊர்களில் இப்போது நெசவுத் தொழில் அதிகம் நடக்கிறது. சாதாரணமான சேலைகளும், துப்பட்டிகளும், முரட்டுத் துணிகளும், ஜமக்காளங்களும், மகம்மதியர் உடுத்தும் கயிலியும் இங்கு நெசவாகும் துணி வகைகள். துணிகளுக்குச் சாயம் ஏற்றும் தொழிற் செய்தும் சிலர் ஜீவிக்கிறார்கள்.

இந்த ஜில்லாவில் குறும்பாடுகள் அதிகம் அல்லவா? இவற்றின் மயிரால் விருத்தாசலம் தாலூகாவில் ரத்தனக் கம்பளங்களும், சாதாக் கம்பிளிகளும் நெய்கிறார்கள். தோல் பதனிடும் தொழில் முன்னே நமது ஜில்லாவில் நடைபெற்றது. இப்போது அது அநேகமாக நின்று விட்டது. இங்குள்ள தோல் முழுதும் இப்போது சென்னைக்கு அனுப்பப்படுகிறது.

திண்டிவனம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் என்ற தாலூகாக்களில் சணல் நாரால் சாக்கு (கோணி) கள் நெய்கிறார்கள். அவுரியினின்றும் சாயம் செய்யும் தொழில் இப்பொழுது நின்றுவிட்டது. முன் காலத்தில் இந்தச் சாயத்தை வாங்கி வியாபாரம் செய்யவே ஐரோப்பியர் இந்த ஜில்லாவில் தங்கியிருந்தார்கள்.

நமது ஜில்லாவில் கரும்பு விசேஷமாகப் பயிரிடப்படுகிறது அல்லவா? நெல்லிக்குப்பத்தில் சர்க்கரை செய்யும் தொழிற்சாலை ஒன்று உண்டு. அதில் ஆயிரம் ஜனங்கள் ஒவ்வொரு நாளும் வேலை செய்கிறார்கள். அது பாரி கம்பெனியாரால் நடத்தப்படுகிறது. சிதம்பரம் தாலூகாவிலுள்ள பவுனகிரியில் பனஞ்சாற்றைக் காய்ச்சிக் கருப்புக் கட்டி, பனங்கற்கண்டு முதலியன செய்து புதுச்சேரிக்கு அனுப்புகிறார்கள்.

நிலக்கடலை இந்த ஜில்லாவில் விசேஷமாக விளைகிறது அல்லவா? அதைச் செக்கிலிட்டு ஆட்டிக் கடலைநெய் எடுக்கிறார்கள். பிண்ணாக்கை உரத்துக்காக ஜாவா தீவுக்கு அனுப்புகிறார்கள். இதைச் சேர்த்து வெளியிடங்களிற் சவுக்காரம் செய்கிறார்கள். விளக்கெண்ணெய், நல்லெண்ணெய், இலுப்பை எண்ணெய் முதலிய தைலங்கள் சில இடங்களில் செக்கில் ஆட்டி எடுக்கப்படுகின்றன.

விழுப்புரம் தாலூகாவில் பித்தளைப் பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. நமது ஜில்லாவின் ஆற்றங்கரையில் கோரைப்புல்வளருவதால், அதைஅறுத்துச்சிலர்கோரைப் பாய்களைப்பின்னுகிறார்கள். பரங்கிப்பேட்டையிற் பின்னப் படும் பாய்கள் மிகமெதுவாயும் அழகாயும் உள்ளன. கடற் கரையிற் சிலர் உப்புவிளைவிக்கிறார்கள். சிலர் மீன் பிடித்து விற்று ஜீவிக்கிறார்கள். தென்னை, பனை, ஈந்து என்ற மரங் களில் கள்ளை இறக்கி விற்றுச் சிலர் பிழைக்கிறார்கள்.

வர்த்தகம்.

நமது ஜில்லாவின் விளைபொருள்களையும் கைத்தொ ழில்களையும் அறிந்தால், இங்கு நடக்கும் ஏற்றுமதியும் இறக்குமதியும் தெரிந்துகொள்ளலாம். இங்கு நெல்லும், கடலையும், கரும்பும் அதிகம் அல்லவா? அவற்றில் இந்த ஜில்லாவில் உபயோகம் ஆனது போக, மீதியுள்ளவற்றை வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். பல ஊர் களிற் கூடும் சந்தைகளிலும் அநேக சாமான்கள் வியா பாரம் ஆகின்றன. நெல்லிக்குப்பத்திலிருந்து அநேக சாமான்கள் ஏற்றுமதி ஆகின்றன. கல்ராயன் மலைகளில் உண்டாகும் பொருள்களும் ஏற்றுமதி ஆகின்றன.

நமது ஜில்லாவில் கடற்கரையிலுள்ள பெரிய பட்டி ணங்களைப் படத்தைப் பார்த்துச் சொல்லுங்கள். அவற் றுக்குத் துறைமுகங்கள் என்று பெயர். அவற்றிற் புதுச் சேரி ஒரு துறைமுகம். அது பிரஞ்சுக்காரருக்குச் சொந்த மானது. அங்கிருந்து நிலக்கடலை, நல்லெண்ணெய், துணி கள் ஏற்றுமதி ஆகின்றன. முகம்மதியர்களில் மரக்காயர் என்ற ஒரு வகுப்பாரும், ஐரோப்பியரும் இங்கு வர்த்தகம் செய்கிறார்கள்.

வெளியிடங்களில் இருந்து நமது உபயோகத்திற்கு நாம் வரவழைக்கும் சாமான்களுக்குப் பெயர் என்ன? சீமைத்துணிகள், காகிதம், பேனு, பென்சில், இருப்புச் சாமான்கள், கண்ணுடிச் சாமான்கள், பீங்கான்கள், தீப்பெட்டி, பாத்திரங்கள். புகையிலே, பாக்கு, மிளகு, பனம்பட்டை, தேங்காய் முதலியன நமது ஜில்லாவின் இறக்குமதிகள்.

அப்பியாசம் 4—(1) நமது ஜில்லாவிலுள்ள பெரிய ஏரிகள் எவை? (2) நமது ஜில்லாவின் முக்கியமான நான்கு விளைபொருள்களைச் சொல்லு. (3) நமது ஜில்லாக் காடுகளில் விளையும் பொருள்களில் இரண்டு சொல்லு. (4) நமது ஜில்லாவிலுள்ள துஷ்ட மிருகங்களெவை? (5) நமது ஜில்லாவிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்கள் எவை? (6) நமது ஜில்லாவின் கைத்தொழில்களில் முக்கியமானவற்றைச் சொல்லு.

போக்குவரவு சாதனங்கள்.

வண்டிப்பாதைகள்.

இந்த ஜில்லாவில் சாலைகள் மூலமும், இருப்புப்பாதை மூலமும், கால்வாய்களின் மூலமும் போக்குவரவு நடக்கிறது. நமது ஜில்லாவில் நல்ல ரஸ்தாக்கள் போடப்பட்டிருக்கின்றன. ரஸ்தாக்களின் இரு பக்கங்களிலும் நிழல் தரும் மரங்கள் உண்டாக்கப்பட்டு இருக்கின்றன. சாலைஓரங்களில் குளங்களும், சாவடிகளும், தோப்புகளும் வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த ஜில்லாவிலுள்ள சாலைகளின் மொத்தநீளம் 1100 மைல். அதில் 900 மைலுக்குக் கப்பிபோட்ட சாலைகள் உண்டு. ஆறுகளைக் கடந்துபோகப் பாலங்கள் கட்டப்பட்டு

இருக்கின்றன. நமது ஜில்லாவிலுள்ள முக்கியமான சாலைகள் படத்திற் குறிக்கப்பட்டிருக்கின்றன.

(1) சென்னையிலிருந்து ஒருபாதை ஆரம்பித்து திண்டிவனம் விழுப்புரம்,; உழுந்தூர்ப்பேட்டை வழியாய் உடையார் பாளையத்துக்குப் போகிறது. இதில் திண்டிவனத்திலிருந்து 3 பாதைகள் செல்லுகின்றன. (2) அவற்றிற் கிழக்கே போவது கடற்கரையிலுள்ள மரக்காணத்திற் போய் முடிகிறது. (3) மற்றொரு பாதை வடக்கு நோக்கி வந்தவாசிக்குப் போகிறது. (4) இன்னொருபாதை பிரிந்து மேற்கே திருவண்ணாமலைக்குப் போகிறது. (5) முதலிற் கூறிய பெரியசாலை கெடிலநதியைக் கடக்கும் இடத்தில் இருந்து ஒரு கிளைப்பாதை நெல்லிக்குப்பம் வழியாகக் கூடலூருக்குச் செல்லுகிறது. முதலிற்கூறிய சாலையில் உழுந்தூரில் இருந்து பல திசைகளிலும் சாலைகள் போகின்றன. (6) ஒருபாதை உழுந்தூர்ப்பேட்டையிலிருந்து பிரிந்து கள்ளக்குறிச்சி வழியாய் மேற்கே சேலம் ஜில்லாவுக்குப் போகிறது. (7) இன்னுமோர் கிளைப்பாதை திருக்கோவிலூர் மூலம் திருவண்ணாமலைக்குப் போகிறது. (8) மற்றொரு கிளைப்பாதை விருத்தாசலத்தில் இருந்துகிழக்கேயுள்ள சிதம்பரத்துக்கும், அங்கிருந்து புதுச்சேரிக்கும் போகிறது.

இருப்புப்பாதை.

சென்னையில் இருந்து தெற்கே தனுஷ்கோடி, தூத்துக்குடி முதலிய இடங்களுக்குச் செல்லும் இருப்புப்பாதைக்குத் தென்னிந்திய இருப்புப்பாதை என்று பெயர். அது நமது ஜில்லாவில் திண்டிவனம், விழுப்புரம், பண்ணுருட்டி, கூடலூர், சிதம்பரம் வழியாகத் தஞ்சாவூருக்குச் செல்லு

கிறது. விழுப்புரம் ஒரு ஜங்ஷன். ஜங்ஷன் என்பது என்ன? விழுப்புரத்திலிருந்து 2 பாதைகள் பிரிந்து செல்லுகின்றன. (1) ஒரு பாதை கிழக்குக் கடற்கரையிலுள்ள புதுச்சேரிக்குப் போகிறது. (2) மற்றொன்று திருக்கோவிலூர் வழியே வடமேற்கே ஆற்காடு ஜில்லாவுக்குப் போகிறது.

கால்வாய்கள்:-சென்னையிலிருந்து நமது ஜில்லாவின் வடகோடியிலுள்ள மரக்காணம்வரை ஒரு கால்வாய் இருக்கிறது. அதன் பெயர் பக்கிங்ஹாம் கால்வாய். இதனால் நமது ஜில்லாவுக்கு அதிகப்பிரயோஜனம் இல்லை.

அப்பியாசம் 5—இந்த ஜில்லாவின் படத்தை எழுதி அதில் முக்கியமான சாலைகளையும் அவற்றின்மேலுள்ள பட்டணங்களையும் குறி. (2) அந்தப் படத்தில் இந்த ஜில்லாவிலுள்ள முக்கியமான இருப்புப்பாதையை வரைந்து அதிலுள்ள ஸ்டேஷன்களைக் குறிப்பிடு. (3) இந்த ஜில்லாவிலுள்ள ஜங்ஷன் எது? (4) அதிலிருந்து பிரிந்துசெல்லும் இருப்புப் பாதைகள் எந்தெந்தப் பக்கங்களுக்குச் செல்லுகின்றன?

ஜனங்கள்

1921-ஆம் வருஷம் எடுத்த ஜனசங்கியைக் கணக்குப்படி நமது ஜில்லாவின் ஜனத்தொகை 2,363,000. இந்த ஜில்லாவில் ஒரு சதுர மைலுக்குச் சராசரி 510 ஜனங்கள் வீதம் வசிக்கிறார்கள். ஆதலால் நமது ஜில்லா ஜனநெருக்கமுள்ள ஜில்லாக்களில் ஒன்று. கூடலூர்த் தாலூகா எல்லாத் தாலூகாக்களிலும் அதிக ஜனநெருக்கம் உள்ளது. அங்குச் சதுரமைலுக்கு 875 ஜனங்கள் வீதம் வசிக்கிறார்கள். கள்ளக்குறிச்சித் தாலூகா ஜன நெருக்கம் இல்லாத தாலூகா. இங்குச் சதுர மைலுக்கு 350 ஜனங்கள் வீதம் வசிக்கிறார்கள். சிதம்பரம், கள்ளக்குறிச்சி, கூடலூர். என்ற 3 தாலூகாக்களிலும் முகம்மதியர் விசேஷமாக வசிக்

கிறார்கள். திருக்கோவிலூர்த் தாலூகாவில் கிறிஸ்தவர்கள் அதிகமாக வசிக்கிறார்கள்.

அறிவுமிக்க பெரியோர்களும், கல்வியாளரும் முற்காலத்தில் இந்த ஜில்லாவிற் பலர் இருந்தார்கள். இப்போது சிதம்பரத்தில் கல்வி அபிவிருத்தியின் பொருட்டு சில கலாசாலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை ஏற்படுத்தியவர் திவான் பஹதூர் அண்ணாமலை செட்டியார் அவர்கள். அங்கேயே 2 உயர்தர கலாசாலைகள் இருக்கின்றன. கூடலூரில் 2 ஹைஸ்கூல்களும், திண்டிவனத்தில் ஒரு மிஷன் ஹைஸ்கூலும், விழுப்புரத்தில் ஒரு ஹைஸ்கூலும் இருக்கின்றன. கூடலூரில் இருந்த செயின்ட் ஜோசப் காலேஜ் சில வருஷங்களாக நடைபெறவில்லை. இங்குக் கூறிய கலாசாலைகளைத் தவிர பல லோயர் ஸெக்கண்டரி கலாசாலைகளும், எலிமெண்டரி பாடசாலைகளும் ஜில்லா முழுவதிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஜில்லா போர்டார் எலிமெண்டரி பாடசாலையின் அபிவிருத்தியின் பொருட்டு, கவனத்துடன் வேலை செய்கிறார்கள்.

தாலூகாக்களும், முக்கிய பட்டணங்களும்.

1. கூடலூர்த் தாலூகா.

இது இந்த ஜில்லாவின் நடுவில் கடலோரமாகவுள்ள தாலூகா. இதன் பெரும்பாகத்தில் பெண்ணையாறு, கெடிலம், வெள்ளாறு என்ற நதிகளின் வண்டல் படிந்திருப்பதால் இது மிகச் செழிப்பாக இருக்கிறது. கூடலூர் கெடிலநதி, உப்பனாறு என்ற இரண்டு நதிகள் ஒன்றுசேரும் இடத்தில் இருப்பதால், இப்பெயர் பெற்றது. இதற்கு

முகம்மதியர்களால் இடப்பட்ட இஸ்லாமபாத் என்ற வேறு பெயரும் உண்டு.

கூடலூர்—முனிசிபல்டவுன். இந்நகரம் இரண்டுபிரிவு களை யுடையது. அவ்விரண்டும், ரயில்வே ஸ்டேஷன்கள். அந்த இரண்டு பிரிவுகள் கூடலூர்ப் பழைய பட்டணம், கூடலூர்ப் புதிய பட்டணம் என்பன. திருப்பாதிரிப்புலியூரும், மஞ்சக்குப்பமும் கூடலூர்ப் புதிய பட்டணத்தில் அடங்கியவை, இங்குக் காட்டியிருக்கும் படத்தைப் பார்த்து இந்நகரின் பாகங்களை அறிந்து கொள்ளுங்கள்.


கூடலூர்ப் பழைய பட்டணம்-இது எந்த இரண்டு நதிகள் ஒன்று கூடுமிடத்தில் இருக்கிறது? இது கடற்கரையிலிருப்பதால், முக்கிய துறைமுகமாகவும், வியாபார ஸ்தலமாகவும் இருக்கிறது. இங்கிருந்து ஏற்றுமதி யாகும் பொருள்கள் எவை? கெடில நதியின் வடகரையில் போர்ட் சேயின்ட்டேவிட் என்ற கோட்டை முற்காலத்தில் கட்டப்பட்டிருந்தது. இங்லீஷ்காரர் இங்கேதான் முதலில் நம் நாட்டிற் குடியேறினர்கள். ராபர்ட்கிளைவ் முதலில்இங்கே தான் வேலை பார்த்தார். அந்தக் கோட்டை 1803ல் இடிக்கப் பட்டது. ஆயினும் அதன் அடையாளங்களை இப்பொழுதும் பார்க்கலாம். தற்போது பாரி கம்பேனியார் வசமிருக்கிற ஒரு பண்டசாலை மட்டும் இங்கிருக்கிறது.

திருப்பாதிரிப்புலியூர்—இது பாடல் பெற்ற சிறந்த சிவஸ்தலம். செடில நதிக்கரையில் இருக்கிறது. இந்நதியின் கிழக்குக் கரையில் இருப்பதற்குப் புதுப்பாளையம் என்றும், மேற்குக் கரையில் இருப்பதற்குத் திருப்பாதிரிப்புலியூர்

என்றும் பெயர்கள் வழங்குகின்றன. இங்குள்ள சிவன் கோயிலை நாட்டுக்கோட்டைச் செட்டிகள் அழகாய்ப்புதுப்பித்துக் கட்டியிருக்கிறார்கள். மகேந்திர வர்மன் என்ற பல்லவராயன் இங்கிருந்த ஜயினக்கோயிலை இடித்துத் திருவதிகையில் குணவதீச்சுரம் என்ற சிவன்கோயிலைக் கட்டினான். இங்குத் தமிழிற் சிறந்தவராகிய ஞானியார் மடாலயம் ஒன்றிருக்கிறது.

மஞ்சக்குப்பம்—இது புதுப்பாளையத்திற்குளப்பக்கத்தில் இருக்கிறது? இவ்வூர் நடுவில் ஒரு மைதானம் இருக்கிறது. ஒரு பெரிய பீரங்கி அதன் நடுவில் வைக்கப்பட்டிருக்கிறது. அதன் நான்கு பக்கங்களிலும் துரைத்தனத்தாரின் ஆபீசுகள் இருக்கின்றன. இங்கு ஐரோப்பியரின் பங்களாக்கள் இருக்கின்றன. இங்குள்ள இரண்டு ஹை ஸ்கூல்கள் ஒன்று ஹிந்துக்களாலும், மற்றது ரோமன் பாதிரிகளாலும் நடத்தப்பட்டுவருகின்றன. அன்றியும் துரைத்தனத்தார் ஏற்படுத்திய ஆண்கள் கற்கும் டிரெயினிங்பாடசாலையும்,ரோமன்பாதிரிமார்ஏற்படுத்திய பெண்கள் கற்கும் டிரெயினிங்பாடசாலையும் இங்குள்ளன. செட்டிப் பிள்ளைகளில் ஒருவகுப்பார்இங்கிருந்துதான்பல இடங்களிற் குடியேறினார்களாம். அவர்களுக்கு மஞ்சக்குப்பத்துச் செட்டிகள் என்று பெயர்.

திருவஹீந்திரபுரம்—இது கெடிலநதிக் கரையில் கூடலூருக்கு மேற்கே 5 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்குள்ள ஜனங்களில் வைணவப் பிராமணர்களே அதிகம்.



வேதாந்த தேசிகர்.

வேதாந்த தேசிகர் என்ற வைணவ குரு 15 வருடகாலம் இவ்வூரில் வசித்தார். அவருடைய படம் இங்குக் காட்டப் பட்டிருக்கிறது பாருங்கள். இவ்வூரில் ஒரு விஷ்ணு கோயில் உண்டு. அதில் உள்ள ராமர், லக்ஷ்மணர், சீதை என்பவரின் விக்கிரகங்கள் வெகு அழகாய்ச் செய்யப்பட்டுள்ளன. இந்த ஆலயத்தில் வேதாந்த தேசிகருக்கு ஒரு சந்நிதி இருக்கிறது. இந்த ஊருக்குச் சமீபத்தில் ஓடும் நதியைப்பற்றி வழங்கும் கதையைச் சொல்லுங்கள்.

குறிஞ்சிப்பாடி—கூடலூருக்குத் தென்மேற்கே 19 மைல் தூரத்திலிருக்கிற ஒரு யூனியன் டவுன். இங்கு ஒரு சப்ரிஜிஸ்தரார்கச்சேரியும்போலீஸ்ஸ்டேஷனும்ஆஸ்பத்திரியும் சத்திரமும் உள்ளன. திங்கட்கிழமை தோறும் இங்கு ஒருசந்தைகூடுகிறது. இங்குள்ளகைக்கோளர்கள் நெசவுத் தொழில் விசேஷமாய்ச் செய்கிறார்கள்.

நெல்லிக்குப்பம்—இது கூடலூரிலிருந்து பண்ணுருட்டிக்குப்போகும் ரஸ்தாவில் 8-வது மைலில் இருக்கிற ஒரு யூனியன் டவுன். இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இங்கு மரக்காயர் என்ற முகம்மதியர் விசேஷமாய்வசிக்கிறார்கள். இங்குப்பாரிகம்பெனியார் பெரியகரும்பாலைகள்வைத்துச் சர்க்கரை முதலியன செய்கிறார்கள்.

பண்ணுருட்டி—இது கூடலூருக்குமேற்கே 15 மைல் தூரத்தில் இருக்கிறது. இந்த ஊரிலிருந்து எங்கெங்குப் பக்கங்களிற் சாலைகள் செல்லுகின்றன? இது பெரிய வியாபார ஸ்தலம். இங்கிருந்து நிலக்கடலை புதுச்சேரிக்கு விசேஷமாய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடலை எண்ணெய் வியாபாரம் இங்கு மிகுதியாய் நடக்கிறது. வெல்லமும் பலாப் பழமும் இங்கு மிகுதியாய் வியாபாரம் ஆகிறது. இங்கு நடக்கும் கைத்தொழில்கள் எவை?

திருவதிகை—இது கூடலூரிலிருந்து 14-வது மைலில் இருக்கிறது. இது ஒரு சிறந்த சிவ ஸ்தலம். இந்த ஊரில் எங்கே பார்த்தாலும் சிவ லிங்கங்கள் உள்ளன. திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் என்ற சிவ பக்தர்கள் இவ்வூர்வழிச் சென்றால், சிவலிங்கங்களை மிதிக்க நேரிடும் என்றெண்ணி இவ்வூரைச் சுற்றிக்கொண்டுபோய் விட்டார்கள். இவ்வூரிலுள்ள கோயில் யாரால் கட்டப்பட்டது?

பார்வதிபுரம்—கூடலூருக்குத் தென்மேற்கே 23 மைல் தூரத்தில் இருக்கிற ஒரு சிறு கிராமம். இந்த ஊருக்கு அருகில் உள்ள கருங்குழி என்னும் இடத்தில் இராமலிங்க சுவாமிகள் என்ற ஒரு பெரியவர் இருப்பிடம் ஏற்படுத்திக்கொண்டு வசித்தார். பக்கத்திலுள்ள வடலூரில் எட்டுக் கோணமாக ஒரு கட்டிடம் அவர் கட்டியிருக்கிறார். அங்கிருந்து பார்த்தால் சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோயிலின் கோபுரங்கள் தெரியும் என்கிறார்கள். அவர் பாடிய பாடல் மிகுந்த பக்தியை ஊட்டக் கூடியவை. அவர் சரித்திரத்தை உங்கள் உபாத்தியாயரிடம் தெரிந்து கொள்ளுங்கள்.


தீர்த்தகுளம்—(தீர்த்த நகரி) இது கூடலூருக்குத் தென்மேற்கே 12 மைல் தூரத்தில்இருக்கிறது. இவ்வூரில் சிறந்தசிவாலயம் ஒன்றுஇருக்கிறது. அதில் ஒரு புண்ணிய தீர்த்தம் உண்டு. கோயில் அதிக அழகுள்ளது அன்று. ஆயினும், அதிலுள்ள கல்வெட்டுச் சாசனங்கள் பல அரசர்களுடைய சரித்திரங்களை வெளியிடுகின்றன. கோயிலில் உள்ள சிற்பவேலை ஒரு கதையை விளக்குகின்றது. அதனால் குறிக்கப்படும் கதை கீழ்வருமாறு—முன் காலத்தில் சிவபெருமான் சன்னியாசி வேஷத்துடன், ஒரு வயலில் வேலைசெய்து கொண்டிருந்த குடியானவன் ஒருவனிடம் போய்ப் பிச்சை கேட்டார். முதலில் அவன் மறுத்தான். அதன்பின் வீட்டுக்குச் சென்று ஆகாரத்தோடு திரும்பிவந்துசன்னியாசியைப்பார்த்தான். அவரைஅங்குக் காணமுடியவில்லை. ஆதலால் அவனும் அவன் மனைவியும் உயிர்விட நிச்சயித்தார்கள். அப்பொழுது சிவபெருமான் தோன்றி அவர்களை ஒரு விமானத்தில் ஏற்றிக்கொண்டு கைலாசத்துக்குச் சென்றார்.

2. சிதம்பரம் தாலூகா.

சிதம்பரம்—இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இது இத்தாலூகாவின் தலைமை நகரம். இது ஒரு பெரிய முனிசிபல் டவுன். இதை இந்துக்கள் தில்லை என்பார்கள். தில்லை என்பது ஒரு மரத்தின் பெயர். ஆதியில் தில்லை மரங்கள் இங்கேமிகுதியாய் இருந்தமையால், இதற்குத் தில்லை என்ற பெயர் வந்தது. இதைத்தவிர இதற்குப் பல பெயர்கள் உண்டு.

தென்னிந்தியாவிலுள்ள முக்கியமான சிவஸ்தலங்களில் சிதம்பரம் ஒன்று. இங்குள்ள நடராஜரைத் தரிசிப்பதற்கு இந்தியாவின் எல்லாப் பக்கங்களில் இருந்தும் யாத்திரிகள் வருகிறார்கள். அந்தக் கோவிலின் படம் இதிற் சேர்க்கப் பட்டிருக்கிறது பாருங்கள். அந்தக் கோவிலைச்சுற்றி 2 பிரகாரங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று விக்கிரம சோழனாலும், மற்றது குலோத்துங்க சோழனாலும் கட்டப் பட்டவை. அவ்வரசர்கள் பெயரே அப் பிரகாரங்களுக்கு இடப்பட்டுள்ளன. இப்பிரகாரங்களின் நான்கு திசைகளிலும் 4 வாசற்படிகள் உள்ளன. முதற் பிரகாரத்தின் 4 திசைகளிலுமுள்ள 4 வாசற்படிகள் மேலும் 4 உன்னதமான கோபுரங்கள் உண்டு. அவற்றில் வடக்குக் கோபுரத்தை விஜயநகர சக்கரவர்த்தியாகிய கிருஷ்ணதேவராயர் கட்டுவித்தார். அவர் உருவம் ஒரு புரையில் இருக்கிறது.

தெற்குக் கோபுரத்தைக் கோப்பெருஞ் சிங்கதேவர் என்ற பல்லவராயர் கட்டுவித்தார். அவரது காரியஸ்தனை சோழக் கோன் கிழக்குக் கோபுரத்தின் சற்கால்களை நாட்டினன். பரதநாட்டியத்தை விளக்கும் உருவங்கள் இக் கோபுரத்தில் விசேஷமாகஉண்டு. முதலாவது சுந்தரபாண்



சிதம்பரம் கோவில்

டியன் இங்குவந்து துலாபாரம் செய்துகொண்டான். துலா பாரம் என்பது தான் ஒரு தராசின் தட்டில் உட்கார்ந்து கொண்டு, மற்றொரு தட்டில் தன்னிறையுள்ள தங்கத்தை வைத்து நிறுத்து அதைத் தானம் செய்தலாம். இங்ஙனம் அப்பாண்டியன் செய்து அந்தப்பொன்னால் கோவிலின் மேல் வேய்ந்துள்ள செப்பேடுகளுக்குத் தங்கமுலாம் பூசு வித்தான்.

சிதம்பரத்தில் இருக்கும் பெரிய கோவிலில் உள்ள மூலஸ்தானத்திற்குத் தில்லையம்பலம் என்று பெயர். இது சிதம்பர ரகஸ்யம் என்னும் மறுபெயரோடு வழங்கப்படு கிறது. இக் கோவிலிலுள்ள ஆயிரக்கால் மண்டபத்திற்கு இராஜ சபை என்று பெயர். கோவில் அர்ச்சகர்கள் கூடி இருந்து கோவில் வியவகாரங்களை நிர்ணயிக்கும் இடத் திற்குத்தேவசபை என்றுபெயர். கனக சபை என்பதுமூல ஸ்தானத்தின் முன்னிருக்கும் மண்டபம். நிருத்தசபை என் பது ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி இருக்குமிடம். சித் ஸபை என்பதில்தான் ஸ்ரீநடராஜமூர்த்தியின்உருவமும்ரகஸியம் என்று சொல்லப்படும் சக்கரமும் உள்ளன. இவ்வைந்து சபைகளும் இக்கோவிலிலுள்ள 5 முக்கிய ஸ்தானங்க ளாகும். திருநாளைப்போவார் நாயனார் என்ற நந்தனாரும், மாணிக்கவாசக சுவாமிகளும் முக்தி பெற்றது இந்த ஸ்தலத்தில்தான். நந்தனார் சரித்திரம் உங்களுக்குத் தெரி யுமா? இந்தக் கோயிலில் சைவசமயத்து நான்கு குருக் களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நால்வர் உருவங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. இக்கோவில் பூசாரிகளுக்குத் தீக்ஷிதர்கள் என்று பெயர். அவர்களுடைய முன்னோர் ஆதிகாலத்தில் காசியிலிருந்து

வந்தார்கள். அவர்கள் மூவாயிரம்பேர்கள். இப்போதுள்ள வர்கள் அவர்கள் வம்சத்தினரே. இவர்கள் மூன்குடுமி வைப்பார்கள். இக்கோவிலில் இருக்கும் குளத்தின் பெயர் சிவகங்கை.

இக்கோயிலுக் குள்ளிருக்கிற நடராஜர் ஸந்நிதியின் எதிரில் கோவிந்தராஜப் பெருமாள் சந்நிதி ஏற்பட்டிருக் கிறது. இதனைச் சித்திரகூடம் என்று வைஷ்ணவ ஆசாரியர் கள் கூறியிருக்கிறார்கள்.

இங்கிலீஷ்காரருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் சண்டை நடந்த காலத்தில் சிதம்பரம் கோவில் ஒரு கோட்டையாக உபயோகப்பட்டது. ஏனென்றால் அதன் சுற்றுச்சுவர் அதிகப் பலமுடையது. இந்த ஊரில் வெகு காலமாக ஜலக்கஷ்டம் ஏற்பட்டிருந்தது. இப்பொழுது அது திவான் பகதூர் ராமசாமிச்செட்டியார் என்ற நாட்டுக்கோட்டைக் கனவானால் குழாய்கள் வைத்து நிவர்த்திக்கப்பட்டது. அவரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு உயர்தர கலாசாலையும் இங்குண்டு. பச்சையப்பமுதலியார் தருமத்தில் ஒரு ஹைஸ் கூலும், ஒரு அன்னதானச் சத்திரமும் இங்கு நடை பெறுகின்றன.

1920-ம் ஆண்டு திவான்பகதூர் அண்ணாமலைச் செட்டி யார் அவர்களால் மீனாக்ஷி ஆங்கில காலேஜ், சமஸ்கிருத காலேஜ், தமிழ்க் காலேஜ், கீழ்த்திசைப் போதனாமுறைக் காலேஜ் முதலியனஏற்படுத்தப்பட்டுஇங்கேஇருக்கின்றன. யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் அவர்களால் சைவப் பிரகாச வித்தியாசாலையும், தேவாரப் பாடசாலையும் இங்கு வைக்கப்பட்டு உள்ளன. மற்றொரு சமஸ்கிருத பாடசாலை யும் இங்கு உண்டு. சிதம்பரம் சர்வகலாசாலை இங்கே இப்போது புதிதாய் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது.

கிள்ளை—இது கடற்கரையிலுள்ள ஓர் ஊர். இது சிதம்பரத்திற்குக்கிழக்கே இருக்கிறது. மாசிமீ மக நக்ஷத்திரத்தில் சிதம்பரம் ஸ்ரீமுஷ்ணம் என்றஸ்தலங்களிலுள்ள தெய்வங்கள் இங்கே எழுந்தருளித் தீர்த்தங் கொடுக்கின்றனர்.

புவனகிரி—சிதம்பரத்திற்கு வடமேற்கே 4 மைல் வெள்ளாற்றின் கரையில் இருக்கிறது. இங்கு வாரந்தோறும் ஒரு சந்தை கூடுகிறது. இங்கு நடக்கும் கைத்தொழில்கள் எவை?

பரங்கிப்பேட்டை—இது ஒரு துறைமுகம். இதுஎந்த ஆற்றின் முகத்துவாரத்தில் இருக்கிறது? இங்கு நடக்கும் கைத்தொழில்கள் எவை? இந்தியாவுக்கு வந்த ஒவ்வொரு ஐரோப்பியரும் முதலில்இங்குத்தான் தங்கினர்கள். இங்கே அரைக்காசு நாச்சியார் கோயில் இருக்கிறது. இங்குக் காணிக்கை செலுத்துவோர் எவரும், அரைக்காசுக்குமேல் காணிக்கை செலுத்துவதில்லை.

மன்னார்குடி—இது காட்டுமன்னார்கோவில் என்றும் வீரநாராயணபுரம் என்றும்சொல்லப்படுகிறது. இதுவீராணத்தேரியின் தென்கோடியிலுள்ளவியாபாரஸ்தலம். இங்குத்தான் வைஷ்ணவக் குருக்களாகிய நாதமுனிகளும் ஆளவந்தாரும் ;தோன்றினர்கள். இதற்கு 6 மைலுக்கு மேற்கே குஞ்சிமேடு என்னும் கிராமத்தில் ஐதருடைய மந்திரியான பூர்ணையா என்பவர் பிறந்தார்.

ஸ்ரீமுஷ்ணம்—இது திருமுட்டம் என்று தமிழில் வழங்குகிறது. இது சிதம்பரத்திற்கு மேற்கே 19 மைல் தூரத்தில் இருக்கிறது. இதுவும் ஒரு சிறந்த விஷ்ணுஸ்தலமே. இக்கோவிலில் உள்ள சுவாமிக்குப் பூவராகப்

பெருமாள் என்று பெயர். விஷ்ணு இரணியாக்ஷனைக் கொன்ற பிறகு, இங்கே வந்து தங்கினாராம். இக்கோவிலில் நித்திய புஷ்கரணி என்ற ஒரு குளம் இருக்கிறது. அது பூவராக மூர்த்தியின் வேர்வையால் உண்டானதென்கிறார்கள். இவ்வூருக் கருகில் வெள்ளாற்றில் விழும் நதி எது?

பாளையங்கோட்டை—இது ஸ்ரீமுஷ்ணத்துக்குத் தெற்கே 5 மைல் தூரத்தில் இருக்கிறது. இதற்கும் வீராணத் தேரிக்கும் அதிகத் தூரமில்லை. இங்கொரு பழைய மண் கோட்டை இருக்கிறது. இவ்வூர் சரித்திர சம்பந்தமுடையது.

---

3. விருத்தாசலம் தாலூகா.

விருத்தாசலம்—இவ்வூர் மணிமுக்தா நதியின் கரையில் இருக்கிறது. இது பழைய பேட்டை, புதுப்பேட்டை என்ற இரண்டு பிரிவாக இருக்கிறது. அவ்விரண்டு பிரிவுகளும் மணிமுக்தா நதியின் குறுக்கே கட்டப்பட்ட பாலத்தால்சேர்க்கப்படுகின்றன. இவற்றில்புதுப்பேட்டைதான் நதியின் கரையில் இருக்கிறது. இவ்வூரில் ஒரு சிறந்த சிவாலயம் இருக்கிறது. அவ்வாலயத்தில் இருக்கும் சுவாமிக்குப் பழமலைநாதர் என்றுபெயர். அவ்வாலயம் விபாஜித் என்ற ஒரு பிராமணன் கட்டினது. இவன் உருவம் இக்கோவிலில் வைக்கப்பட்டிருக்கிறது. இக்கோவிலைக் கட்டினவன் இவன்தான் என்று புராணங் கூறுகிறது. இவன்

இக் கோயிலைக் கட்டினதற்கு ஒரு காரணமுண்டு. அதைக் கீழே வரும் கதையால் அறியலாம். முற்காலத்தில் சில தேவகன்னிகைகள் ஸ்நாநம் செய்வதற்காக ஒரு சுனைக்கு வந்தார்கள். அந்தச் சமயத்தில் குபேரன் மகள் விலையறியமுடியாத தன் ஒரு ஆபரணத்தைக் கழற்றிக் கரையில் வைத்துவிட்டு ஸ்நாநம் செய்தாள். அப்பொழுதொரு பறவை அந்த ஆபரணத்தை எடுத்துப் போயிற்று. அதை விபாஜித் என்ற இந்தப் பிராமணன் கண்டு பிடித்துக் கொண்டுவந்து கொடுத்தான். அதற்கு மகிழ்ந்த குபேரன் மகள் விலையறிய முடியாத அநேகம் ஆபரணங்களை இவனுக்குப் பரிசளித்தாள். அவற்றைக்கொண்டு இந்தப் பிராமணன் மேற்குறித்த கோயிலைக் கட்டினன். இக்கோவிலில் மாதந்தோறும் ஒரு பெரிய திருவிழா நடக்கிறது. 100 வருஷங்களுக்கு முன் ஹேட்துரை என்பவர் இந்த ஜில்லாவின் கலெக்டராக இருந்தார். அவர் இக் கோவிலிலுள்ள ஒரு பாகத்துக்குத் தமது செலவில் தளவரிசை போடும்படி செய்தார். தேரை இழுப்பதற்கு இருப்புச் சங்கிலிகள் வாங்கிக் கொடுத்தார். அபிஷேகத்திற்கு ஒரு வெள்ளிக்குடம் வாங்கிக் கொடுத்தார். இந்த ஊரில் அவர் கட்டுவித்த சத்திரம் ஒன்றுண்டு. மாசிமீ பௌர்ணமியில் இவ்வூர் நதியில் ஸ்நாநம் செய்தால், விசேஷ புண்ணியம் உண்டு என்று சொல்லுகிறார்கள். இந்நதியிலுள்ள புண்ணிய மடுவில் சிலஜாதியார் இறந்து போனவர்களுடைய எலும்புகளை அந்தத் தினத்தில் கொண்டு வந்து போடுகிறார்கள்.

இது இத்தாலூகாவின் முக்கிய பட்டணம். ஆதலால் தாலூகாக் கச்சேரியும், ஜில்லா முனிசீப் கச்சேரியும், சப் ரிஜிஸ்தரர் கச்சேரியும், போலீஸ் ஸ்டேஷனும், பிரயாணிகள் தங்கும் சத்திரமும் இங்குண்டு. இந்த ஊரில் வாரந்

தோறும் ஒரு சந்தை கூடுகிறது. அது தாமஸ்தோப்பு என்ற இடத்தில் கூடுகிறது. அந்தத் தோப்பை உண்டாக்கின வர் இங்கு சப் கலெக்டராக இருந்த தாமஸ் என்பவர். இந்த நகரம் ஒரு பெரிய வியாபார ஸ்தலம், கர்னாடக யுத்தத்தில் இது குறிப்பிடப்பட்ட இடம்.

திட்டக்குடி—வெள்ளாற்றின் கரையிலுள்ள ஊர் களில் இது முக்கியமானது. இதன் பழைய பெயர் வசிஷ்ட குடி. இவ்வூர்க் கோவிலில் வசிஷ்டருக்கும் விசுவாமித்திர ருக்கும் நடந்த சம்வாதத்தைக் காட்டும் சித்திரங்கள் காணப்படுகின்றன. இங்கு நெசவுத்தொழிலும், பருத்தி யைச் சுத்தம் பண்ணும் தொழிலும் நடக்கின்றன. வாரந் தோறும் இங்கு ஒரு சந்தை கூடுகிறது.

பேண்ணுகடம்—இது வெள்ளாற்றின் கரையிலுள்ள ஒரு பாடல்பெற்ற சிவ ஸ்தலம். இங்குள்ள சுவாமிக்குப் பிரளயகாளேசுவரர் என்று பெயர். இவ்வூருக்கு இப் பெயர் வந்ததற்குக் காரணம், பின்வரும் கதையாலறிய லாம். இந்திரன் தான் சிவபூஜை செய்வதற்கு வேண்டிய புஷ்பங்களைப் பறித்து வரும்படி முதலில் ஒரு தெய்வப் பெண்ணையும், பிறகு ஒரு பசுவையும், பின் ஒரு யானை யையும் அனுப்பினான். அம்மூன்று பேரும் இங்குவந்து இவ்வூரின் அழகைக்கண்டு செய்யவேண்டிய வேலையைச் செய்ய அறியாது மறந்து இங்கேயே இருந்துவிட்டார்கள். பிறகு இந்திரனே வந்து புஷ்பங்களைப் பறித்துக்கொண்டு சென்றான். அவனாற்றான் இவ்வூருக்குத் திருப்பெண்ணு கடம் என்ற பெயர் வந்தது. (திருப்பெண்+ஆ+கடம் திருப்பெண்—தெய்வப்பெண், ஆ—பசு, கடம்—யானை) இக்காலத்தும் இவ்வூர்ப் புஷ்பங்கள் மிக மேலானவை

என்கிறார்கள். நெசவுத் தொழிலும், பருத்தியைச் சுத்தம் பண்ணும் தொழிலும் இங்கு நடைபெறுகின்றன.

நல்லூர்—எந்த இரண்டு நதிகள் ஒன்றுசேருமிடத்திற்குச் சமீபத்தில் இருக்கிறது? இது ஒரு சிவ ஸ்தலம். இக்கோவிலில் மிகுதியாயுள்ள வில்வ இலைகள் விஷக்கடிக்கேற்ற மருந்து என்கிறார்கள்.

மங்கலம்—இவ்வூரில் ஒரு காளி கோயில் இருக்கிறது. அதில் எருமைக் கடாக்களைப் பலி இடுகிறார்கள்.

பாசூர்—ஒரு காலத்தில் இவ்வூரில் காவற்காரர் குடியிருந்தார்கள். இங்கு ஒரு மாதா கோவில் இருக்கிறது.

கோனான்குப்பம்—தேம்பாவணி என்னும் புஸ்தகம் எழுதிய வீரமாமுனிவர் 125 வருஷங்களுக்குமுன் இங்கு கிறிஸ்துவை அவருடைய மாதா தூக்கிச்செல்வதுபோல் ஒரு சிலை செய்து வைத்திருக்கிறார்.

4. திண்டிவனம் தாலூகா.


திண்டிவனம்—இதுவே இத்தாலூகாவின் பிரதான நகரம். இது ஒரு வியாபாரஸ்தலம். இங்கொரு சிவன் கோவிலும்விஷ்ணுகோவிலும் இருக்கின்றன. இக்கோவில்களில் இருக்கிற சிவபெருமானுக்கும் விஷ்ணுவுக்கும் முறையே திந்திரிணீசுவரர் என்றும், நரசிம்மமூர்த்தி என்றும்பெயர். இந்தப் பூர்வத்தில் புளியமரங்கள் மிகுதியாய் இருந்தன. அதனால் இவ்வூர் திந்திரிணீவனம் என்று பெயர் பெற்றது. பிறகு அது திரிந்து திண்டிவனம் என்று வழங்குகிறது என்று சொல்கிறார்கள். இவ்வூர்ச் சிங்காரத்தோட்டத்தில் ஒரு ஜைன விக்கிரகம் இருக்கிறது. பாதிரிகளால் நடத்தப்படுகிற ஒரு ஹை ஸ்கூலும் இங்குண்டு.

பெருமுக்கல்—இது இப்பெயர் பெற்ற மலைச்சரிவில் இருக்கிறது.

மயிலம்—திண்டிவனத்திற்குத் தெற்கே எட்டு மைல் தூரத்தில் இருக்கிற சுப்பிரமணிய ஸ்தலம். சுப்பிரமணியருடைய வாகனத்தின் பெயர் மயில். அதனுல் இதற்கு மயிலம் என்ற பெயர் வழங்குகிறது. இங்கொரு பெரிய மாட்டுச் சந்தை கூடுகிறது.


மரக்காணம்—இது கடற்கரையில் இருக்கிறது. இது திண்டிவனத்திற்குத் தென்கிழக்கில் 20 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கு உப்பளங்கள் மிகுதி.

5- செஞ்சித் தாலூகா.



செஞ்சிக் கோட்டையின் ஒரு பாகம்.

செஞ்சி—இதுவே இத்தாலூகாவின் பிரதான நகரம். திண்டிவனத்துக்கும் இதற்கும் 16 மைல் தூரம். முகம்மதியர் இதனை நஸ்ரத்கட்ட என்றழைக்கிறார்கள். இது



சேஞ்சிக் கோட்டையின் மற்றொரு பாகம்

சரித்திரசம்பந்தமுடையது. இதில் மலைக்கோட்டை ஒன்று இருக்கிறது. அது மிக்க பழமை வாய்ந்தது. இது இயல்பாக 3 குன்றுகளின்மேல் அமைந்திருக்கிறது. அவை திரிகோண உருவமாக அமைந்திருக்கின்றன. 350 வருஷத்துக்குமுன் இருந்த ராஜபுத்ர அரசனான தேசிங்கு ராஜன் என்னும் அரசன் இதனை யாண்டான். இக்கோட்டை மூன்று பிரிவினையுடையது. இவற்றில் சிறந்தது ராஜ

கிரிக்கோட்டை. இதன் முடியில் இருப்பது அரங்கநாதர் கோயில். இதுவே இக்கோட்டையில் இருக்கும் ஆலயங்களுள் மிக மேலானது. இதில் பட்டாபிராமர் ஆலயமும் வேங்கடரமணர் ஆலயமும் இருக்கின்றன. இக்கோட்டையில் இருக்கிற கல்யாண மஹால் 8 உப்பரிகைகள் உடையது. இது ராஜஸ்திரீகளின் வாச ஸ்தானமான அந்தப்புரமாக இருந்தது. சுமார் 80 அடி உயரம் உள்ளது. கட்டிடத்தின் மேற்பாகம் ஊசிபோல் கூர்மையாக உள்ளது. மண் குழாய்கள் வடபக்கத்துச் சுவர் நடுவில் ஊடுருவி ஆருவது மாடிவரை போகின்றன. சக்கரக் குளத்தின் நீரைமேல்மாடிக்குக் கொண்டுவரும் பொருட்டு இக்குழாய்கள் அவ்வாறு வைக்கப்பட்டன என்கிருர்கள். பழைய செஞ்சி என்பது மேலேச்சேரி என்னும் ஒரு சிறு கிராமம். அது செஞ்சிக்கு 3 மைல் தூரத்தில் இருக்கிறது. பூர்வத்தில்அது ஒருஜாகிர். அங்கு அரண்மனேயிருந்ததென்பதற்கு ஏற்ற அடையாளங்களே இப்பொழுதும் பார்க்கலாம். இந்தக் கோட்டையில் 2 குளங்கள் இருக்கின்றன. வெள்ளிக்கிழமை தோறும் ஒரு சந்தை இங்கே கூடுகிறது. இந்த இடத்தை முதலில் தேசிங்கு ராஜனும், பிறகு முகம்மதியரும், அவருக்குப் பிறகு மகாராஷ்டிரரும், மகாராஷ்டிரருக்குப் பிறகு மறுமுறை முகம்மதியரும் ஆண்டார்கள் என்று தெரிகிறது. இக்கோட்டைக்குச் செல்ல இரண்டு வாயில்கள் உண்டு. ஆற்காடுவாசல் என்பது வடக்கேயிருக்கிறது. புதுச்சேரி வாசல் என்பது கிழக்கே இருக்கிறது.

கிருஷ்ணபுரம்—இது ஒரு விஷ்ணு ஸ்தலம். செஞ்சிக்கும் இதற்கும 2 மைல் தூரம். இவ்வூர்க் கோவில் ஒரே பாறையில் குடைந்து செய்யப்பட்டிருக்கிறது. இக்கோயி

விலுள்ள சுவாமி பெயர் ரங்கநாதர். இத்தெய்வமே தேசிங்கின் குலதெய்வம் என்கிறார்கள்.

மலயனூர்—இவ்வூரில் ஒரு அங்காளம்மன் கோயில் இருக்கிறது. வருஷந்தோறும் அவ்வம்மனுக்குத் திருவிழா நடந்து வருகிறது.

சித்தாமூர்—இந்த ஊரில் ஜயினர்கள் மிகுதியாய் இருக்கிறார்கள். இந்த ஜில்லாவில் இருக்கும் ஊர்களில் இவ்வூர்தான் ஜயினர்களுக்கு முக்கியமான இடம். ஒரு ஜினாலயமும், ஜயினகுருவின் மடம் ஒன்றும் இங்கே இருக்கின்றன.

6. விழுப்புரம் தாலூகா.

விழுப்புரம்—இந்தத் தாலூகாவுக்கு முக்கியபட்டணம். இந்த ஜில்லாவின் நடுவிலுள்ள ரயில்வே ஜங்ஷன். இங்கிருந்து பிரிந்து செல்லும் பாதைகளைச் சொல்லுங்கள். இங்கே இருந்து புதச்சேரிக்கு நிலக்கடலை ஏற்றுமதி ஆகிறது. இது கர்னாடக சண்டைகளிற் குறிப்பிடப்பட்ட இடம். இங்கு ஒரு ஹை ஸ்கூலும், டிரயினிங் ஸ்கூலும் உள்ளன. முன் காலத்தில் இங்கு ஒரு ஜைனமதக் கோவில் இருந்ததாகத் தெரிகிறது.

வாளவனூர்—இது விழுப்புரத்திலிருந்து கிழக்கே 7-வது மைலில் இருக்கிறது. இங்கு நிலக்கடலை வியாபாரம். மிகுதி. கடலை எண்ணெய் ஆட்டும் செக்குகள் பல இங்கு உண்டு.

திருவாமாத்தூர்—இது சைவசமய ஆசாரியர் மூவராலும் பாடப்பெற்ற சிறந்த சிவ ஸ்தலம். விழுப்புரத்திற்கும் இதற்கும் 3 மைல்தூரம். இத்தலத்தைப்பற்றி இரட்டையர்

என்ற 2 புலவர்கள் ஒரு கலம்பகம் என்னும் பிரபந்தம் பாடியிருக்கிறார்கள்.

கண்டமங்கலம்-இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். பிரஞ்சு இலாகாவுக்கும், இங்கிலீஷ் இலாகாவுக்கும் நடுவே எல்லையாக இருக்கிறது. இங்கு ஒரு சுங்கச்சாவடி உண்டு. பிரஞ்சு இலாகாவிலிருந்து வாங்கிவரும் பொருள்களுக்கு இங்கே தீர்வை வசூல் செய்கிறார்கள்.

புதுச்சேரி-இது ஒரு ரயில்வே ஸ்டேஷனும் துறைமுக பட்டினமும் ஆம். சென்னைக்கும் இதற்கும் 100 மைல். இது பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமான நகரம். பிரஞ்சுக் கவர்னர் இங்கேதான் வசிக்கிறார். இவ்வூர் வெகு அழகாகக் கட்டப்பட்டது. இங்கு நடைபெறும் கைத்தொழில்கள் எவை? இங்கிருந்து நிலக்கடலை ஏற்றுமதி அதிகம்.

Artesian wells என்ற குழாய்க் கிணறுகளுக்கு இது பேர் போனது. முன்னொரு காலத்தில் இந்த நகரம் ஒரு வித்தியா ஸ்தானமாக இருந்ததாகத் தெரிகிறது. அப்போது இங்கு வேத, இதிகாச, புராணங்கள் முதலியன கற்பிக்கப்பட்டன.

7. திருக்கோவிலூர்த் தாலூகா.

திருக்கோவிலூர்—இது ஒரு சிறந்த விஷ்ணு ஸ்தலம். இது பெண்ணை நதியின் தென்கரையில் இருக்கிறது. இங்குள்ள விஷ்ணுகோவில் மிகவும் அழகு வாய்ந்தது. ஆகையால் இது திருக்கோவிலூர் என்றழைக்கப் பட்டது. இக்கோவிலில் உள்ள விஷ்ணுவின் பெயர் திரிவிக்கிரமப் பெருமாள் என்பது. இவருக்கு திருவிடைக்கழி ஆழ்வார் என்ற மற்றொரு பெயரும் வழங்குகிறது. இங்குள்ள விஷ்ணுவைப் பற்றி ஒரு கதையுண்டு. அதாவது, விஷ்ணு வாமனவதாரம்

செய்து மஹாபலியிடம் 3 அடிமண் தானம்கேட்டுப்பெற்ருர். மண்ணை ஓரடியாலும் விண்ணை ஓரடியாலும் அளந்தார். மூன்ருவது அடிக்கு இடமில்லாமையால் அவன் தலையில் காலை வைத்தார். இந்தக் காட்சியை இக்கோவிலில் காணலாம். முதல் ஆழ்வார்களாகியபொய்கை, பூதம்,பேய் என்னும் மூவரும் முதல்முதல் ஒருவரையொருவர் இங்குத்தான் சந்தித்தார்கள். இவ்வூரில் ஒரு சிவாலயமும் இருக்கிறது. அது நாட்டுக்கோட்டைச் செட்டிகளால் சில வருஷங்களுக்கு முன் புதுப்பிக்கப்பட்டது. வீர சைவராகிய லிங்கம் கட்டிகளின் மடம் ஒன்று இங்கிருக்கிறது.

திருவெண்ணெய் நல்லூர்—இது சுந்தரமூர்த்தி நாயனருக்குக் கல்யாணம் செய்யும் பொழுது சிவபெருமான் ஒருகிழவர்போல்வந்து தடுத்தாட்கொண்ட சிவக்ஷேத்ரம். அப்பொழுது சுந்தரமூர்த்தி சுவாமிகள் பித்தாபிறைசூடி என்று தொடங்கும் பதிகம்பாடி ஸ்தோத்திரம்செய்தார். சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட சிவஞான போதத்தைத் தமிழில் சூத்திரமாகச்செய்தமெய்கண்டதேவர் இவ்வூரில் தான் இருந்தார்.

உளுந்தூர்ப்பேட்டை—இங்கிருந்து எங்கெந்த ஊர்களுக்குச் சாலைகள் செல்லுகின்றன? இவ்வூரில் ஒருசிவாலயம் இருக்கிறது. இதைப்பற்றி ஒரு கதை வழங்குகிறது. அதாவது ஒரு வியாபாரி மிளகு மூட்டைகள் கொண்டுவந்தான். அதை அவ்வூரிலிருக்கும் ஒரு மனிதன் என்ன மூட்டை என்றுகேட்டான். அவன் உளுந்துமூட்டை என்ருன். பிறகு வியாபாரி தன் மூட்டைகளைப் பிரித்துப் பார்க்க, மூட்டைகளில் அவ்வளவும் உளுந்து இருக்கக் கண்டான்; உடனே கடவுள் செயலைப் பார்த்து ஆச்சரிய மடைந்தான். பிறகு சிவபெருமானுக்கு ஒரு கோயில் கட்டினன்.

அதனால் இவ்வூருக்கு உழுந்தூர்ப்பேட்டை என்று பெயர் வந்தது.

அரகண்டநல்லூர்—இது ஒரு சிவஸ்தலம். இது பெண்ணையாற்றின் வடகரையில், திருக்கோவிலூருக்கு எதிரே இருக்கிறது. இக்கோவில் ஒரே கற்பாறையிற் குடைந்து செய்யப்பட்டிருக்கிறது. இதன்முன் கற்பாறையில் ஒரு குளம் வெட்டப்பட்டிருக்கிறது. அது பீமசேனனால் கதாயுதங்கொண்டு வெட்டப்பட்டது என்கிறார்கள்.

மணலூர்ப் பேட்டை—இது ஒரு வியாபார ஸ்தலம். பெண்ணைநதியின் கரையில் இருக்கிறது. இங்கு வாரந்தோறும் ஒரு சந்தை கூடுகிறது. சந்தைக்கு வடஆற்காடு, சேலம் முதலிய இடங்களிலிருந்து ஆடுமாடுகளைக் கொண்டு வந்து வியாபாரம் செய்கிறார்கள். இவ்விடத்தில் முற்காலத்தில் நல்ல துணி நெசவு நடந்து வந்தது என்கிறார்கள். தைமீ முதல் ஐந்து நாட்களில் கங்கை இங்கு வருகிறாள் என்றும், அப்பொழுது பெண்ணையில் ஸ்நாநம் செய்வது விசேஷமென்றும் பலவிடங்களிலிருந்து பல திரளான ஜனங்கள் இங்கு வருகிறார்கள். அக்காலத்தில் சுவாமி வெண்ணெய் நல்லூரிலிருந்து இங்கேவந்து தீர்த்தம் கொடுக்கிறார்.

தேவனூர்—இவ்வூருக்கும் திருக்கோவிலூருக்கும் இரண்டு மைல் தூரம். திருமால் ராமராக அவதாரம் செய்தபொழுது, இவ்வூரில் வாலிகில்யர் என்ற ஒருவகை வானர ஜாதியார் இங்கிருந்தார்கள் என்று புராணம் கூறுகிறது.

சேந்தமங்கலம்—இங்கே ஒரு சிவன் கோவில் இருக்கிறது. இது ஒரு பழமையான சிவ ஸ்தலம். கீழியூர், நாமநல்லூர் முதலியவைகளும் இத்தாலூகாவிலுள்ள சிவஸ்தலங்களே.

8. கள்ளக்குறிச்சித் தாலூகா.

கள்ளக்குறிச்சி--இது கோமுக நதிக்கரையில் உள்ளது. இது இந்தாலூகாவின் முக்கிய பட்டணம். இவ்வூரில் ஒரு அழகான குளம் இருக்கிறது. இதன் ஜலம் உருசியாயிருப்பதால், 'அதையே இவ்வூரில் குடி ஜலமாக உபயோகிக்கிறார்கள். இவ்வூரைச்சுற்றி எது விசேஷமாகப் பயிரிடப்படுகிறது? இங்கு நடக்கும் கைத்தொழில் என்ன? செஞ்சியை ஆண்ட தேசிங்கு ராஜனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் அல்லவா? அக்கதையில்சொல்லப்படும் கான்சாகிப்பைப் பற்றிக் கேள்விப்பட்டு இருக்கிறீர்களா? அவர் ஆற்காடு நவாபுடன் சேர்ந்துகொண்டு, தேசிங்கு ராஜனுக்கு விரோதமாகச் சண்டை செய்திருக்கிறார். அவருடைய கோட்டை இந்த ஊரில் இருக்கிறது.

சின்னச்சேலம்—கள்ளக்குறிச்சிக்குத் தென்மேற்கேயுள்ள ஒரு க்ஷேமமான ஊர். இங்கு எந்தக் கைத்தொழில் நடக்கிறது?

ராவுத்தநல்லூர்—கள்ளக்குறிச்சிக்கும் இதற்கும் 16 மைல் தூரம். சைவசமயாசிரியர் நால்வரில் ஒருவரான மாணிக்கவாசகர் பொருட்டு சிவபெருமான் நரிகளைக் குதிரைகளாக்கித் தாம் ஒரு ராவுத்தன் போலிருந்து அக் குதிரைகளைப் பழக்கினார். ஆகையால் இவ்வூருக்கு ராவுத்தநல்லூர் என்னும் பெயர் வந்தது என்கிறார்கள்.

ருஷிவந்தியம்—இதற்கும் கள்ளக்குறிச்சிக்கும் 11 மைல்தூரம். இங்கொருசிவாலயம் இருக்கிறது. அதிலுள்ள சுவாமிபெயர் அர்த்தநாரீசுவரர். இக்கோயிலைச்சுற்றி முற்காலத்தில் ஒரு கோட்டை மதில் இருந்தது என்கிறார்கள். திருமலைநாயக்கர் கட்டிய அழகான மண்டபம் ஒன்றிங்கு

இருக்கிறது. அதில் அவர் உருவச்சிலை ஒன்றும், வாயில்பந்தை வைத்துக் கொண்டிருக்கும் ஒரு யாளியின் உருவச்சிலையும் வெகு அழகாகச் செய்து வைக்கப்பட்டு இருக்கின்றன.

சித்தலூர்—கள்ளக்குறிச்சிக்கும் இதற்கும் உள்ள தூரம் 8 மைல். இங்கு அங்காளம்மன் கோவில் இருக்கிறது. இது இங்குள்ள செம்படவர்களுக்கு இஷ்ட தெய்வம். இதற்கு வருஷத்திற்கு ஒருமுறை பிப்ரவரி மார்ச்சு மாதங்களில் செம்படவர்கள் ஒரு உத்ஸவம் நடத்துகிறார்கள். இந்த ஊரின் வெல்லம் சிறந்தது என்கிறார்கள்.

திருவரங்கம்—ஒரு விஷ்ணு ஸ்தலம். இது பெண்ணையாற்றின் கரையில் இருக்கிறது. இக்கோவிலில் இருக்கும் பெருமாள் பெயர் அரங்கநாதர். இவர் சேவை விசேஷமானது.

தென் ஆற்காடு ஜில்லா சரித்திரம்.

நமது ஜில்லாவின் பூர்வீக வாசிகளின் வமிசத்தார்கள் இப்பொழுதும் கல்ராயன் மலைகளில் வசிக்கிறார்கள். கற்களால் ஆயுதங்கள் செய்து அவற்றை இப்பொழுதும் கோவில்களில் வைத்து அவர்கள் பூஜை செய்கிறார்கள். அவர்களுக்குப்பிறகு இருந்த ஜனங்களை அடக்கம் செய்த கல்லறைகள் இங்குப் பல இடங்களிற் காணப்படுகின்றன. அவை 6 அடி நீளமும், 4 அடி அகலமும், 3 அடி ஆழமும் உள்ளன. அவற்றைச் சோதித்தால் உள்ளே எலும்புக் கட்டுகளும், இரும்புகளும் காணப்படுகின்றன. இவர்களுக்கு மண்பாண்டங்களும், இரும்பு ஆயுதங்களும் செய்யத் தெரியும்போலும்!

பெண்ணை நதியின் கிழ்ப்பக்கத்திலுள்ள தேசம் அரவ நாடு என்று வழங்கப்பட்டதாகத் தமிழ் நூல்களிற் கூறப்படுகின்றது. இந்த அரவ நாட்டிற்கும், கல்ராயன் மலைகளுக்கும் இடையில் மலாடு என்ற மலையமான் நாடு இருந்தது. அதன் இராஜதானி திருக்கோவிலூர் என்ற நகரம்.

தென்னிந்தியாவில் முன்காலத்தில் 3 அரச வமிசத்தார்கள் ஆண்டார்கள். தொண்டை நாட்டில் காஞ்சிபுரத்தை இராஜதானியாகக்கொண்டு பல்லவர்கள் ஆட்சி செய்தார்கள். சோழ ராஜர்கள் தஞ்சாவூரைத் தலைநகராகவும், பாண்டியர்கள் மதுரையை இராஜதானியாகவும் வைத்துக்கொண்டு அரசாண்டார்கள்.

அவர்கள் ஒவ்வொருவரும் கி. பி. 6-வது நூற்றாண்டு வரை இந்த ஜில்லாவின் ஒவ்வொரு பாகத்தையும் ஆண்டிருக்கலாம் என்று சொல்லலாம். இந்த ஜில்லா தொண்டை

மண்டலத்தின் ஒரு பாகம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆருவது நூற்ருண்டின் முடிவில் சிம்மவிஷ்ணு என்ற பல்லவ இராஜனுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் மகேந்திரவர்மன். இவன் முதலிற் சமணனுக இருந்தான். இவன் அப்பர் என்ற சைவக் குருவைப் பலவாறு துன்பப்படுத்தினுன். பிறகு அவன் அப்பரால் சைவன் ஆக்கப்பட்டான். திருப்பாதிரிப்புலியூரில் இருந்த சிவன் கோவிலேக் கட்டினவன் இவனுக இருக்கலாம் என்று சரித்திரக்காரர்கள் அபிப்பிராயப்படுகிருர்கள்.

அவனுக்குப் பின்வந்த ராஜசிம்மன் நமது ஜில்லாவை ஆண்டான் என்பது,விழுப்புரம் தாலூகாவில் பணமலேயை அடுத்துள்ள குகைக் கோவிலில் செதுக்கியுள்ள கல்வெட்டினுல் தெரிகிறது. எனவே இந்த ஜில்லாவானது 8-ம் நூற்ருண்டின் கடைசிவரை பல்லவ அரசர்களால் ஆளப்பட்டது. 8-ம் நூற்ருண்டில் பல்லவர்களேக் கங்கபல்லவர்கள் வென்றனர். அவர்களேச் சோழர்கள் வென்று, அவர்கள் நாட்டைத் தங்கள் இராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார்கள். 12-வது நூற்ருண்டின் முடிவில் சோழர்களில் மற்ருெரு பிரிவார் பழைய சோழர்களே வென்று 13-வது நூற்ருண்டின் ஆரம்பவரை ஆண்டனர். அவர்கள் தேசத்தோடு இந்த ஜில்லாவும் சேர்ந்திருந்தது. அதன்பிறகு பாண்டியர்கள் தலேயெடுத்தார்கள். முதலாவது ஜடாவர்ம சுந்தர பாண்டியன் காலத்தும், இரண்டாவது ஜடாவர்ம சுந்தர பாண்டியன் காலத்திலும் இந்த ஜில்லா பாண்டியர்கள் அரசாட்சிக்குள் இருந்தது. அதன் பிறகு குலசேகரன் என்ற கேரளவரசன் இந்த நாட்டின் ஒரு பாகத்தைக் கைப்பற்றினுன். அவனது சிலாசாசனம் திருவதிகைக் கோவிலிற் காணப்படுகிறது.

அதன்பிறகு துவார சமுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு இந்த ஜில்லாவின் ஒருபாகத்தை வேறரசர்கள் ஆண்டார்கள். அக்காலத்தில் வட இந்தியாவை அல்லாவுடீன் கில்ஜி என்ற முகம்மதிய அரசன் ஆண்டான். அவன் தென்னிந்தியாவை வெல்ல எண்ணித் தனது சேனைத்தலைவனை மாலிகாபர் என்பவனைப் பெருஞ்சேனையோடு தென்னிந்தியாவுக்கு அனுப்பினன். அவன் துவார சமுத்திரத்தைக் கைப்பற்றி அதன்பிறகு மதுரை வரையிலும் சென்று தென்னிந்தியாவின் பெரும்பாகத்தைத் தனது வசப்படுத்திக் கொண்டான். அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் சுமார் 50 வருஷகாலம் தென்னிந்தியாவில் ஆண்டார்கள்.

அதன் பிறகு இந்து அரசர்களில் ஒருவர் பல்லாரி ஜில்லாவில் துங்கபத்திரா நதிக்கரையில் உள்ள ஹம்பி என்னும் நகரத்தை இராஜதானியாகக் கொண்டு விஜயநகர ராஜ்யத்தை ஸ்தாபித்தார். அந்த வமிச அரசர் முற்கூறிய முகமதியரைத் தென்னிந்தியாவை விட்டுத் துரத்திவிட்டார்கள். அவர்களில் கீர்த்தி பெற்றவர் கிருஷ்ணதேவராயர். அவர் நமது ஜில்லாவிலுள்ள சிதம்பரம் கோவிலில் சில பாகங்களைக் கட்டுவித்தார். தென்னிந்தியா முழுமையும் 1565-ம் வருஷம்வரை விஜயநகர அரசர்கள் ஆட்சியில் இருந்தது. இவ்வருஷத்தில் 5 முகம்மதிய அரசர்கள் ஒன்றுகூடித் தலைக்கோட்டை யுத்தத்தில் விஜயநகர அரசரோடு போர்புரிந்து வென்றார்கள். ஆயினும் விஜயநகர அரசர்கள் தங்கள் செல்வாக்கில் குறைபடவில்லை. வெவ்வேறு காலத்தில், வேனுகொண்டா, சந்திரகிரி, செங்கற்பட்டு முதலிய இடங்களை ராஜதானியாகக் கொண்டு ஆண்டார்கள். நமது ஜில்லாவிலுள்ள செஞ்சிக்கோட்டை விஜய

நகர அரசரின் பாதுகாப்பாக இருந்தது. பிறகு 1638-வரை பீஜப்பூர் கோல்கொண்டா சுல்தான்கள் விஜயநகர மன்னர்களுக்கு இடையூறு செய்துகொண்டு இருந்தார்கள். அவ் வருஷம் செஞ்சி, பீஜப்பூர் சுல்தானுல்கைப்பற்றப்பட்டது. அந் நூற்ருண்டின் முடிவில் சிவாஜி என்ற மகாராஷ்டிரமன்னர் கிளம்பினுர். அவர் ஒரு பெரிய வீரர். அவர் முதலில் பீஜப்பூர் அரசர் வேலையில் அமர்ந்திருந்தார்; முகம்மதியர்களைத் தென்னிந்தியாவை விட்டு அப்புறப் படுத்திவிட்டுத் தாமே ஆள நினைத்தார். அவர் செஞ்சிக்குப் போய் அங்கிருந்த தலைவனேடு சிநேகம் காட்டினுர். அந்தத் தலைவனிடம் தாம் பீஜப்பூர் அரசரின் காரியஸ்தன் என்ருர்; அவர் நம்பினுர். ஒருநாள் சிவாஜி அத்தலைவனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் திடீரெனச் சிறையில் இட்டுத் தாம் செஞ்சியைக் கைப்பற்றிக் கொண்டு பீஜப்பூரைப் பிடித்துக் கொண்டார். அக்காலத்தில் வடஇந்தியாவில் அவுரங்கஜேப் என்ற முகலாய அரசன் ஆண்டான். அவன் பீஜப்பூரையும் கோல்கொண்டாவையும் கைப்பற்றினுன். பிறகு அவனுடைய சேனைத் தலைவன் மகாராஷ்டிரரை எதிர்த்துச் செஞ்சிக்கோட்டையைக் கைக்கொண்டு அதை தலைநகராக்கினுன். அது தேகத்துக்கு ஏற்றபடி இல்லாமையால், ஆற்காடு தென்னிந்தியாவின் ராஜதானி யாக்கப்பட்டது. அவுரங்கஜேப் தன்னுட்டைப் பலபிரிவு (சுபா) களாகப் பிரித்து ஒவ்வொரு சுபாவுக்கும் ஒரு தலைவனை ஏற்படுத்தி யிருந்தான். ஒவ்வொரு சுபாவின் கீழும் நவாப் என்ற அதிகாரிகள் இருந்தனர். நமது தக்ஷணத்திற்குத் தலைவராகிய நைஜாமல் முல்க் என்பவர் அவுரங்கஜேப் காலத்தில் வசித்தார். அவருக்குக்கீழ்ப்பட்டவர் நவாப். இவரேகர்நாடகநவாப்.

1748-ம் வருஷம் மேற்கூறிய நைஜாமல் முல்க் இறந்தார். இவருடைய மகன் நாஸர் ஜங் என்பவர் தக்ஷண சுபேதார் ஆனர். அவருடைய பந்துக்களில் ஒருவர் தமக்கே அப்பட்டம் சொந்தமானது என்றார். அவர் புதுச்சேரியிலிருந்த பிரஞ்சுக்காரரைத் தமக்கு உதவி செய்யும்படி வேண்டினர். ஆற்காட்டில் அச்சமயம் அன்வாருதீன் நவாப் ஆனர். அவருக்குச் சந்தா சாஹேப் என்ற ஒரு சொந்தக்காரர் இருந்தார். அவர் தமக்கே ஆற்காட்டு நவாபு பதவி உரியது என்றார். இருவரும் பிரஞ்சுக்காரரைத் தமக்கு உதவிசெய்யும்படி கேட்டுக்கொண்டார்கள்.

பிரஞ்சுக்காரர்கள் இந்த இருவருக்கும் உதவி செய்வதாக ஒப்புக்கொண்டார்கள். பிரஞ்சுக்காரருடைய சேனைத் தலைவர் டியூப்ளே என்னும் வீரர். அவர் யுத்தம் செய்வதில் பிரியம் உடையவர். ஒரு பெரிய சேனையைப் பிரெஞ்சுக்காரர்கள் ஆற்காட்டுக்கு அனுப்பினர்கள். அந்தச் சேனையோடு சந்தாசாஹேப் சேனையும் சேர்ந்தன. மூன்றுசேனைகளும் ஆற்காட்டை முற்றுகை போட்டு அன்வருதீனைக் கொன்றன. அன்வருதீனுடைய மகன் முகம்மதாலி. அவர் உயிர் தப்பிப் பிழைத்துத் திரிச்சிராப்பள்ளிக்குச் சென்று ஒளிந்தார். ஆற்காட்டைக் கைப்பற்றிய சேனைகள் நைஜாம் நாட்டிற்குச் சென்று நாஸர்சங்கைக் கொன்றுவிட்டு ஹைதராபாத்துக்குச்சென்றன. புதியநைஜாமும் ஆற்காட்டு நவாபும் பிரஞ்சுக்காரர்களுக்குச் சில ஜில்லாக்களையும் பணத்தையும் கொடுத்தார்கள். டியூப்ளேக்குக் கர்நாடக கவர்னர் என்ற பட்டமும் கொடுக்கப்பட்டது. பிரஞ்சுக்காரர்கள் இங்ஙனம் செல்வாக்குடன் இருந்தார்கள்.

திரிச்சிராப்பள்ளியில் முகம்மதாலி இருந்தநிலைமையை முன்னரேசொன்னேமல்லவா ? பிரஞ்சுக்காரரும்சந்தா

சாஹேபும் திரிச்சிராப்பள்ளிக்குச் சென்று முகம்மதாலி இருக்கும் இடத்தை முற்றுகை போட்டார்கள். முகம்மதாலி தமக்கு உதவிசெய்யும்படி இங்கிலீஷ்காரரை வேண்டிக்கொண்டார். அவர்களும் உதவிசெய்ய இணங்கினார்கள். அப்போது இங்கிலீஷ்காரரில் ராபர்ட் கிளைவ் என்ற ஒரு வீரர் இருந்தார். அவர் இந்த விஷயமாய் ஒரு யுக்தி சொன்னார். சந்தாசாஹேபின் தலைநகரமான ஆற்காட்டை இங்கிலீஷ்காரர் எதிர்த்தால், சந்தாசாஹேப் தமது நகரைக் கைப்பற்றவருவார் என்றும், அப்போது திரிச்சிராபபள்ளி முற்றுகை நீங்கிவிடும் என்றும், அதனால் முகம்மதாலி விடுதலை அடைவார் என்றும் சொன்னார். அவருக்கு மேலிருந்த அதிகாரிகளும் இவர் கூறியது சரியென்று ஒப்புக்கொண்டார்கள். உடனே ஒரு சிறு சேனையுடன் க்ளைவையே ஆற்காட்டுக்கு அனுப்பினார்கள்.

க்ளைவ் ஆற்காட்டை முற்றுகை போட்டார். அவ் விஷயம் திரிச்சியிலிருந்த சந்தாசாஹேப்புக்குத்தெரிந்தது. அவர் உடனே ஒரு பெருஞ்சேனையைத் தமது மகன் ராஜா சாஹேப்வசம் ஆற்காட்டைக் காக்கும்படி அனுப்பினார். இங்ஙனம் திருச்சிராப்பள்ளி முற்றுகை எடுபட்டது. முகம்மதாலி சிறையினின்றும் வெளிப்பட்டார். ஆற்காட்டுக்குச் சென்ற சந்தாசாஹேபின் சேனை வெற்றி பெறவில்லை க்ளைவ் ஜேயமடைந்தார். முகம்மதாலி ஆற்காட்டு நவாபு ஆனார். பிரஞ்சுக்காரரின் கீர்த்தி குறைவுபடத் தொடங்கிற்று. முகம்மதாலி கர்நாடக நவாபாயிருந்த காலத்தில் மைசூரில் ஹைதர் ஆலி என்ற ஒரு முகம்மதியர் இருந்தார். அவர் மைசூரில் வெகுகாலமாக ஆண்டுவந்த அரசரின் போர்வீரராக இருந்தவர். பிறகு பலவஞ்சனைகள் செய்து அவரைச்சேர்ந்த நாட்டைத்தாமே கைப்பற்

றிக்கொண்டார். இப்படி அவர் மைசூருக்குச் சுல்தான் ஆனார். அவர் இங்கிலீஷ்காரரை எதிர்த்துத் தோல்வி அடைந்தார். அவர் இறந்தபிறகு, அவர் குமாரர் திப்பு என்பவர் சுல்தான் ஆனார். அவரும் பிரஞ்சுக்காரரோடு சதியாலோசனை செய்து இங்கிலீஷ்காரருடன் செய்த யுத்தத்தில் இறந்துபோனார்.

முகம்மதாலி 48 வருஷம் கர்நாடக நவாபாக இருந்தனர். அவருக்குப் பிறகு அவர் மகன் உம்தத்-உல் உம்ரா நவாப் ஆனார். ஸ்ரீரங்கத்தில் திப்பு இறந்த பிறகு, அங்குள்ள கடிதங்களை இங்கிலீஷ்காரர்கள் சோதித்தார்கள். அங்கே முகம்மதாலியும் அவர் மகனும் இங்கிலீஷ்காரருக்கு விரோதமாக ஹைதர் ஆலிக்கும் திப்புவுக்கும் உதவி செய்வதாக எழுதியிருந்த கடிதங்கள் கிடைத்தன. இப்படியாகத் தங்களுக்கு உதவிசெய்த இங்கிலீஷ்காரருக்கே கர்நாடக நவாப்புகள் விரோதம்செய்தார்கள். இதுநிற்க,

இக்காலத்திற்குக் கொஞ்சமுன்னரே முதல், ஐரோப்பாக் கண்டத்தைச் சேர்ந்த சில தேசத்தார்கள் நமது நாட்டில் வந்து வியாபாரம் செய்தார்கள். அவர்களுள் முதல் முதல் வந்தவர்கள் போர்த்துக்கேசியர். அவர்கள் நமது ஜில்லாவில் பரங்கிப்பேட்டையில் தங்கினார்கள். பிறகு டச்சுக்காரர்கள் பரங்கிப்பேட்டையிலும் தேவனாம் பட்டணத்திலும் தங்கி வியாபாரம்செய்தார்கள். தேவனாம் பட்டணத்தை அடுத்து அவர்கள் செயின்ட்டேவிட் கோட்டையைக் கட்டினார்கள். கொஞ்ச காலத்திற்குமுன் சிவாஜியோடு மனஸ்தாபப் பட்டுக்கொண்டு அவ்விரண்டிடங்களையும் விட்டுவிட்டுப் பழவேற்காட்டுக்குப் போய் விட்டார்கள். இரண்டு வருஷங்களுக்குப் பிறகு பரங்கிப் பேட்டைக்குத் திரும்பிவந்து மகாராஷ்டிரர்களிடம்

உத்திரவு பெற்று அங்கே ஒரு பண்டசாலை கட்டிக் கொண்டார்கள். பத்து வருஷம் வரை அவர்கள் அங்கேயே தங்கியிருந்தார்கள். அக்காலத்தில் பிரெஞ்சுக் காரர்கள் புதுச்சேரியில் ஒரு கோட்டை கட்டிக்கொண்டு வியாபாரம் புரிந்து வந்தனர். டச்சுக்காரர்கள் புதுச்சேரியைப் பிடித்துக் கொண்டார்கள்.

1639-ம் வருஷம் இங்கிலீஷ்காரர் செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டினார்கள். 1674-ம் வருஷம் செஞ்சியிலிருந்த பீஜப்பூர் சுல்தானின் பிரதிநிதியாகிய முகம்மத் கான் என்பவன் இங்கிலீஷ்காரரை தன்னை வந்து பார்க்கும்படி சொல்லி யனுப்பினான். அவர்கள் அவனைச் சந்தித்தார்கள். அவன் அவர்களைப் பரங்கிப்பேட்டையிலாவது புதுச்சேரியடுத்த வழுத்தாவூரிலாவது பண்டசாலை ஏற்படுத்திக் கொண்டு வியாபாரம் செய்யச் சொன்னான்.

இங்கிலீஷ்காரர் 1696ல் செஞ்சியிலிருந்த மகாராஷ்டிரத் தலைவனுக்கு $1\frac{1}{2}$ லக்ஷம்ரூபாய் கொடுத்துத் தேவனாம் பட்டணத்தை விலைக்கு வாங்கினார்கள். அங்கே செயின்ட் டேவிட் கோட்டையைக் கட்டினார்கள். பிறகு அவர்களுக்கு அதுவே முக்கிய பட்டணமா யிருந்தது. செயின்ட் டேவிட் கோட்டை கட்டப்பட்டபொழுது, டச்சுக்காரர் தேவனாம் பட்டணத்தில் இருந்தார்கள்.

இங்கிலீஷ்காரருக்கும் டச்சுக்காரருக்கும் மஞ்சகுப்பத்தின் எல்லை சம்பந்தமாய் வழக்கு ஏற்பட்டது. முடிவில் டச்சுக்காரர் வசமிருந்த மஞ்சகுப்பம் இங்கிலீஷ்காரர் கைக்கு வந்தது. டச்சுக்காரர் பலம் அடைந்தவுடன், இங்கிலீஷ்காரரை எதிர்க்க யோசித்தார்கள். ஆனால் இங்கிலீஷ்காரர் தங்கள் கொடியை மஞ்சகுப்பத்தில் கட்டித்

தகுந்த காவலுடன் அதைப் பாதுகாத்தார்கள். 1746-ம் வருஷம் இங்கிலீஷ்காரர் சென்னையைத் தங்கள் வசமாக்கிக் கொண்டார்கள்.

1801-ம்வருஷம் உம்தத்-உல்உம்ரா இறந்தனர். அவர் அரசாட்சி செய்ததும் நன்ருக இல்லை. அவருக்குப் பிள்ளைகளும் இல்லை. ஆதலால் இங்கிலிஷ்காரர் அவருடைய பந்துக்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துவிட்டு நவாபின் ராஜ்யத்தைத் தங்கள் இராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார்கள். அப்பால் இந்தியா முழுதும் கிழக்கு இந்தியா கம்பேனியாரிட மிருந்து கருணைமிகுந்த விக்டோரியா மகாராணியாரின் ஆட்சிக்குள்வந்தது. அன்றுமுதல் இன்றுவரை, இங்கிலீஷ் ஆட்சியில் யாதொரு துன்பமும் இல்லாமல் நமது ஜில்லா இருந்து வருகிறது.

சிவிக்ஸ்.

தற்போது இந்த ஜில்லா மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தி ஐந்தாவது ஜார்ஜ் மன்னர் என்பவரின் அரசாட்சிக்குள் இருக்கிறது. அவர் இங்கிலாந்து தேசத்திலுள்ள லண்டன்மா நகரத்தில் இருக்கிருர். அவருடைய ஆளுகைக்குள் நமது நாட்டைத்தவிர அநேக நாடுகள் எல்லாக் கண்டங்களிலும் இருக்கின்றன. இந்த எல்லாநாட்டையும் அவர் நேராகவந்து ஆளுவது சிரமமாயிருக்கும். ஆகையால், தமக்குப் பிரதிநிதிகளை ஆங்காங்கு நியமித்திருக்கிருர். நமதுநாட்டுப்பிரதிநிதியின்பெயர்லார்ட்வில்லிங்டன் அவர் ஸிம்லாவில் வசிக்கிருர். இவருக்குட்பட் டிருக்கும் ஒவ்வொரு ராஜதானிக்கும் ஒவ்வொரு கவர்னர் நியமிக்கப்பட்டிருக்கிருர். நமது சென்னை ராஜதானியின்

கவர்னர் ஸர் ஜார்ஜ் ஸ்டான்லி. ஒவ்வொரு ராஜதானியும் பலஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு, கலெக்டர் என்பவரால் ஆளப்படுகிறது. ஆகவே, இப்போது நமது அதிபதி நமது ஜில்லாவின் கலெக்டர்தான். சமாதானம், வரி, நியாயம் முதலியவற்றிற்கு அவர்தான் பொறுப்பாளி.

ஜமீன் பாகங்களில் நிலவரிக்கு ஜமீன்தார்களே சுதந்தரவாளிகள். அவர்கள் ஆங்கில ராஜாங்கத்தாருக்குக் கப்பம் கட்டுகிறார்கள். ஜமீனில்லாத (அயன்) கிராமங்களில் ராஜாங்கத்தாரே நேராக வரிவசூல் செய்துகொள்ளுகிறார்கள். இவ்வெல்லாப் பாகங்களிலும் ஸீவில், கிரிமினல் நியாயங்கள் முதலிய அதிகாரங்கள் நமது ராஜாங்கத்தாரிடமே இருக்கின்றன.

கலெக்டருக்கு ரெவினியூவசூல்செய்வதில் உதவிபுரிய சப்-கலெக்டர், டிப்டி-கலெக்டர், தாசில்தார் (அல்லது டிப்டி-தாசில்தார்) ரெவினியூ இன்ஸ்பெக்டர், கிராம முனிசீப், கர்ணம் முதலியஉத்தியோகஸ்தர்கள்நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தாசில்தாரே ஒவ்வொரு தாலூகாவிலும் ரெவினியூ வசூல் செய்வதற்குத் தலைமை அதிகாரி. இந்த ஜில்லா நான்கு டிவிஷனாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு டிவிஷனும் ஒவ்வொரு டிவிஷனல் ஆபீஸரின் ஆட்சியில் இருக்கிறது.

கூடலூர் டிவிஷன்—கூடலூர்த்தாலூகா மட்டும் ஒரு டிவிஷன் ஆகிறது. இந்த டிவிஷனுக்கு மேலான அதிகாரி ஒரு டிப்டி கலெக்டர்.

சிதம்பரம் டிவிஷன்—சிதம்பரம் தாலூகாவும், விருத்தாசலம் தாலூகாவும் சேர்ந்து இந்த டிவிஷன் ஆகிறது. அந்த டிவிஷனுக்கு மேலான அதிகாரியின் பெயர் டிப்டி கலெக்டர்.

திண்டிவனம் டிவிஷன் — திண்டிவனம் தாலூகா, விழுப்புரம் தாலூகா, செஞ்சித் தாலூகா என்ற 3 தாலூகாக்களும் சேர்ந்து இந்த டிவிஷன் ஆகிறது. இந்த டிவிஷனுக்கு மேலான அதிகாரியின் பெயர் சப் கலெக்டர்.

திருக்கோவிலூர் டிவிஷன்—திருக்கோவிலூர் தாலூகாவும், கள்ளக்குறிச்சித் தாலூகாவும் சேர்ந்து இந்த டிவிஷன் ஆகிறது. இதன் தலைமை அதிகாரி ஒரு டிப்டி கலெக்டர்.

பொதுவாக எந்தப் பெயரால் ஒரு டிவிஷனுக்குப் பெயர் உண்டாகிறதோ, அந்தப் பட்டினத்தில்தான் டிவிஷனல் ஆபீஸர் வசிப்பார். அவருடைய ஆபீஸும் அங்கே தான் இருக்கும்.

(1) நியாயபரிபாலன இலாகா—இது ஜில்லாவில் நடக்கும் ஸீவில் விவகாரங்களையும், கிரிமினல் குற்றங்களையும், விசாரித்து நியாயத்தை நிலைநிறுத்துவது.

(2) போலீஸ் இலாகா-ஜனங்கள் இராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களைச் சரியாகக் கவனிக்கிறார்களா என்று பார்ப்பதும், வலியோர் மெலியோரைத் தொந்தரவு செய்யாமல் கவனிப்பதும், திருட்டு, கொலை, களவு, ராஜத்துரோகம் முதலிய குற்றங்கள் நடவாமல் பார்ப்பதும், பெரும்கூட்டங்களில் சச்சரவுகள் நடவாமல் கவனிப்பதும், கஜானாவைக்காப்பதும் இந்தஇலாகாவின் வேலைகள்.

(3) படிப்பு இலாகா--ஜில்லாவிலுள்ள பல நகரங்களிலும், கிராமங்களிலும் அநேக பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு ராஜாங்கத்தார்மிகுந்தபணத்தைக் கொடுத்துப் படிப்பை விருத்திசெய்கிறார்கள். இந்த ஜில்லாவைச்சேர்ந்த ஜில்லா இன்ஸ்பெக்டர் முதலியோர் அடிக்கடி பள்ளிக்கூடங்களுக்குவந்து, பாடங்கள் கற்பிக்கவேண்டும்

முறை இன்னதென்பதைக் காட்டுவதோடு அந்தப்பள்ளிக் கூடத்தில் படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்குத் தக்கபடி கிராண்டுகளும் கொடுப்பார்கள்.

(4) தந்தி—தபால் இலாகா—வெளி ஊர்களிலிருந்து வரும் தந்தி, கடிதங்களைக் கொடுக்கவேண்டியவர்களுக்குக் கொடுக்கவும், அங்கிருந்து அனுப்ப வேண்டியவைகளைக் குறித்த இடங்களுக்கு அனுப்பவும் இந்த இலாகா ஏற்பட்டு இருக்கிறது. கடிதங்கள் தவிர பணம், புத்தகம், துணிமணிகள் முதலியவற்றையும் தபாற்சாலைகள் மூலமாய் அனுப்பவேண்டியவர்களுக்கு அனுப்பலாம். பணம் கையில் கிடைத்தபோது இந்த இலாகாவைச் சேர்ந்த சேவிங்ஸ்பாங்கியில் போட்டால் வட்டியுடன் மோசமில்லாமல் வேண்டும்போது பெறலாம். இந்த டிபார்ட்மெண்டின் உத்தியோகஸ்தர்கள் சூப்ரின்டென்டென்ட், இன்ஸ்பெக்டர், போஸ்ட்மாஸ்டர், ஸப் போஸ்ட் மாஸ்டர், பிராஞ்சு போஸ்ட் மாஸ்டர், தபாற் சேவகர் முதலியோர் ஆவர்.

5. போதுஜன உபகார வேலை செய்யும் இலாகா—(Puplic works Department) நீர்ப்பாய்ச்சலுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வது இதன் கடமை ஆம். இந்த இலாகாவின் உத்தியோகஸ்தர்கள் சீப் எஞ்சினீயர், எஞ்சினியர், சூபர்வைசர், ஓவர்சியர், சப் ஓவர்சியர் மேஸ்திரிகள் ஆவர்.

6. சுகாதார இலாகா:-ஜில்லா வாசிகள் வியாதியால் கஷ்டப்பட்டால் அதைத் தீர்ப்பதற்கும், வியாதி வாராமல் தடுப்பதற்கும் இந்த இலாகா ஏற்பட்டிருக்கிறது. ஜில்லாவிலுள்ள பெரிய ஊர்களில் வைத்திய சாலைகள் இருக்கின்றன. ஜில்லா ஸர்ஜன், உதவி ஸர்ஜன், சப் அஸிஸ்டெண்டு

ஸர்ஜன், கம்பவுண்டர் முதலிய இவர்கள் இந்தஇலாகாவின் உத்தியோகஸ்தர்கள்.

7. காட்டு இலாகா—மலை முதலிய இடங்களிலுள்ள மரங்களைக்காப்பாற்றிக்காட்டைச்சீர்படுத்தஇந்தஇலாகா ஏற்பட்டது. இதன் உத்தியோகஸ்தர்கள் ஜில்லா பாரஸ்ட் ஆபீஸர், ரேஞ்சர், வாட்ச்மென் முதலியோர் ஆவர்.

இந்த ஒவ்வொரு இலாகாவிற்கும் ஜில்லா கஜானவிலிருந்து பணம் மாதாமாதம் கொடுக்கப்படுகிறது. வேலை செய்ய முடியாத கிழவர்கள் பென்ஷன் என்ற உபகாரச் சம்பளம் பெறுகிறார்கள். ஒவ்வொரு இலாகாவிற்கும் மேலான அதிகாரிகள் சென்னையில் இருக்கிறார்கள். அவர்கள் அந்தந்த இலாகாவின் விஷயங்களைச் சென்னை கவர்னருக்குத்தெரிவிக்கிறார்கள். அவர் இவைகளை நமதுபெருமை தங்கிய ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தியார் நியமித்த இந்திய ராஜாங்கக் காரியதரிசிக்குத் தெரியப்படுத்துகிறார். அவர் பார்த்து, நமக்கு வேண்டிய நன்மைகளை அப்போதைக்கு அப்போது செய்துவருகிறார்.


முற்கூறிய இலாகாக்கள் நமது துரைத்தனத்தாரால் நேரிற் கவனிக்கப்பட்டாலும், சில விஷயங்களில் நமக்குச் சுய ஆட்சி கொடுத்திருக்கிறார்கள். அந்த இலாகாவின் அதிகாரிகள் பழைய ரஸ்தாக்களைப் பாதுகாத்தல். புதிய ரஸ்தாக்கள் ஏற்படுத்தல், ஆரம்பக் கல்வியை விருத்தி செய்தல், ஆஸ்பத்திரிகளை வைத்துப் பரிபாலித்தல் முதலிய காரியங்களைக் கவனிக்கிறார்கள். இந்த ஜில்லாவின் சுய ஆட்சி சபைக்குத் தேன் ஆற்காடு ஜில்லா போர்டு என்று பெயர். அந்தப் போர்டின் தலைமை அதிகாரிக்கு ஜில்லா போர்டு பிரஸிடேண்ட் என்று பெயர். ஜில்லா போர்டின்

ஆட்சியின் கீழ்ப் பல தாலூகா போர்டு சபைகள் இருக்கின்றன.

ஒரு ஜில்லாவிலே எத்தனை தாலூகாக்கள் இருக்கின்றனவோ, அத்தனை தாலூகா போர்டுகள் இருப்பது வழக்கம். தாலூகாக்கள் சிறியனவாயிருந்தால், இரண்டு தாலூகாக்களுக்கு ஒரு தாலூகா போர்டு இருக்கும். தாலூகா போர்டின் தலைமை அதிகாரிக்குத் தாலூகா போர்டு பிரஸிடெண்ட் என்று பெயர். தாலூகா போர்டு அங்கத்தினரும் ஜில்லா போர்டு அங்கத்தினரும் அந்தந்த இடங்களில் வரி கொடுக்கிறவர்களால் தேர்ந்து எடுக்கப்படுகிறார்கள்.

பெரிய நகரங்களில் முனிசிபாலிட்டிகள் உண்டு. அவற்றிற்கு நகரபரிபாலன சங்கம் என்றுபெயர். அச்சங்கத்தின் அங்கத்தினருக்கு முனிசிபல் கவுன்சிலர்கள் என்றுபெயர். முனிசிபல் கவுன்சிலர்களை அந்த அந்த நகரங்களில் வரி கொடுக்கிறவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்தக் கவுன்சிலர்கள் ஒன்று சேர்ந்து, அந்தச் சபையிலிருந்து ஒரு சேர்மனைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஜில்லா போர்டும் முனிசிபாலிடிகளும் செய்கிற எல்லா வேலைகளையும் அந்த அந்த நகரங்களிற் செய்கின்றன. முனிசிபாலிடியானது ஜில்லா போர்டின் அதிகாரத்திற்கு உட்பட்டது அன்று.

இங்ஙனம் நமக்குப் பல உரிமைகளைத் தந்து நீதியுடனும், அன்புடனும் பெற்றோரைப்போல் நம்மைப் பாதுகாத்து வருகின்ற நமது சக்கரவர்த்தியையும், சக்கரவர்த்தினியையும் ஆங்கில அரசாட்சியையும் மனங்களித்து வாழ்த்துவோமாக.


தென் ஆற்காடு ஜில்லா
ஸ்கேல் 1 அங் = 16 மைல்
செங்கற்பட்டு ஜில்லா
செஞ்சி
தாலூகா
திண்டிவனம்
தாலூகா
விழுப்புரம்
விழுப்புரம்
தாலூகா
திருக்கோவிலூர்
தாலூகா
கள்ளக்குறிச்சி
தாலூகா
விருத்தாசலம்
தாலூகா
சிதம்பரம்
தாலூகா
தாலூகா
புதுச்சேரி
திருச்சிராப்பள்ளி ஜில்லா
சேலத்திலிருந்து
திருவண்ணாமலையிலிருந்து
தஞ்சாவூர் ஜில்லா
கஞ்சாவூருக்கு
விருத்தாசலம்
சிதம்பரம்
திருக்கோவிலூர்
கள்ளக்குறிச்சி
ரிஷிவந்தியம்
மணிமுத்தாநதி
வெள்ளாறு
வீராணம் ஏரி
பரங்கிப்பேட்டை
கடலூர்
1200 அடி
600 அடி
கடல் மட்டம்
குறிப்பு
ஜில்லா எல்லை
தாலூகா எல்லை
ரயில் பாதை
வண்டிப் பாதை
மலைகள்
ஆறுகள்
பட்டணங்கள்
ஏரிகள்
R. S. NAIDU, MADURA.

ஜில்லா பூகோள வர்க்கம்.

இவை, பசுமலை உயர்தர கலாசாலை, போதனா முறைக் கலாசாலைகளின் உதவி ஆசிரியர் ஸ்ரீமத் நே. ரா. சுப்பிரமணிய சர்மா அவர்களால் எழுதப் பெற்றன. வித்தியா விதிகளை அனுசரித்துப் புதிய முறையில் இலகுவான நடையில் இவை தெளிவாக எழுதப்பெற்றுள்ளன; தமிழ் நாடு முழுவதும் பாராட்டப்பட்டு வருகின்றன.

மதுரை ஜில்லா பூகோள சாஸ்திரம்		5	அணா
இராமநாதபுரம் ஜில்லா	ஷை	5	,,
திருநெல்வேலி ஜில்லா	ஷை	5	,,
திருச்சிராப்பள்ளி ஜில்லா	ஷை	5	,,
தஞ்சாவூர் ஜில்லா	ஷை	5	,,
சேலம் ஜில்லா	ஷை	5	,,
கோயம்புத்தூர் ஜில்லா	ஷை	5	,,
வட ஆற்காடு ஜில்லா	ஷை	5	,,
தென் ஆற்காடு ஜில்லா	ஷை	5	,,
செங்கற்பட்டு ஜில்லா	ஷை	5	,,

பூகோள சாஸ்திரத்தின் முடிவில் அந்தந்த ஜில்லாவின் சரித்திரமும் அரசியலும் சேர்க்கப் பெற்றுள்ளன. இதர ஜில்லாக்களின் பூகோள சாஸ்திரம் விரைவில் வெளிவரும்.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

பிரிண்டர், பப்ளிஷர் & புக்ஸெல்லர்,

மதுரை.